
தர்மசக்கரம்



ரக்தாக்ஷி ௵ வைகாசி ௴ சக்கரம் 33 ஆரம் 5

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

குற்றாலத்தில் பருவ அந்தர்யோகம்

15—6—84 முதல் 15—8—84 முடிய

திருக்குற்றாலம் ஐந்தருவி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமத்தில் 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் தேதி முதல் ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி முடிய இரண்டு மாதங்களுக்கு கீழ்க்கண்ட சாதனை முறைப்படி அந்தர்யோகம் நடைபெறும். கடிதம் மூலம் குற்றாலத்துக்கு எழுதி முன்கூட்டி அனுமதி பெற்று ஒருவர் மூன்று தினங்களுக்குக் குறையாமலும், பத்து தினங்களுக்கு மேற்படாமலும் இந்த இரண்டு மாதங்களுக்கு நடைபெறும் அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளலாம். உணவுக்காக நாள் ஒன்றுக்கு ரூபாய் பதினைந்து வீதம் ஆச்ரமத்துக்கு வந்தபின் நேரில் செலுத்தினால் போதுமானது. படுக்கை வசதிக்குத் தேவையானதை உடன் கொண்டுவரவேண்டும். தாய்மார்களும் பருவ அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் தங்குவதற்குத் தனி இடவசதி இருக்கிறது. நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் 12 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளும் அந்தர்யோகத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
திருப்பள்ளியெழுச்சி, தியானம், நமஜபம்	4-30	5-15
ஐந்தருவி ஸ்நானம்	5-25	7-00
தியானம்	7-00	7-30
சிற்றுண்டி	7-30	
பஜனை	10-00	10-30
உபந்யாசம்	10-30	11-00
தியானம்	11-00	11-15
அர்ச்சனை, தீபாராதனை	11-15	11-30
உணவு	12-00	

மாலை

	மணிமுதல்	மணிவரை
பஜனை	3-00	3-30
உபந்யாசம்	3-30	4-00
தியானம்	4-00	4-15
சிற்றுண்டி	4-15	
நாமபஜனை, ஆரத்rிகம்	6-30	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-30	
சத் சம்பாஷணை	8-00	8-30

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
குற்றாலம்-627 802, (வழி) தென்காசி

சுவாமி ஸதானந்த
காரியதரிசி

ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல உயர்நிலைப்பள்ளி

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா.

இக்குருகுல உயர்நிலைப் பள்ளியில் 4, 5, 6, 7ஆம் வகுப்புகளில் மட்டும் புதிய மாணவர்களுக்கு, அவர்களுடைய உடல்நிலை, படிப்பு, வேறு இயல்புகள் இவற்றை நேரில் பரிசோதித்த பின் இடமளிக்கப்படும். புதிய மாணவர்களைச் சேர்க்க விரும்புவோர் **மே மாதம் 30ஆம் தேதி காலை 9 மணிக்குள்** மாணவர்களுடன் இங்கு வரவேண்டும். நுழைவுத் தேர்வுகள் அன்று நடத்தப்பெற்று தேர்வு முடிவுகள் அன்றிரவே அறிவிக்கப்படும். இதற்காக விண்ணப்பத்தாள் எதுவும் எழுதியனுப்ப வேண்டியதில்லை. மற்ற நாட்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. இலவசமாகவோ குறைந்த **செலவிலோ மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை. போதனாமொழி தமிழ்.** மேலும் விவரம் வேண்டுவோர் 75 பை. தபால்தலை அனுப்பி "வித்யாவன குருகுலச் சட்டதிட்டங்கள்" என்னும் புத்தகத்தைப் பெற்று விவரம் தெரிந்துகொள்ளுங்கள்.

S. ஈசுவரன்
தலைமை ஆசிரியர்

சித்பவானந்த
தலைவர்

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 33	ரக்தாக்ஷி ஸ்ரீ வைகாசி மீ	ஆரம் 5

பொருளடக்கம்

வருட சந்தா:	உள்நாடு	ரூ. 15-00	வெளிநாடு	ரூ. 45-00
தனி இதழ்	,,	ரூ. 1-50	,,	ரூ. 4-00

அந்தர்யோக விவரங்கள்

தென்ஆற்காடு ஜில்லா—ஏந்தலில் 18—5—84 வெள்ளிக்கிழமை

இடம்: தொடக்கப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—துரிஞ்சாபுரத்தில் 19—5—84 சனிக்கிழமை

இடம்: புஷ்பகிரி ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோவில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

வடஆற்காடு ஜில்லா—ஆம்பூரில் 20—5—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு நாகநாத சுவாமி ஆலய திருமணமண்டபம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

[தொடர்ச்சி பின் பக்கம் பார்க்க]

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

மதுரை ஜில்லா—பெரிய குளத்தில் 20—5—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பிரம்மஞானம் மந்திரம் பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

பகல் உணவிற்கு அவரவர்களே ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

தென்ஆற்காடு ஜில்லா—கண்டாச்சிபுரத்தில் 20—5—84 ஞாயிறு

இடம்: அரசினர் மேல்நிலைப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—சிவத்தையாபுரத்தில் 20—5—84 ஞாயிறு

இடம்: ஸ்ரீ முத்துமாலை அம்மன் இந்து தொடக்கப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

வடஆற்காடு ஜில்லா—குடியாத்தத்தில் 21—5—84 திங்கட்கிழமை

இடம்: வேதாந்தப் பாடசாலை

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—தேனியில் 23—5—84 புதன்கிழமை

இடம்: ஸ்ரீ கணேச கந்தபெருமாள் ஆலயம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

உணவு வசதி: பகல் உணவிற்கு ரு. 2-00 நேரில் செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 3—6—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண—விவேகானந்த தபோவனம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 10—6—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண—விவேகானந்த ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: பகல் உணவு ரு. 2-00; மாலைச் சிற்றுண்டிக்கு ரு. 1-00 நேரில் செலுத்தவும்.

மதுரை ஜில்லா—பேரையூரில் 10—6—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு மேலப்பரங்கிரி சுப்பிரமணிய சுவாமி ஆலயம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

உணவு வசதி: மதிய உணவுக்கு பணம் செலுத்திச் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33	ரக்தாக்ஷி ௵ வைகாசி ㎡	ஆரம் 5

பிரார்த்தனை

यस्तु सर्वाणि भूतान्यात्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥

— ईशावास्योपनिषद्

யஸ்து ஸர்வாணி பூதான்யாத்மன்யேவானுபச்யதி ।
ஸர்வபூதேஷு சாத்மானம் ததோ ன விஜுகுப்ஸதே ॥

— ஈசாவாஸ்யஉபநிஷத்

உயிர்களனைத்தையும் பரமாத்மன் உருவத்தில் காண்பவனுக்கு எதனிடத்திலும் வெறுப்பு உண்டாவதில்லை.

ஊழியும் இன்பமும் காலமாகி உயருந் தவமாகி
ஏழிசை யின்பொருள் வாழும்வாழ்க்கை வினையின்புணர்ப்பாகி
நாழிகை யும்பல ஞாயிறுகி நளிர்நாரை யூர்தன்னில்
வாழியர் மேதகு மைந்தர்செய்யும் வகையின் விளைவாமே.

— சம்பந்தர் தேவாரம்

அருள் விருந்து

தெளிவுறச் சிந்தித்துப் பழகுபவன் பாக்கியவான்.

தன் கடமையைச் சுயநலமற்று நிறைவேற்றுவதே துறவாகிறது.

இந்த உலகிலே இன்ப துன்பங்கள் இரண்டும் நிலையற்றனவாம்.

ஆத்ம சுகம் வேண்டுபவர்கள் அற்ப சுகத்தைத் துறத்தல் வேண்டும்.

உடலைத் தேவாலயமாகக் கருதுமளவுக்கு அது நல்லதொரு கருவியாகிறது.

நன்னெறியில் நிலைத்திருப்பவன் பரஞானத்துக்குத் தகுதி உடையவனாகிறான்.

பரநாட்டத்தில் நிலைத்திருக்கத் திரிகரணங்களும் திருந்தி அமைதல் வேண்டும்.

தூய அன்பனுக்கு எதிரிகள் இல்லை; அவன் அனைவரையும் ஒரே பாங்கில் நேசிக்கிறான்.

அடிமரம் ஒன்று; அதன் கிளைகள் பல அங்ஙனம் அறநெறி ஒன்று; அதன் விளக்கங்கள் பல.

உள்ளத்திலுள்ள தெய்வ சான்னித்தியத்தோடு உறவாடக் கற்றுக்கொள்பவன் பாக்கியசாலி.

இறைவனருளைப் பெறுதற்பொருட்டு ஆருயிர்களுக்கெல்லாம் அன்புடன் பணிவிடை செய்து வருவாயாக.

வெறும் சமய அனுஷ்டானம் கழுத்தில் தாயத்தைக் கட்டிக் கொள்வதற்கு நிகர்; அதில் பயன் ஏதும் இல்லை.

தீமையினின்று மனிதன் நல்ல பாடம் கற்கிறான்; அங்ஙனம் கற்றவன் மீண்டும் அத்தீமையில் ஈடுபடலாகாது.

வீணே நெடுங்காலம் வாழ்ந்திருப்பதைவிடப் பரநாட்டத்தில் கருத்தைச் செலுத்திச் சில நாள் வாழ்ந்திருப்பது சிறந்தது.

அறநெறி பிறழாது வாழ்ந்திருப்பவன் அந்தக்கரண சுத்தி அடைகிறான்; அவன் பேச்சு உறுதிப்பாடோடு கூடியது. அவன் மொழி மற்றவர்களுக்கு உயிரூட்டுகிறது.

அருள் நாட்டம் படைத்திருப்பவனுடைய ஆர்வத்தை அனுசரித்து அவனுக்கு விவேகம் ஒருநொடிப்பொழுதில் வரலாம்; அல்லது நெடுங் காலத்திற்குப் பிறகு வரலாம்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் பக்தர்களோடு உரையாடிக்கொண்டிருக்கிருர். இப்போது சம்பாஷணை கடவுள் அழிவிலாப் பொருள் என்பதைப்பற்றியதாக வடிவெடுத்தது.

நரேந்திரன்: "கடவுள் அழிவற்றவர் என்பதற்கு அத்தாட்சி யாது உளது?"

கிரீஷர்: "அதைப்பற்றிப் பேசிப் பயன் யாது உளது? கடவுள் நேரே வந்து சொன்னலும் அக்கூற்றை நீ ஏற்றுக்கொள்ளமாட்டாய்."

நரேந்திரன்: "சிரஞ்சீவியாக வாழ்கின்ற தேவர்கள் விண்ணுலகில் இருக்கிருர்கள் என்று பகர்வார் உளர். ஆனல் அதற்கு அத்தாட்சி யாது இருக்கிறது?"

இப்பொழுது பால்த்துவிடம் அடங்கிய குரலில் மகேந்திரர் யாதோ உரைத்தார்.

பால்த்து புன்னகை பூத்தவனுக நரேந்திரனிடம் இயம்பியதாவது:

"விண்ணுலகில் வாழும்தேவர்கள் அழிவற்றவர்கள் என்று நிரூபிப்பதற்கு வேறு உபாயம் ஒன்றும் தேவையில்லை. அவர்களுக்கு அழிவு கிடையாது. ஆகையினல் அவர்களுக்குத் துவக்கமும் இல்லை."

பரமஹம்சதேவர் புன்னகையுடன் பகர்ந்ததாவது: "நரேந்திரனே நீதி மன்றத்தில் வழக்காடும் வக்கீல் ஒருவருடைய மகன். இனி, பால்த்து என்பவன் ஒரு டெபுடி மாஜிஸ்ட்ரேட்டின் மகனுக இருக்கின்ருன்." (இதைக் கேட்டு எல்லாரும் நகைத்தார்கள்.)

அங்குச் சிறிதுநேரம் மௌனம் நிலவியது.

யோகேந்திரன்: "நரேந்திரன் பகர்கிற கருத்துக்கள் அனைத்தையும் இக்காலத்தில் பரமஹம்சதேவர் ஏற்றுக்கொள்வதில்லை."

பரமஹம்சதேவர்: "ஒருநாள் நான் இயம்பியதாவது:

'சாதகப்பறவை வானத்திலிருந்து வரும் மழை நீரைத் தவிர வேறு எதையும் அருந்துவதில்லை.' அதற்கு நரேந்திரன் கொடுத்த விடையாவது: 'இல்லை, மண்ணுலகில் உள்ள நீரையும் அப்பறவை அருந்துகிறது.' அவன் கொடுத்த இந்த ஆக்ஷேபம் ஒருவாறு என் உள்ளத்தில் கலக்கத்தை உண்டுபண்ணியது. அப்போது நான் அம்பிகையிடம் பகர்ந்ததாவது: 'தாயே! நரேந்திரன் இப்படி இயம்புகின்ருனே? அப்படியானல் நான் பகர்ந்ததில் உண்மை ஏதும் இல்லாதுபோயிற்ரு?'

சில நாட்களுக்குப் பிறகு நரேந்திரன் மீண்டும் இங்கு வந்திருந்தான். அப்போது அறைக்குள் பறவைகள் சில பறந்துகொண்டிருந்தன. நரேந்திரன் அவைகளைச் சுட்டிக்காட்டி, 'அதோ பாருங்கள், சாதகப்பறவைகள் இங்கு சுற்றிப் பறந்துகொண்டிருக்கின்றன. இவைகள் தாம் தாங்கள் பகர்கின்ற சாதகப் பறவைகள்' என்று இயம்பினன். அவற்றை நான் ஆராய்ச்சி செய்து பார்த்தபொழுது அவை வெறும் வௌவால்கள் என்பது வெளியாயிற்று. அது முதல் நரேந்திரன் கூற்று முற்றிலும் உண்மையன்று என்னும் முடிவுக்கு நான் வந்தேன்.

"யது மல்லிக்கர் வீட்டில் நான் நரேந்திரனை மற்ருருமுறை சந்தித்தேன். அப்போது அவன் இயம்பியதாவது: 'கடவுளுக்கு உருவம் இருக்கிறது என்று தாங்கள் பகர்கின்றீர்கள். அது உங்களுடைய வெறும் மனே கற்பனையேயாம்.' நரேந்திரன் இவ்வாறு பகர்ந்தது குறித்து நான் திகைத்தேன். 'நான் காண்கின்ற தேவரிஷிகள் என்னேடு பேசுகின்ருர்களே?' என்றும் நான் பகர்ந்தேன். 'அவ்வாறு பேசுவதும் வெறும் கற்பனையே' என்று அவன் அதற்கு விடை விடுத்தான்.

உடனே நான் அம்பிகையின் சன்னிதிக்கு ஓடினேன். ஆங்குக் கண்ணீரும் கம்பலையுமாக அம்பிகையிடம் நான் செய்த பிரார்த்தனையாவது: 'தாயே! நான் உன்னைக் காண்பதும் உன்னுடன் உரையாடுவதும் என்னுடைய வெறும் மனக்கற்பனை என்று நரேந்திரன் பகர்கின்ருனே? அப்படியானல் நான் காண்கின்ற காட்சியும் நீ என்னுடன் பேசுவதும் எல்லாம் வெறும் கற்பனைதானே?'

"உடனே அன்னை பராசக்தி எனக்குத்

தெளிவுறுத்தியதாவது: அகண்ட சைதன்ய சொரூபம் ஒன்று என் காட்சிக்குப் புலனாகியது. அவ்வாறு வடிவெடுத்த மூர்த்தி என்னிடம் இயம்பியதாவது: 'நீ காண்பதும் பேசுவதும் உண்மையல்ல என்றால் அவை தத்துவத்துக்கு ஒத்திருக்கின்றனவே? அதற்கு நீ என்ன சொல்கின்றாய்?' உடனே நரேந்திரனிடம் நான் ஓடிவந்து பகர்ந்ததாவது: 'அடே சிறுவா! நீ விஷயம் தெரியாது உளறுகின்றாய். அம்பிகை பகர்வதும் நீ உரைப்பதும் ஒன்றுக்கொன்று ஒத்துவரமாட்டா. வெறும் வாய்ப்பேச்சுக்காரனாகிய நீ இங்கு இனி வரவேண்டாம்.''

சம்பாஷணை மேலும் தொடர்ந்து நடைபெறுவதாயிற்று. நரேந்திரன் தன் கருத்துக்களைத் தாராளமாகத் தெரிவித்து வந்தான். அவனுக்கு அப்பொழுது வயது சுமார் இருபத்திரண்டு இருந்தது.

கிரீஷர், மகேந்திரர் முதலியவர்களிடம் நரேந்திரன் பகர்ந்ததாவது: ''சாஸ்திரங்களில் நம்பிக்கை வைக்கவேண்டுமென்று ஆணை பிறந்துள்ளது. ஆனால் நான் அவைகள்மீது எங்ஙனம் நம்பிக்கை வைப்பது? மஹாநிர்வாண தந்திரத்தில் ஓரிடத்தில், பிரம்ம ஞானம் அடையப்பெறாதவன் நரகத்திற்குப் போகிறான் என்று இயம்பப்பட்டிருக்கிறது. அதே நூலில் மற்றோரிடத்தில் பார்வதி தேவியை வணங்காதவனுக்கு விமோசனம் இல்லை என்றும் இயம்பப்பட்டிருக்கிறது. மனுஸம்ஹிதையில் மனுவானவர் தம்மைப் பற்றியே பெருமைப்படுத்திக் கொள்கிறார். யூதர்களுக்குச் சொந்தமாயுள்ள பழைய ஏற்பாட்டில் மோஸஸ் தம்முடைய மரணத்தைப் பற்றியே விளக்குகின்றார்.

''கடவுள் இருக்கிறார் என்பதற்குப் பிரமாணம் இல்லாததால் கடவுள் என்னும் பொருள் இல்லை என்று சாங்கிய தரிசனம் இயம்புகிறது. அதே சாஸ்திரம் இயம்புவதாவது: வேதங்கள் சாசுவதமானவை; ஆகையினால் அவைகள்மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.

''இக்கோட்பாடுகளை நான் அறவே மறுப்பவனல்லேன். அவைகளின் உட்கருத்தை உள்ளவாறு அறிந்துகொள்ள எனக்கு இயலுவதில்லை. கூடுமானால் நீங்கள் அவைகளை எனக்கு விளக்கித்தருவீர்களாக. அவரவர்க்குத் தோன்றிய பிரகாரமெல்லாம் மக்கள் வேதங்களுக்கு வியாக்கியானம் சொல்லி வருகிறார்கள். அவைகளுள் எதை ஏற்பது, எதை நிராகரிப்பது என்பது நமக்கு விளங்குவதில்லை.

''சூரிய வெளிச்சம் சிவப்புக் கண்ணாடியின் மூலமாக வருகிறபொழுது சிவப்பு நிறமுடையதாகத் தென்படுகிறது. பின்பு பச்சைக் கண்ணாடியின் மூலமாக வருகிறபொழுது அதே வெளிச்சம் பச்சை நிறமாய்த் தென்படுகிறது.''

ஒரு பக்தர்: ''கீதையில் அடங்கியிருக்கும் கோட்பாடுகள் பகவானுடைய கருத்துக்களாம்.''

பரமஹம்சதேவர்: ''ஆம் பகவத்கீதையானது சாஸ்திரங்கள் அனைத்தின் சாரமாகிறது. துறவி ஒருவன் தன்னோடு வேறு எந்தப் புத்தகத்தையும் வைத்துக்கொள்ளாதிருப்பதில் தோஷமில்லை. ஆனால் பகவத்கீதையின் பிரதி ஒன்றைத் தன்னோடு வைத்திருக்க அவன் கடமைப்பட்டிருக்கிறான்.'

ஒரு பக்தர்: ''கிருஷ்ணபகவானுடைய கருத்துக்கள் கீதையில் அடங்கியிருக்கின்றன.''

நரேந்திரன்: ''ஆம், அந்நூலை இயம்பியவன் கிருஷ்ணனாக இருக்கலாம். அல்லது வேறு யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். இயம்பப்படுவது அனைத்தும் தத்துவத்துக்கு ஒத்திருக்கவேண்டும். நாம் வேண்டுவது அதுவே. இயம்புகிற மனிதனைப் பற்றிய ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை."

நரேந்திரன் இங்ஙனம் இயம்பியது பரமஹம்சதேவரைத் திடுக்கிடச் செய்தது.

பரமஹம்சதேவர்: ''இத்தகைய சம்வாதத்தில் பயன் மிக உளது. சாஸ்திரங்களுக்கு இரண்டு வியாக்கியானங்கள் இருக்கின்றன. ஒன்று வாச்சியார்த்தம். மற்றது லட்சியார்த்தம். இவ்விரண்டனுள் லட்சியார்த்தத்தையே சாதகன் ஏற்றுக்கொள்ளவேண்டும். லட்சியார்த்தம் யாண்டும் தத்துவத்துக்கு ஒத்தது. தத்துவத்துக்கு ஒத்ததையே கடவுளுடைய வாக்கு என நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஏதோ கருத்துக்கள் சிலவற்றை மானுடன் ஒருவன் எழுத்தின் மூலமாகத் தெரிவிக்கிறான். அதே கருத்துக்களைப் பிறகு தானே தன் வாயை விட்டு இயம்புகின்றான். இவை இரண்டுக்கும் இடையில் வித்தியாசம் மிக உளது.

சாஸ்திரங்கள் எனப்படுபவைகள் எழுதி வைத்துள்ள கருத்துக்களுக்கு நிகரானவை. பின்பு தத்துவங்களோ கடவுளின் கருத்தோடு ஒத்திருக்கின்றன. அன்னை பராசக்தி தத்துவங்களை எல்லாம் எனக்குப் பகர்ந்தருள்கின்றாள். அப்படி அன்னை பகர்வதற்குப் புறம்பானது எதையும் நான் ஏற்றுக்கொள்வதில்லை.''

சம்பாஷணை மீண்டும் ஈசுவரனுடைய அவதாரத்தைப்பற்றியதாக வடிவெடுத்தது.

நரேந்திரன்: ''கடவுளின் மீது நம்பிக்கை வைப்பது போதுமானது. அவர் என்னென்னவெல்லாம் செய்துகொண்டிருக்கின்றார். எங்கே எப்படி வீற்றிருக்கிறார் என்பதைப்பற்றி நான் அக்கறைகொள்வதில்லை. அண்டங்கள் அகண்டாகாரத்தில் விரிந்தோடுகின்றன. அத்தகைய அண்டங்களாகவும் அதில் வாழ்ந்திருக்கின்ற உயிர் வகைகளாகவும் ஈசன் தானே அவதரித்துள்ளார். ஆதலால் ஈசனுடைய அவதாரங்களும் அகண்டாகாரத்தில் விரிந்தோடுகின்றன."

நரேந்திரன் இங்ஙனம் இயம்பியபொழுது கைகூப்பிய வண்ணமாக இருந்துகொண்டு பரமஹம்சதேவர் 'ஆ' என்று வியந்தார்.

இப்பொழுது மகேந்திரர் பவநாத்தினுடைய காதில் ஏதோ முணு முணுத்தார்.

மகேந்திரநாதர்கொண்டிருந்த கருத்தைப் பவநாதன் இங்ஙனம்இயம்பினான்: ''யானையை நான் பார்த்ததில்லை. அந்த நிலையிலுள்ள நான் யானை ஒன்று ஊசியின் காது வழியாகச் செல்லக்கூடும் என்னும் கோட்பாட்டை நம்புவது எப்படி? கடவுளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அந்த நிலையிலுள்ள நான் அவர் மனிதனாக அவதரித்து வருகிறார் என்பதை நம்புவது எப்படி?''

பரமஹம்சதேவர்: '' கடவுளுக்கு அனைத்தும் சாத்தியம்; மந்திரத்தைப் போடுபவரும் அவரே. மாந்த்ரீகன் ஒருவன் கத்தி ஒன்றை விழுங்குகிறான்; பின்பு அதைத்தன் வாயினின்று வெளியே கொண்டு வருகின்றான். கற்களையும் செங்கற்களையும் அவன் விழுங்குகின்றான். வயிற்றுக்குள் போன பிறகு அக்கற்கள் உடைபட்டுப் போகின்றன."

ஒரு பக்தர்: ''பிரம்ம சமாஜத்தவர்கள் மானுடன் ஒருவன் தனக்கு அமைந்துள்ள உலகக் கிருத்தியங்களை முறையாகச் செய்து சாதிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். கர்மத் தியாகம் பண்ணுவது மனிதனுக்கு முறையன்று என்றும் அவர்கள் மொழிகின்றார்கள்.''

கிரீஷர்: ''சுலப சமாச்சாரம் என்னும் பத்திரிகையில் அத்தகைய கோட்பாடு ஒன்று வெளியாயிருந்ததை நான் பார்த்திருக்கிறேன். மனிதன் பகர்கின்ற காரியங்கள் அனைத்தையும் செய்து சாதிப்பதற்குப் போதுமான அவகாசம் இல்லை. அவை யாவற்றையும் செய்து முடித்த பின்பே அவன் கடவுளைப் பற்றிச் சிறிதளவாவது அறிந்துகொள்ள வல்லவனாகிறான். இத்தகைய பரிதாபகரமான நிலையிலுள்ள மனிதன் தனக்கேற்பட்டுள்ள உலகக்கிருத்தியங்களைச் செய்துவிட வேண்டும் என்று துணிந்து சொல்கின்றான்."

இப்போது பரமஹம்சதேவர் புன்னகை பூத்தவராக மகேந்திரரைப் பார்த்தார். அப்படிப் பார்த்தவர் சிறிது கண் சிமிட்டவும் செய்தார். அதாவது, 'கிரீஷர் பகர்வது முற்றிலும் பொருத்தமானது'என்பதை அங்கீகரித்ததற்கு அறிகுறியாக அவர் அங்ஙனம் கண் சிமிட்டினார்.

அவரவர் கடமையை நிறைவேற்றியாக வேண்டும் என்னும் கோட்பாடு மிகக் கடினமானது என்று மகேந்திரர் அறியலானார். ஏனென்றால் கடமைகளுக்கு முடிவில்லை. குடும்பக்கடமைகள், நாட்டுக் கடமைகள் என்பன இருக்கின்றன. குடும்பக்கடமைகளுள் பெற்றோர்க்குச் செய்யவேண்டிய கடமைகள், பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள், மனைவிக்குச் செய்யவேண்டிய கடமைகள், சகோதர சகோதரிகளுக்குச் செய்யவேண்டிய கடமைகள், உற்றார், உறவினருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் போன்ற உட்பிரிவுகளிருக்கின்றன. இங்ஙனம் ஒருவன் செய்ய வேண்டிய கடமைகள் முடிவில்லாது போய்க் கொண்டே இருக்கின்றன. கடலில் ஓர் அலை ஒடுங்கும் முன்பு மற்றோர் அலைதோன்றுகிறது. அங்ஙனம் உடல் எடுத்திருக்கிற மனிதனுக்குக் கடமைகளும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. ஆதலால் ஏதேனும் ஓரிடத்தில் கர்மத்துக்கு முற்றுப்புள்ளிவைத்தாக வேண்டும் என்பது கோட்பாடு.

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

11-6. கள்ளன்இவன் என்றுமெள்ளக் கைவிடுதல் காரியமோ

வள்ளலே என்று வருந்துநாள் எந்நாளோ.

கடலில் செல்கின்ற கப்பல் ஒன்று புயலில் அகப்பட்டுக்கொள்கிறது. ஆதலால் அது சுழன்று சுழன்று திண்டாடுகிறது. ஆயினும் அக்கப்பலில் அமைத்து வைக்கப்பட்டுள்ள திசைகாட்டிக் காந்த ஊசி வடதிசையை நோக்கி நிற்கின்றது. கப்பல் எவ்வளவுதான் சுழன்றாலும் அந்தத் திசைகாட்டி ஊசி வட திசையை விட்டு மாறுவது இல்லவே இல்லை. அங்ஙனம் மனிதன் ஒருவனுக்கு வாழ்க்கையில் நெருக்கடி நேரிடலாம். ஆனால் அதை முன்னிட்டுத் தன் கொள்கையினின்று அவன் தளர்வுறுதல் தகாது. உறுதிப்பாடுடன் வாழ்க்கையில் தான் கொண்டுள்ள நோக்கத்தை நிறைவேற்றுதலிலேயே அவன் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும்.

இக்கோட்பாட்டுக்குமாறாகநடந்துகொள்ளும் மாந்தர் உலகில் உளர். காலத்துக்கேற்ற கோலம் போடுவது அன்னவர் போக்காகும். நல்லாரோடு இணங்கியிருக்கின்றபொழுது பக்தி நாட்டம் உடையவர் போன்று அன்னவர்கள் நடந்துகொள்வார்கள். மற்று உலகப் பற்று உடையவர்களோடு சேர்ந்திருக்கும் சமயம் வந்தமையும்காலை பக்தியும் கடவுள் நாட்டமும் அவர்கள் மனதினின்று மாயமாய் மறைந்து போகின்றன. உலகத்தவர்களுடைய பாங்கே அப்பொழுது அவர்களிடம் வெளியாகிறது. அன்னவர்களை அருள் துறையில் கூடியுள்ள கள்வர்கள் எனக் கூறுவது பொருந்தும். கள்ளன் ஒருவன் நல்லவன் போன்று நடந்துகொள்கின்றான். சந்தர்ப்பம் வாய்க்கின்றபொழுதுதான் தன்னிடம் உள்ள திருட்டுத் தனத்தை அவன் பயன்படுத்துகிறான். திருட்டுத்தனத்தைப் பயன்படுத்துவது ஏதோ சில வேளைகளில்தான். பெரும்பான்மையான நேரமெல்லாம் நல்லவன் போன்றே கள்ளன் ஒருவன் நடந்துகொள்கின்றான்.

இறைவா! இத்தகைய பொல்லாங்கு என்னிடத்து இல்லை. உன்னுடைய அருளுக்குப் பாத்திரமாகாது போய்விடினும் பொய் வேஷம் என்னும் பொல்லாங்குக்கு நான் ஆளாகமாட்டேன். சாதகப் பறவை ஒன்று வானத்தில் வசித்து வருகிறது. எக்காரணத்தைக்கொண்டும் அது மண்ணுலகுக்குக் கீழே இறங்கி வருவதில்லை. தாகம் உண்டானால் வானத்தினின்று பொழியும் மழை நீரைமட்டும் அது அருந்தும். அதே போன்று நல்ல பக்தன் ஒருவன் பரம்பொருளின் அருளை நாடி நிற்கின்றான். அந்த அருள் தனக்கு வாய்க்காவிடின் அதை முன்னிட்டு உலக இன்பத்தைக் கண்ணெடுத்தும் பாரான். இறைவா! அத்தகைய தூய நிலையில் நான் இருக்கிறேன் என்பதை உன்னிடம் சமர்ப்பிக்கின்றேன். நீயே வள்ளல் தன்மை வாய்ந்தவன். கேட்கிறவர்களுக்குக் கேட்பதைக் கரவாது எடுத்து வழங்கும் பாங்குடையவன். அத்தகைய நீ என்னைப் புறக்கணித்துவிட வேண்டாம் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

11-7. விண்நாடர் காணா விமலா பரஞ்ஜோதி

அண்ணாவா வாஎன்று அரற்றுநாள் எந்நாளோ.

இந்திரியங்களுக்குத் தேவர்கள் என்பது ஒரு பெயர். ஆத்ம சாதனத்தினின்று ஊற்றெடுத்து வரும் பேரின்பத்தை இந்திரியங்கள் அறிந்துகொள்ளமாட்டா. கவிதை ரசத்துடன் இந்திரியங்களுக்கெட்டாத பேரின்பம் ‘ விண்நாடர் காணா’ என்று இக்கண்ணியில் இயம்பப்படுகிறது. பரமனுடைய அருளும் என் உள்ளத்தினின்று உதித்துவரும் பேரின்பமும் பக்தர்களுக்கு வாய்க்கின்றன. மண்ணுலகில் வாழ்ந்திருப்பவர்களைவிட மேலோர் விண்ணுலகில் வாழ்ந்திருப்பவர்கள். அதே விதத்தில் உடலைவிடமிக்கவைகளாக அதில் அமைந்துள்ள இந்திரியங்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும் இந்த இந்திரியங்களுக்குப் பரமனிடத்து அமைந்துள்ள புனிதம் புலனாகாது. விமலன் என்பது மல ரஹிதன் என்று பொருள்படுகிறது. பிரபஞ்சப் பொருள்கள் ஒன்றோடொன்று சேரும்பொழுது ஒன்று மற்றொன்றைப் புனிதம் இழக்கும்படி செய்கிறது. சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். ஆவின்

பால் சுத்தமானது. கங்காஜலம் சுத்தமானது. இவ்விரண்டு பொருள்களும் தம்மளவில் சுத்தமானவைகள் எனினும் கங்கையும் ஆவின் பாலும் ஒன்று சேர்க்கப்படுகின்றபொழுது ஒன்று மற்றென்றை மலினப்படுத்துகிறது. அவ்விரண்டும்கூட்டுப்பொருளாகின்றபொழுது அது சுத்த கங்கையுமன்று, தூய பசுவின் பாலும் அன்று. இத்தகைய நெருக்கடி பிரபஞ்சப்பொருள்களுக்கு உண்டு. பரமனே பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டவன். பிரபஞ்சத்திலுள்ள எதுவும் அவனை வந்து மலினப்படுத்தமாட்டாது. ஆதலால் 'விண்நாடர் காணு விமலா' எனப் பரமன் பாராட்டப்படுகின்றான்.

ஜோதியில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று இப்பிரபஞ்சம் சம்பந்தமானது. சூரியன், சந்திரன், நட்சத்திரம், மின்னல், அக்னி ஆகியவைகள் இப்பிரபஞ்சம் சம்பந்தமான ஜோதிகளாகின்றன. இவைகளுக்குத் துவக்கமும் முடிவும் உண்டு. ஆகையினால் இவைகள் ஜோதிகள் என்று உபசாரத்துக்காகப் பாராட்டப்படுகின்றன. போற்றுதற்குரிய ஜோதி பரஞ்ஜோதி ஒன்றே. பரமன் யாண்டும் தன்மயமாய் இருந்துகொண்டு பரமானந்தத்தில் ஊறியிருக்கிறான். ஆத்மசாதகன் நாடுதற்குரிய ஜோதி அத்தகைய பரஞ்ஜோதியேயாம். அது அணையாவிளக்கு என்றும் தூண்டாவிளக்கு என்றும் பகரப்படுகிறது.

உயிர்கள் அனைத்துக்கும் உற்ற துணையாயிருப்பவன் பரமன். ஆகையினால் அவன் அண்ணா என்று பக்தர்களால் உரிமை பாராட்டப்படுகின்றான். அண்ணா என்னும் சொல் மூத்தவன் எனப் பொருள்படுகின்றது. உலக நடைமுறையில் உடன் பிறந்தவர்களுக்குள் மூத்தவனை இளையவன் அண்ணா என்று அழைப்பது முறை. அதே சொல் தந்தைக்கும் உரியதாகின்றது.உற்றார் உறவினருள் எல்லாருக்கும் மூத்தவனாயிருப்பவன் அண்ணா என்று அழைக்கப்படுகின்றான். இனி, பரமனே பிரபஞ்சத்திலுள்ள உயிர்கள் அனைத்துக்கும் மூத்தவனாகவும் அவ்வுயிர்கள் அனைத்தையும் காப்பாற்றுபவனாகவும் இருக்கிறான். ஆதலால் அண்ணா என்னும் சொல் சிறப்பாகப் பரமனுக்கு உரியதாம்.

'வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாம்' என்பது கோட்பாடு. அழுகையில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அழிந்துபட்டுப் போகின்ற உலகப்பொருள்களை நாடி அழுவது ஒன்று. யாண்டும் சாசுவதமாய் உள்ள பரம்பொருளை நாடி அழுவதுமற்றொன்று. அரற்றல் என்னும் சொல் பரநாட்டத்துக்கே உரியதாம். இவை இரண்டும் முறையே ராவணாகார அழுகை என்றும், ருத்ராகார அழுகை என்றும் பகரப்படுகின்றன. ராவணாகார அழுகை முற்றிலும் இவ்வுலக சம்பந்தமானது. போகம், பதவி, பேர், புகழ் ஆகியவைகளை நாடி அழுவது ராவணாகார அழுகையாம். இவைகளை நாடி அழுவதன் மூலம் ஜீவன் மேலும் மேலும் கீழ்மையுறுகிறான். இதற்கு நேர்மாறானது ருத்ராகார அழுகை. இறைவா! உன்னிடத்து மாறாத பக்தி வேண்டும். உலகப்பொருள்களிடத்திலே வைராக்கியம் வேண்டும். அவை யாவும் பிரபஞ்சத்துக்கு உரியவை. பரநாட்டத்துக்கும் அவைகளுக்கும் வெகுதூரம் என்று உலகப் பொருள்களை ஒதுக்கி வைப்பது விவேகம். அத்தகைய விவேகம் வேண்டும், பரமனுக்குரிய ஞானம் வேண்டும். இத்தகைய வேட்கை முழுதும் ருத்ராகார அழுகைக்குரியதாம். எனவே, ருத்ராகார அழுகையில் ஈடுபட்டிருப்பது பாராட்டத்தக்கது.

இத்தகைய பரநாட்டம் வாய்ப்பது அரிதிலும் அரிதாம். அது வந்த பிறகு ஜீவன் பிரபஞ்ச நாட்டத்தில் ஒருநாளும் கருத்தைச் செலுத்தமாட்டான். பரநாட்டம் வாய்க்கும் நாளே நல்ல நாள். வள்ளலாகிய தாம் தம்மையே கேட்பவர்களுக்கு எடுத்து வழங்க வல்லவர். மற்று நான் கேட்பது வெறும் தம்முடைய அருள் மட்டுமே. இதை எடுத்து வழங்குதல் வள்ளலாகிய தமக்கு அரிதன்று. கிருபை கூர்ந்து நான் நாடுவதைக் கொடுத்தருள்வீராக. நான் என் உள்ளத்தை அருள் நாட்டம் உடையதாகச் செய்து உன் அருளைப் பெற்றுவிட்டால் அந்நாள் என் வாழ்நாளில் ஒப்பற்ற நாளாகும். அந்த நாளை இறைவா, நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அத்தகைய நல்லநாள் ஆத்மசாதகனுக்கு அதிவிரைவில் வாய்க்கவேண்டும் என்பதே இக்கண்ணியின் உட்பொருளாம்.

வெற்றிக்கு வித்து மூன்று

(சுவாமி விவேகானந்தர்)

பெரிய காரியங்களை நிறைவேற்ற மூன்று பேரியல்புகள் நமக்குத் தேவைப்படுகின்றன. முதல் முதலாக மனப்பூர்வமான உணர்வு தேவை. உங்கள் உள்ளத்தில் நல்லுணர்வு இருக்கின்றதா? தெய்வாம்சம் குடிகொண்டுள்ள ரிஷிவம்சத்தில் வந்த கோடிக்கணக்கான மக்கள் விலங்கைக் காட்டிலும் கேவலமான நிலையில் இருக்கின்றனர் என்பதைப்பற்றி உங்கள் உள்ளம் உணர்கின்றதா? இன்றைக்குப் பட்டினி கிடக்கும் மக்களைக் குறித்து உங்கள் உள்ளத்தில்உணர்ச்சி ஏற்படுகின்றதா? அவ்வுணர்ச்சியால் பாதிக்கப்பட்டு நீங்கள் அமைதி அற்றவர்கள் ஆய்விட்டீர்களா? தூக்கத்தைத் துறந்துவிட்டீர்களா? உங்கள் நாடி நரம்பெல்லாம் அந்த உணர்ச்சி பரவி உங்கள் ரத்தத்தில் அவ்வுணர்ச்சி கலந்து உங்கள் இதயத் துடிப்பு ஒவ்வொன்றும் அவ்வுணர்ச்சியை வெளிப்படுத்துகின்றதா? அவ்விஷயத்தில் நீங்கள் பைத்தியக்காரர்கள் ஆய்விட்டீர்களா? மக்களின் துயரங்களால் உங்கள் உள்ளம் பிடிக்கப்பட்டுப் பேர், புகழ், மனைவி, மக்கள், சொத்து, சுகம், உங்கள் சரீரம் அனைத்தையும் நீங்கள் மறந்துவிட்டீர்களா? இதை நீங்கள் முதலில் செய்யுங்கள். இத்தகைய மனநிலையைப் பெறுவதுதான் தொண்டு செய்வதற்கு முதற்படியாகும். உங்களுடைய சக்தி எல்லாம் வீண் பேச்சுக்களில் செலவிடாமல் மக்களின் துயரத்தைத் தணிப்பதற்கு, கேட்டிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு, நடைமுறைக்குச் சாத்தியமானமுறையில் ஒரு வழியை கண்டுபிடிப்பதற்குச் செலவழிப்பீர்களா? அடுத்து, நீங்கள் எத்தகைய தடைகளையும் எதிர்த்து நிற்கும் மனவலிமை பெற்று இருக்கிறீர்களா? உலகம் முழுவதுவும் உங்கள் செயலுக்கு எதிராகக் கையில் வாளை ஏந்திக்கொண்டு நின்றாலும் நீங்கள் சரி என்று நினைக்கும் காரியத்தைச் சற்றும் பின்வாங்காமல் செய்வதற்கு உங்களிடம் தைரியம் இருக்கிறதா? எதிர்ப்புகளை எல்லாம் மீறி இலட்சியத்தை நோக்கி உறுதியுடன் சென்றுகொண்டு இருப்பீர்களா? இத்தகைய உறுதிப்பாடு உங்களிடம் இருக்கிறதா? உலகின் துயரத்தைக் கண்டு துடிக்கும் உள்ளம், சரியான வழி கண்டு பிடிப்பதில் ஆர்வம், கண்டுபிடித்த சரியான வழியில் உறுதியுடன் உழைத்தல், ஆகிய மூன்றும் உங்களிடம் இருக்குமானால் நீங்கள் ஒவ்வொருவரும் அற்புதமான செயலைச் செய்து முடிப்பீர்கள்.

என் வீர இளைஞர்களே! உத்தம குணம் வாய்ந்த நல்லோர்களே, தேசமுன்னேற்றம் என்ற தேர்ச்சக்கரத்தைத் தள்ளுவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். செயலில் இறங்குங்கள். இலட்சியத்திற்காகப் பாடுபடுங்கள். பேர், புகழ் போன்ற அற்ப விஷயங்களைத் திரும்பியும் பார்க்காதீர்கள். சுயநலத்தைத் தூர எறிந்துவிட்டுப் பரநலத்தொண்டில் உங்களை முழுவதும் ஈடுபடுத்துங்கள்.

என் அருமைக் குழந்தைகளே! இரும்புத் தசையும், எஃகு நரம்பும் உடைய சரீரமும், உறுதி வாய்த்த மனமும் வேண்டும். பலம் ஆண்மை, க்ஷத்திரிய வீரத்தோடு கூடிய பிரம்ம தேஜஸ் ஆகியவை நமக்கு வேண்டும். கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளுங்கள். ஆனால் நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள். தலைவர்களுக்குக் கீழ்ப்படியாத வரையில் சக்திகளை ஒன்று திரட்ட முடியாது. தனி மனிதனுடைய சக்திகள் எல்லாம் ஒன்றுசேராத வரையில் எந்தப் பெரிய காரியத்தையும் செய்துவிட முடியாது.

உண்மையல்லாதவற்றில் எச்சரிக்கையாக இருங்கள். உண்மையில் பிடிப்பு உள்ளவர்களாக இருங்கள். சத்தியத்தைப் பின்பற்றினால் என்றைக்கும் வெற்றி உண்டு. வெற்றி மெதுவாக இருக்கலாம். ஆனால் இறுதியில் வெற்றி நிச்சயம் உண்டு.

ஒழுக்கத்தைக் கடைபிடியுங்கள். தைரியமாக இருங்கள். மதசம்பந்தமான கொள்கைகளில் உங்களுடைய மூளையைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். கோழைகள்தாம் பாவம் செய்கின்றார்கள். பலசாலி பாபம் செய்யமாட்டான்.

அதிகாரத்தில் ஆசை கொள்ளாதீர்கள். பொறாமைக்கு இடம் தந்துவிடாதீர்கள். எழுந்திருங்கள். விழித்திருங்கள். லட்சியத்தை அடையும் வரையில் உழையுங்கள்.

புரந்தரதாசர் சரிதம்

பண்டரிபுரத்துக்குப் பக்கத்தில் வேமனபுரி என்ற ஊர் இருந்தது. அது வயல்கள் சூழ்ந்துள்ள ஊர். ஆங்குக் கரும்பு ஏராளமாகப் பயிரிட்டார்கள். கருப்பஞ்சாற்றைப் பிழிந்து கொப்பரையில் இட்டு வெல்லம் காய்ச்சும் வேலை வெகுவாக அங்கு நடந்துவந்தது. பசுக்களும், எருமைகளும் ஏராளமாக வளர்க்கப்பட்டன. எனவே மக்களுக்குப் பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றிற்கு எந்தக் குறையும் இல்லை. உணவு வளமும், பால் வளமும் பெருகி இருந்த அந்த ஊரிலே மக்களிடையே பக்தி வளமும் பெருகி இருந்தது. கல்வியும், ஒழுக்கமும், கற்பும் அம்மக்களிடையே நன்கு இடம் பெற்றிருந்தன. அவ்வூர் மக்கள் கூட்டம் கூட்டமாகத் தண்ணீர் எடுத்துச்செல்லும் பொழுது கண்ணன் ஆடிய குரவைக்கூத்து ஆடியது கண்களுக்கு இன்பம் தந்தது. மக்கள் வறுமையின்றி நாள்தோறும் விருந்தை எதிர்பார்த்திருந்தார்கள். செல்வத்தோடு கல்வியும், பண்பும் உடைய மக்களாக அவ்வூர் மக்கள் திகழ்ந்தனர்.

இத்தகைய பெருமை மிகுந்த வேமனபுரியில் கல்வி கேள்விகளில் சிறந்தவரும், செல்வத்தில் மிக்கவருமான மாதவராவ் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு உகந்த மனைவியாக ரத்னபாய் என்னும் சிரோமணி இருந்தாள். அவர்கள் இருவரும் மக்களிடம் அன்புடன் பழகிக் கருணை உள்ளம் படைத்தவர்களாக விளங்கினார்கள். பண்டரிநாதனிடம் இடையறாத பக்தி பூண்டு ஒழுகினர். எல்லா நலன்களும் பொருந்தி இருந்தும் புத்திரப் பேறு இல்லாத குறை அவர்களுக்கு இருந்தது. அக்குறையையும் பண்டரிநாதன் போக்கி வைத்தார்.

நல்லதோர் சுபதினத்தில் ரத்னபாய்க்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. ரகுநாதராவ் என்று பெற்றோர்கள் அக்குழந்தைக்குப் பெயரிட்டனர். குழந்தைக்கு ஐந்து வயதானதும் வித்யாரம்பம் செய்துவைத்தனர். ரகுநாதராவ் குழந்தைப் பருவத்திலேயே சங்கீதத்தில் மிகப் பற்றுள்ளவராக இருந்தார். தக்க பருவம் வந்ததும் லக்ஷ்மிபாய் என்னும் பெண்ணைப் பெற்றோர்கள் அவருக்கு மணம் செய்வித்தனர். தந்தைக்கு வயதானதும் குடும்பச் சுமையை ரகுநாதராவிடம் ஒப்படைத்தார். ரகுநாதராவ் வியாபாரத்தில் திறமை உடையவராக விளங்கிக் குடும்பத்தை நன்கு நடாத்திவந்தார். ரகுநாதராவ் நன்கு செல்வத்தைத் திரட்டினர். பணம் சம்பாதிப்பதில் அவர் மிகவும் திறமை உடையவராக இருந்தார். பெற்றோர்கள் காலமானதும் பணம் சம்பாதிப்பதில் மேலும் கவனம் செலுத்தினர்.

ஏழைகளின் பரிதாபகரமான நிலையை எண்ணிப்பார்க்காது கொடுத்த கடனுக்கு வட்டிக்கு வட்டி போட்டு வாங்குவார். கல்லினும் கடின மனத்தவராய் கடன் வாங்கியவரிடம் நடந்து கொள்வார். அவரைப்பற்றி அவர் வாழ்ந்த ஊரிலும், சுற்றுப் புறங்களிலும் '' இந்தப் பாவி என்று தொலைவான் '' என்று மக்கள் மனம் நொந்து பேசிக்கொண்டார்கள். பணம் வட்டிக்குக் கொடுத்ததோடு மளிகை வியாபாரமும், ஜவுளி வியாபாரமும், நகை வியாபாரமும் செய்துவந்தார். கடையில் வேலை பார்ப்போருக்குச் சரிவரச் சம்பளம் தரமாட்டார். சிலசமயம் ஆறு மாதச் சம்பளம் வினியோகம் செய்யப்படாமல் இருக்கும். மளிகைக்கடையில் கெட்டுப்போன பண்டங்களை எல்லாம் கொள்ளை விலைக்கு விற்க முற்பட்டார். இவ்வாறு சம்பாதித்த பொருளைப் பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைப்பார். சில சமயம் பணத்தைக் குவியலாகக் கொட்டி வெகுநேரம் பார்த்து மகிழ்ச்சி அடைவார். குடும்பத்துக்கும் அவர் தாராளமாகச் செலவு செய்யவில்லை. தானும் தன் மனைவியும் திருப்தியாக உண்ணாது பணத்தைச் சேமித்தனர். அவருடைய கஞ்சத்தனத்தைப் பார்த்துச் சிலர் அவரை அடுத்து "ஐயா, நீங்கள் பெரும் செல்வம் படைத்தவராக இருக்கிறீர்கள். அச்செல்வத்தை எல்லாம், மக்கள் நலத்திற்காகவும், தெய்வ காரியத்திற்காகவும் செலவிட்டு உங்கள் தந்தையின் பெயரைக்காப்பாற்றலாம். உமது தந்தையார் பரோபகாரியாக இருந்து கீர்த்தி பெற்று இருந்தார். உங்களுடைய செயல் அவரது கீர்த்தியைக் கெடுத்து வருகிறது" என்றார்கள்.

ரகுநாதராவ் அவர்களை மிகவும் கடிந்து கொண்டார். அவருக்கு மனைவியாக வாய்த்தவள் ஒப்பற்ற பொறுமை உடையவள். கணவன் கருத்துக்கு இசைந்து நடந்துகொள்வாள். சமையலுக்குப் போதுமான பொருள் இல்லாவிட்டாலும் மனத்திருப்தியுடன் உணவை அமுதமெனச் சமைக்கும் திறமை உடையவள். செல்வம் ஏராளமாக இருந்தும் அதைச் செம்மையான முறையில் செலவிட முடியவில்லையே என்ற ஏக்கம் உடையவளாக இருந்தாள். கணவன் மனதை மாற்றி அமைக்கும்படி கடவுளிடம் பிரார்த்தனை செய்வாள். குடும்பச் செலவுக்குக் கணவனிடம் பணம் கேட்காமல், நூல் நூற்றல், தையல், பின்னுதல் போன்ற கைத்தொழில்களைத் தாமே செய்து குடும்பச் செலவைச் சரிசெய்து கொண்டுவந்தாள். தனக்கு ஏதேனும் ஆபரணம் வேண்டும் என்று கணவனைக் கேட்கமாட்டாள். எளிய ஆடையையே உடுத்திக்கொள்வாள். தங்களுடைய சொத்து தர்ம வழியில் செலவிடப்படாது வெறுமனே முடங்கிக்கிடக்கிறதே என்ற வருத்தம் மட்டும் அவ்வம்மையாருக்கு இருந்தது. கணவனின் இயல்பு மாறி மதிக்கமுடியாத செல்வமும் நல்வழியில் செலவிடப்படும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. தன் கணவனையும், தன்னையும், சுற்றத்தார்களையும், அதிதிகளையும் தன் சொந்த உழைப்பால் காத்துவந்தாள். தன் கணவனைத்தெய்வமாகக் கருதிவந்தாள். கணவனுக்கு நல்லஅறிவுரைகளைக்கூறிச் செல்வத்தை நல்ல வழியில் செலவழிக்கத் தூண்டிப் பார்த்தாள். தன்னுடைய அறிவுரை பயன் அளிக்காது போகவே கடவுள் சித்தம் என்று அமைதியாக இருந்துவிட்டாள். அத் தம்பதிகளுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அதற்கு ருக்மணிபாய் என்று பெயர் வைத்தார்கள்.

இவ்வாறு ரகுநாதராவின் வாழ்க்கை பொருள் ஆசைக்கு அடிமைப்பட்டுப் பயனற்ற வாழ்வாகப் போய்க்கொண்டு இருக்கும் பரிதாபகரமான நிலையைப் பார்த்த பகவான் பக்தனை ஆட்கொள்ள முற்பட்டார். பகவான் தொண்ணூற்றைந்து ஆண்டுக் கிழவனாகத் தம்மை மாற்றி அமைத்துக்கொண்டு வேமனபுரிக்குச் சென்றார். உச்சியில் நரைத்த பத்து மயிர்களைக் குடுமியாக முடிந்திருந்தார். குழிந்த கண்களும், ஒட்டிய வயிறும் உடையவராகப் பார்ப்போருக்குப் பரிதாபகரமான காட்சி அளித்தார். உடம்பு வளைந்து கூன் விழுந்து இருந்தது. கையில் தடிகொண்டு அதன் ஆதரவில் நடந்து போனார். கைகள் நடுங்கிக் கொண்டு இருந்தன. கால்கள் தள்ளாடிக் கொண்டு இருந்தன. சிறிது தூரம் நடந்ததும் ஓய்வுக்காகச் சிறிது அமர்ந்துகொள்வார். "பண்டரிநாதா! அடியேனை ஏன் உன் பாதத்தில் சேர்த்துக்கொள்ளாமல் இருக்கின்றாய்?" என்று பிரார்த்தித்துவிட்டு எழுந்து நடப்பார். இவ்வாறு தள்ளாடி நடந்துகொண்டு "ரகுநாத்ராவின் இல்லம் எது?" என்று கேட்டுக் கொண்டே போனார். இவர் நிலையைப் பார்த்து ஜனங்கள் இவரைப் பற்றிப் பலவாறு பேசிக் கொண்டார்கள். அவர்களுள் ஒருவர் கூறியதாவது: "நாட்டில் எத்தனையோ தர்மவான்கள் இருந்தும் இவரை இப்படித் தள்ளாட விட்டுவிட்டார்களே. மேலும் இவர் தர்ம சிந்தனை உடையவர்களை நாடிப்போகாது, செல்லாத காசுகூடக் கொடுக்காத கருமி ரகுநாதராவை அல்லவோ நாடிப்போகிறார். தானம் என்ற சொல்லைக் காதால் கேட்பதற்கு அவருக்கு நாராசம்போல் இருக்கும்."

கிழவனாக வேடம் தரித்திருந்த பகவான் ரகுநாதராவ் வீட்டை அடைந்தார். அப்பொழுது ரகுநாதராவ் கணக்குப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். பகவான் திண்ணைமீது அமர்ந்து ரகுநாதராவின் வரவேற்பை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். ரகுநாதராவ் அவரைப் பார்த்ததும் "இவ்வளவு நாட்களாக இவரைப் போன்று தரித்திர தசையில் உள்ளவர்கள் நம்மை வந்து தொந்தரவு செய்யவில்லை. இன்றைக்கு இந்தக் கிழடு எங்கிருந்தோ வந்துவிட்டது" என்று மனதுக்குள்ளேயே எண்ணிக்கொண்டார். பின் அவரைப் பார்த்துப் பகர்ந்ததாவது: "நீங்கள் என்ன காரணமாக இங்கு வந்துள்ளீர்கள்? தாமதமின்றி விரைவில் வந்த காரியத்தைச் சொல்லி முடியுங்கள். எனக்கு வேலை அதிகமாக இருக்கிறது" என்று கடுகடுத்த குரலில் கூறினர். "என்ன! ஆரம்பமே இவ்வளவு கடுமையாக இருக்கிறதே!" என்று எண்ணிய

பகவான் தன் மடியிலிருந்த எலுமிச்சம்பழம் ஒன்றை எடுத்துப் புரந்தரதாசரிடம் கொடுத்து அவரை ஆசீர்வதித்தார். "என்ன ஐயா! ஓர் எலுமிச்சம்பழம் கொண்டு வந்திருக்கின்றீர்கள். பத்துப் பதினைந்து பழங்களாவது கொண்டு வந்திருந்தால் ஊறுகாய்க்கு நறுக்கிப் போட்டிருக்கலாம். மஞ்சள் கலந்த அரிசியைக்கொண்டு வந்து தலைமீது தெளிக்க முயல்கிறீர்கள். அவ்வரிசிகளைக் கையில் கொடுத்திருந்தால் அலம்பி உபயோகப்படுத்தியிருப்பேன். நீங்கள் மடியை அவிழ்த்தபொழுது ஏதோ நகையைத்தான் கொண்டு வந்துள்ளீர்கள் என்று எண்ணினேன். இப்பொழுது நீங்கள் வந்துள்ள காரியம் வியாபாரகாரியமா! அல்லது யாசகத்துக்கு வந்திருக்கின்றீர்களா? யாசகத்துக்கு வந்திருப்பீர்களானல் சொல்லாமலேயே ஓடிவிடுங்கள்."

பகவான்: ''பிரபுவே, தங்களைப்பற்றி நான் வெகுவாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.''

ரகுநாதராவ்: ''கிழப் பிராம்மணனே! என்னைப் பார்த்தால் பிரபு போன்ரு தோன்றுகின்றது! நான் பிரபு என்று யார் உனக்குச் சொன்னர்கள்? பிரபுவாக இருப்பவரைத் தேடிச் செல்லும்.''

பகவான்: '' தாங்கள் தயவுசெய்து என் விண்ணப்பத்தைப் பூர்த்தியாகக் கேட்கவேண்டும். பிறகு நீங்கள் உசிதம் போல் செய்யலாம். எனக்கு ஒரே புதல்வன்தான் இருக்கின்ருன். நான்தான் அவனுக்கு எல்லாம் செய்யவேண்டும். நான் இறந்துவிடுவேனகில் அவன் அனுதையாகிவிடுவான். நான் இருக்கும்போதே அவனுக்குக் கல்யாணம் செய்து அவனை என் கண்குளிரப் பார்க்க வேண்டும். இதுதான் என்னுடைய கடைசி ஆசை. தாங்கள் மனம் வைத்து ஆயிரம் வராகன் தானம் கொடுப்பீராயின் உமக்குக் கோடி புண்ணியம் உண்டு."

ரகுநாதராவ்: '' என்னய்யா சொன்னீர்! நான் என்ன நினைத்தேனே அது சரியாகிவிட்டது. ஆயிரம் வராகனு? என் ஜன்மத்தில் ஒரு வராகன்கூட நான் கண்டதில்லை. நாள்தோறும் உழைத்து அதன் மூலம் வரும் சொற்பத் தொகையைக்கொண்டு நாங்கள் கஷ்டஜீவனம் செய்து வருகின்ருேம். யாராவது எங்களுக்கு ஒன்றிரண்டு வராகன் தந்தால் நாங்கள் அவரைத் தெய்வமாகப் பூஜிப்போம். எங்களுடைய தரித்திர நிலையைக் கேலி செய்வதற்கா நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்! என் தேகத்தைப் பாருங்கள். சரியான உணவில்லாததால் அது இளைத்துக்கிடக்கிறது. நீங்களாவது நல்ல ஆடை அணிந்திருக்கின்றீர்கள். உங்களைப் பார்த்தால்தான் பிரபுவாகத் தோன்றுகிறது. இனி உங்களோடு பேச எனக்கு நேரமில்லை. நான் வியாபார சம்பந்தமான காரியத்தைப் பார்க்கவேண்டும். தயவு செய்துபோய் விடுங்கள்."

பகவான்: ஐயா! தயவுசெய்து நான் சொல்லும் வார்த்தையைக் காது கொடுத்துக்கேளுங்கள். தானம் செய்து ஒருவரும் கெட்டுப்போனதில்லை. கர்ணனைப் போன்ற கொடையாளனுகவும், அரிச்சந்திரனைப் போன்ற சத்தியவாதியாகவும், சிபிச்சக்ரவர்த்தி போன்ற தியாகியாகவும் ஜீவர்கள் ஆகவேண்டுமென்று நான் உங்களை ஆசீர்வதிக்கின்றேன். நீங்கள் பார்ப்பதற்கு லோபிபோல் தோன்றினும் நீங்கள் வள்ளல்களில் சிறந்தவராகவும் தியாகிகளில் மிக்காராகவும் விளங்கப்போகும் ஒரு மகான் என்றே எனக்குத் தோன்றுகிறது. தாங்கள் செய்யும் திவ்விய தானத்தைப் பிறர் அறியாமல் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறீர்கள் போலும். நீங்கள் எனக்கு ஒரு தம்பிடிகூடத் தரவேண்டாம். நான் சொல்வதைக் கேட்பதற்குச் சில நிமிடங்களைத் தானமாகக் கொடுங்கள். என் புத்திரர் புத்திரிகளின் விவாகம் ஒருபுறம் இருக்கட்டும். நீங்கள் வெகு பிரயாசைப்பட்டுச் சொத்தைச் செலவு செய்யாது சேர்த்து வைத்திருக்கின்றீர்கள். அதனல் என்ன பயன்? நீங்கள் பிறந்தது உங்களை மட்டும் காப்பாற்றிக்கொள்வதற்கு அன்று. உங்களைக் காப்பாற்றிக்கொள்வதோடு பிற மக்களின் கஷ்டங்களையும் போக்க உங்கள் பணம் பயன்படவேண்டும். ஆனல் நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்களுடைய லோபித்தனத்தால் உதாசீனப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். நீங்களும் சாப்பிடாது பிறருக்கும் பயன்படுத்தாது ஈட்டும் செல்வம் அல்பமானது. அதனல் உங்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்படப்போவதில்லை. செல்வம் வளர

வளர உங்கள் மகிழ்ச்சி குறையும். பிறருக்கு வழங்காது செல்வத்தை வைத்திருப்பதைக் காட்டிலும் செத்துப்போவது மேல். பெரியவர்கள் பிறருக்கு உதவுவதற்குத் தம்மால் இயலாமற்போனல் மிகவும் வேதனைப்படுவார்கள். மகாபலிச் சக்கரவர்த்தி வாமனருக்கு மூன்றடி மண் வழங்கினல் தாம் அழியவேண்டுமென்பதை அறிந்திருந்தும் அந்தத் தானத்தை மகிழ்ச்சியோடு செய்தார்.

இளையான்குடிமாறநாயனர் என்னும் ஒரு சிவ பக்தர் இருந்தார். அவர் சிவனடியார்களுக்குப் பணிவிடை செய்வதில் பேரானந்தம் அடைந்தார். ஒரு சமயம் சிவபெருமான் அதிதி வேடம் புனைந்து இளையான்குடிமாற நாயனர் வீட்டுக்கு வந்தார். இளையான்குடி மாற நாயனரும் அவர் மனைவியும் சிவனடியார் வேஷத்தில் இருந்த சிவபெருமானை அன்புடன் வரவேற்றனர். அவ்வமயம் வீட்டில் உணவுக்கு ஒரு வழியும் இல்லை. அன்றைக்கு வயலில் நெல் விதைத்தது அவர்கள் ஞாபகத்துக்கு வந்தது. உடனே இரவோடு இரவாக இளையான்குடிமாறநாயனர் ஒரு கூடையை எடுத்துக்கொண்டு போய் வயலில் தெளித்திருந்த நெல்லைச் சேகரித்துக்கொண்டு வீடு திரும்பினர். சமைப்பதற்கு வீட்டில் விறகு இல்லை. வீட்டின் பின்புறம் இருந்த கூரையைப் பிரித்துக் கூரையில் வேய்ந்திருந்த மூங்கிலை அடுப்பெரிக்கப் பயன்படுத்தினர்கள். நெல்லை அரிசியாக்கிப்புழக்கடையிலிருந்தகீரையைக் கறியாகச் சமைத்து விருந்துக்கு உணவு தயார்படுத்தினர்கள். விருந்தாக வந்திருந்தவர் மறைந்து சிவபெருமான் காட்சி தந்து அவர்களுக்கு அருள்புரிந்தார். எனவே தானத்தின் சிறப்பு மிகவும் மகிமை வாய்ந்தது.

"நீர் எனக்குப் பொருள் தருவதால் உமக்குப் பெரிய நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. நீர் தான தர்மம் ஏராளமாகச் செய்கின்ற அளவுதான் செல்வம் உம்மை வந்தடையும். கொடுப்பவர்களுடைய புகழாகிய செல்வம் நிலையாக இருந்துகொண்டிருக்கும். சிபிச் சக்கரவர்த்தி, கர்ணன், புரூரவசு, குமணன் முதலாயினேர் தமது எல்லையற்ற தியாகத்தினலும், தர்ம சிந்தனையினலும் இன்றும் நிலையாக வாழ்கின்றனர். அவர்களுடைய தியாகம் அவர்களுடைய பெயரை நிலையாகக் காத்து வருகின்றது. தேவையானவர்களுக்கு உதவாது இருப்பவனுடைய பணம் உலகுக்கு நன்மை செய்வதைக் காட்டிலும் தீமையையே செய்கின்றது. பசி பொறுக்க முடியாது திருடுகின்றவனைத் திருடன் என்று சொல்லுவதை விடத் துன்பப்படும் மக்களுக்கு உதவி செய்யாது பணத்தைப் பதுக்கி வைத்திருப்பவனைத் தான் திருடன் என்று சொல்லவேண்டும். நீர் செல்வந்தனனது எப்படி? உம் கடையிலிருக்கும் வேலையாட்களும், உம் கடையில் சாமான்கள் வாங்குபவரும், உம் கடையிலுள்ள சாமான்களை உற்பத்திசெய்பவர்களும் சேர்ந்து உம்மை இவ்வளவு பெரிய பணக்காரர் ஆக்கி இருக்கின்றனர். அப்படி வந்த செல்வத்தை மக்களுக்குப் பிரித்துக்கொடுத்து இன்பம் அடைவதற்குப் பதிலாக அச்செல்வத்தைப் பதுக்கி வைத்திருப்பதால் நாட்டில் வறுமையும் பஞ்சமும் ஏற்படுகின்றன. பசியால் வாடும் ஏழைமக்கள் அவதிக்குள்ளாகும்போது செல்வந்தர்களைப் பார்த்து மனம் குமுறுவார்கள். அவர்களுடைய மனக்குமுறல் செல்வந்தர்களுக்குத் தீமையாக வந்து முடியும். ஆகையால் நீர் உம் தாராளப் புத்தியாலும் தர்மச் சிந்தனையாலும் ஒரு சிறந்த உதாரண புருஷனக விளங்கவேண்டும். இவ்வளவையும் உம்முடைய நன்மைக்காகவே எடுத்துக் கூறினேன். எனக்கு ஏதாவது பொருள் கொடுத்து உதவாவிட்டாலும் பரவாயில்லை. உம்மிடம் யாசிக்கவரும் ஏழைஎளியவர்களை தூஷிக்க வேண்டாம். அவர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் போனலும் சாந்தமாகப் பேசிச் சமாதானப்படுத்தி அனுப்பும். பேசுதற்கு இனிய மொழிகள் இருக்கக் கடுமையான சொற்களைப் பிரயோகித்து மனக் கசப்பைத் தேடிக்கொள்ளாதீர்கள்."

ரகுநாதராவ்: "நான்தான் இல்லை என்று சொல்லிவிட்டேன். மேற்கொண்டு இனிப் பேசிக் காலத்தை நான் வீணக்கப்போவதில்லை." இங்ஙனம் கூறிவிட்டு எழுந்து நடந்தார். பகவான் அவரை வழிமறித்து மறுபடியும் யாசகம் கேட்க ஆரம்பித்தார். ரகுநாதராவ் கிழவனரைக் கீழே பிடித்துத்தள்ளிவிட்டு ஓடினர்.

(தொடரும்)

ஞான வெட்டியான்-5

இன்னியனுக்கு உடைமையும் வறுமையும் ஒன்றே

தசரத குமாரனுகிய இராமனை நரோத்தமன் என்று மேலோர்கள் பாராட்டுகின்றனர். அப்படி அவர்கள் பாராட்டுதற்கேற்ற காரணங்களும் பல உள. பண்பட்டுள்ள மனிதன் ஒருவன் எங்கெந்த சூழ்நிலையில் யார் யாரிடம் என்னென்ன விதங்களில் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கு ஸ்ரீ ராமன் முன்மாதிரியாக இலங்கினன். ஆகையினல்தான் அவன் நரோத்தமன் என்னும் அடைமொழிக்கு இலக்காயினன்.

ஸ்ரீ ராமன் கட்டழகே வடிவெடுத்தவன். அவனைப் பார்ப்பதில் மக்கள் மகிழ்வு மிகக் கொண்டனர். அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதில் யாருக்கும் சலிப்புத் தட்டுவதில்லை; அவனைப் பார்ப்பவர்கள் பரமானந்தம் அடைந்தனர். மேனி அழகில் அவன் அத்தகைய இனிமை பூண்டிருந்தான். அவன் பிறந்தது ராஜ குடும்பத்திலாயினும் தரத்திலோ அந்தஸ்திலோ இராமன் தன்னை யாருக்கும் மிக்கானுகக் கருதவில்லை. மக்கள் எல்லாரையும் ஒரே மனப்பான்மையுடன் அவன் பாராட்டி வந்தது போற்றுதற்குரிய செயலாம்.

வயதில் தனக்கு மிக்காரைப் பார்க்கும் பொழுதெல்லாம் இராமன் அன்னவர்களுக்குத் தன் வணக்கத்தைத் தெரிவித்தான். வயதில் மிக்கவராய் இருக்கிறவர்களும் ராஜகுமாரன் ஒருவனுக்குத் தங்களுடைய வணக்கத்தைச் செலுத்துதலில் முந்துதல் வேண்டும். ஆனல் அத்தகைய நியதி ஸ்ரீ ராமனைக் கட்டுப்படுத்தவில்லை. தான் ஒரு ராஜகுமாரன் என்னும் அந்தஸ்தில் மற்றவர்களுக்கு மேலோன் என்று ஒரு பொழுதும் தன்னைப்பற்றி அவன் நினைத்துக்கொள்ளவில்லை. தான் சந்தித்த பெரியார்களைப் போற்றி வணங்குதலில் எப்பொழுதும் அவன் மகிழ்வு மிகப்பூண்டிருந்தான். அப்படிச் சந்தித்தவர்களின் யோக க்ஷேமத்தைப்பற்றி விசாரிப்பதிலும் இராமன் முந்திக்கொள்வான். அங்ஙனம் அவன் நடந்துகொண்டதன் வாயிலாக மக்கள் எல்லாருக்கும் அவன் இனியவனுனன்.

உரையாடுதலில் தசரதராமனிடம் சிறப்பொன்று இருந்தது. பிறர் கூற்றுக்குப் பொறுமையாய் இருந்துகொண்டு அவன் செவி சாய்ப்பான். மற்றவர்கள் பேசிமுடித்த பின்பே அதற்குப் பொருத்தமான விடையை அவன் தருவான். விடை விடுப்பதில் அமைதியும் நிதானமும் வடிவெடுத்தவனுக அவன் இலங்கினன். அதிகார தோரணையில் பேசும் பாங்கு அவனிடத்து இல்லவே இல்லை. ஆகவே, அவனேடு சம்பாஷிப்பதில் மக்கள் பெருமகிழ்வு கொண்டிருந்தனர்.

சந்தர்ப்பம் வாய்த்தபொழுதெல்லாம் ஸ்ரீ ராமன் முதியோர்களுக்குத் தன் காயத்தைக் கொண்டு பணிவிடை பண்ணுவான். அத்தகைய செயல் பிரம்மச்சரிய ஆச்ரமத்துக்கு யாண்டும் அணியாக இலங்கிவருகிறது. மானுடனுகப் பிறந்துள்ள ஒருவன் ஆற்ற வேண்டிய கடமைகளுள் பிறர்க்குப் பணிவிடை பண்ணுதல் முதலிடம் பெறுகிறது. அத்தகைய சிறப்புக்கு எடுத்துக்காட்டாக அயோத்தி ராமன் இலங்கினன்.

ஸ்ரீ ராமனுக்குத் தக்க வயது வந்தபொழுது அவனுக்கு இளவரசுப் பட்டாபிஷேகம் செய்வதைப் பற்றிய பேச்சு ஆங்காங்கு பலருக்கிடையில் எழுவதாயிற்று. அதற்கிடையில் தந்தையாகிய தசரத சக்கரவர்த்திக்கு அந்தியகாலம் எட்டிவிட்டது என்பதை அவர் தாமே உணரலாயினர். ஆகையினல் தம்முடைய அருமைச் செல்வனுகிய இராமனுக்கு அதிவிரைவில் யுவராஜப் பட்டாபிஷேகம் செய்து வைக்கவேண்டும் என்ற தீர்மானத்துக்கு அவர் வந்தார். தம் தீர்மானத்தை முனிபுங்கவர்களிடமும் மந்திரிமார்களிடமும் அவர் தெரிவித்தார். அவர்கள் எல்லாரும் ஏகோபித்து அதற்குத் தங்கள் உடன்பாட்டைத் தெரிவித்தார்கள். அடுத்தபடியாகப் பொதுமக்களுக்கிடையில் இத்தீர்மானம் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் ஏகோபித்து அதற்கு உடந்தை ஆனர்கள். இளவரசுப் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் அதிவிரைவில் நிகழ்ந்துகொண்டிருந்தன. தந்தையாகிய தசரதன் இராமனை அழைத்துத் தம் தீர்மானத்தை அவனிடம் தெரிவித்தார்.

உலகத்தவர்களுக்கு மகிழ்வூட்டும் அச்செய்தியை ஸ்ரீ ராமன் அமைதியாக ஏற்றுக்கொண்டான். மேலும் தந்தையார் பகர்ந்ததாவது: "நீயும் உன் வாழ்க்கைத்துணைவியாகிய சீதையும் இப்பொழுது முதற்கொண்டு உண்ணாவிரதம் பூணுங்கள். உங்களுக்கு ஏற்பட்டுள்ள பெரிய கடமையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். அதற்குத் தகுதி வாய்ந்தவர்களாக நீங்கள் இருவரும் ஆகவேண்டுமென்று தெய்வத்திடத்துப் பிரார்த்தனை பண்ணிக்கொள்ளுங்கள்." இங்ஙனம் அவர் ஆக்ஞாபித்தார். அடுத்த படியாக நிகழ்தற்கிருந்த ஸ்ரீ ராமனுடைய இளவரசுப் பட்டாபிஷேகத்தைக் குறித்து அயோத்தி மக்கள் அனைவரும் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தனர். நல்லுணவு அருந்துதலிலும் ஆடலிலும் பாடலிலும் அவர்கள் அனைவரும் சொக்கியிருந்தனர்.

அடுத்த நாள் காலையில் திடீரென்று காட்சி மாறியது. ஸ்ரீ ராமனுடைய மாற்றாந்தாயாகிய கைகேயிக்கு இச்செயல் பிடிக்கவில்லை. தன் கணவனாகிய தசரத சக்கரவர்த்தி முன்பொரு தடவை அவளுக்குக் கொடுத்திருந்த வரங்கள் இரண்டை இப்பொழுது அவள் பயன்படுத்திக் கொண்டாள். ஸ்ரீ ராமன் உடனே வனத்துக்குச் செல்லவேண்டுமென்பதும் அவனுக்குப் பதிலாகத் தன் மகனாகிய பரதனுக்குப் பட்டாபிஷேகம் சூட்ட வேண்டுமென்பதும் அவள் தன் கணவனிடம் கேட்ட இரண்டு வரங்களாகும்.

சொன்ன சொல் தவறாமல் நடப்பது இக்ஷுவாகு வமிசத்தினரின் சிறப்பாகும். தசரதச் சக்கரவர்த்தி தான் கொடுத்த வரத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டிருந்தார். ஆனால் தம் மகன் இராமனிடம் வைத்திருந்த வாஞ்சையை முன்னிட்டு அவரால் ஒன்றும் இயம்ப முடியவில்லை. அக்கடமையைக் குறிப்பால் அறிந்து கொண்ட இராமன் தானே கானகம் ஏக முற்பட்டான். அன்று இரவுமட்டும் அயோத்தியில் தங்கியிருந்து அடுத்தநாள் அவன் திட்டப்படி போகலாம் என்று தந்தையார் வேண்டினார். மைந்தன் அதற்கு இசையவில்லை. ஓரிரவுக்குப் பிறகும் போய்த்தானே ஆக வேண்டும்; ஆதலால் அது விஷயத்தில் காலதாமதம் செய்யலாகாது என்பது இராமனுடைய கருத்து.

ஸ்ரீ ராமனுடைய மனதில் மற்றொரு முக்கியமான கடமை உணர்வு உடனே புறப்படும்படி அவனைத் தூண்டியது. தன் தந்தைக்கு அந்திய காலம் அணுகிவிட்டதைக் குறிப்பால் அவன் அறிந்துகொண்டான். இராமன் அயோத்தியில் இருக்கின்றபொழுது தசரதன் மடிந்துபட்டுப் போனால் அவர் சொன்ன சொல்லை நிறைவேற்ற முடியவில்லை என்ற பழிக்கு அவர் ஆளாவார். மைந்தனின் கடமை அப்பழியினின்று தந்தையைக் காப்பதாகும். ஆதலால் தான் அவன் அவசரமாகப் புறப்பட்டுப்போய் விட்டான்.

அன்றிரவு ஸ்ரீ ராமனும் அவனுடன் வந்த சீதையும் ஒரு மரத்தடியில் படுத்து அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் காவலாய் இருந்த இலட்சுமணன் இரவெல்லாம் உறங்காது விழித்திருந்தான். அவன் உள்ளத்தில் அதிசயம் ஒன்று உதயமானது; "ஒரு மனிதனுடைய ஜீவிதத்தில் இருபத்து நான்குமணி நேரத்துக்குள்ளாக இவ்வளவு பெரிய மாறுதல் உண்டாகக் கூடுமா? நேற்றிரவு அயோத்தியில் ராஜஸ்ரீயுடன் அவன் படுக்கச் சென்றான். அடுத்தநாள் இளவரசுப் பட்டாபிஷேகம் தனக்காகக் காத்துக்கொண்டிருந்தது என்பதை அவன் உணர்ந்திருக்கக் கூடும். ஆனால் அடுத்தநாள் இரவு நாடு கடத்தப்பட்டவனாக ஒரு மரத்தடியில் அவன் படுத்துக்கிடந்தது மட்டுமல்லாமல் அயர்ந்து உறங்கவும் செய்கிறானே! எத்தகைய திண்ணிய மனம் படைத்திருந்தால் மனிதன் ஒருவனுக்கு உடைமையையும் வறுமையையும் நிகராகக் கருதும் வல்லமை வந்து வாய்க்கும்! இத்தகைமை அலாதியாகத் தசரத ராமனுக்கே உரியது. சாதாரண மனிதன் ஒருவனுக்கு இது சாத்தியமாகாது. ஆயினும் இதுபோன்ற நெருக்கடியை எந்த மனிதனும் தவிர்க்க முடியாது. ஏதேனும் ஒருவிதத்தில் இத்தகைய சோதனை ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கையில் வந்தமைகிறது. ஸ்ரீ ராமன் போன்று உறுதிப்பாடு படைத்திருப்பவனுக்கே உடைமையும் வறுமையும் பொருளற்றவை. "மனத்திண்மையே மனிதனை யாண்டும் காக்க வல்லது" என்ற உண்மை விளங்குகிறது.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம்

56 शाश्वतः சாச்வத:—யாண்டும் இருப்பவன்.

ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இல்லாது போகும் பொருள் ஒன்று சாசுவதமானதாகாது. பகல் காலத்தில் வெட்ட வெளியில் வானவில் தென்படுகிறது. ஆனால் இரவில் அது தென்படுவதில்லை. ஆகையினால் அது சாசுவதமன்று. அதே போக்கில் பிரபஞ்சப்பொருள்கள் அனைத்தும் சாசுவதமானவைகளாகா. எப்பொருள் சிருஷ்டியிலும் பிரளயத்திலும் மாறுபாடு அடையாதிருக்கிறதோ அப்பொருளே சாசுவதமானது. ஆதலால் பரமாத்மனைச் சாசுவதமானவன் எனலாம்

57. कृष्णः க்ருஷ்ண:—கருமை நிறம் படைத்தவன் என்பது இதன் பொருள்.

எது அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறதோ அது கரிய நீல நிறமாகத் தென்படுகிறது. கடலினின்று ஒரு கையளவு ஜலத்தை எடுத்துப்பார்த்தால் அதில் நிறம் ஏதும் இல்லை என்பது வெளியாகிறது. ஆனால் அது சமுத்திரமாக விரிந்தோடுமிடத்து அதனிடத்துக் கரிய நீல நிறம் தென்படுகிறது. இனி, வெட்டவெளியும் அத்தகையதேயாம். கார் மேகமும் வெட்டவெளியின் நீலநிறமும் ஒன்று சேர்ந்து கண்ணனுடைய நிறமாக மிளிர்கின்றன. அன்னவன் ஓர் உடலில் கட்டுப்பட்டவன் போல் தென்படினும் உண்மையில் அவன் எல்லையில் அடங்காத அகண்டவஸ்துவாம்.

சத் சித் ஆனந்தம் என்பது, கிருஷ்ண, என்னும் நாமத்துக்கு அமைந்துள்ள மற்றொரு பொருளாம். 'கிருஷ்' என்னும் பகுதி அவனுடைய சத் சொருபத்துக்கு விளக்கமாகிறது. கால, தேச, நிமித்தத்தில் கட்டுப்படாது யாண்டும் இருப்பது சத்சொருபமாம். 'ண' என்னும் எழுத்து ஆனந்தத்தைக் குறிக்கிறது. யாண்டும் யாவையுமாய் உள்ள கிருஷ்ணன் சத் சித் ஆனந்தமாக மிளிர்ந்துகொண்டிருக்கிறான். இயற்கையின் அமைப்பே அதற்குச் சான்றாகிறது. இயற்கையின் வடிவம் மாறியமைந்தாலும் அது யாண்டும் சத் பொருளாகவே மிளிர்கிறது. அடுத்தபடியாக ஒவ்வொரு பொருளின் அமைப்பிலும் அறிவு மிளிர்வது வெளியாகிறது. சேதனம், அசேதனமாக அமைந்துள்ள அனைத்திடத்தும் அறிவு நிறைந்திருப்பது ஆராய்ச்சிக்கு எட்டுகிறது. அடுத்தபடியாகப் பரமாத்மாவே இப்பிரபஞ்சமாய் இலங்குகின்றார் என்பதற்குச்சான்று இதனோடு ஆனந்தம் நிரம்பியிருப்பதேயாம். ஆதலால் பிரபஞ்சம் முழுதுமே சத் சித் ஆனந்தம் என்பது தேற்றம்.

58. लोहिताक्षः லோஹிதாக்ஷ: — சிவந்த தாமரைக் கண்ணன்.

காரிருள் மயமாயிருந்து புலனாகாதபொருள் சிவந்து வரவரத் தன்னைத் தானே விளக்கிக் கொள்கிறது. இரும்பு கன்னங்கறேரென்றிருக்கிறது. அப்பொழுது அது மறைந்தும் கிடக்கிறது. காய்ச்சுகின்றபொழுது அது முதலில் சிவப்பு நிறம் எடுக்கிறது. அப்படி நிறம் எடுத்துள்ளதுதான் இன்ன இடத்தில் இருப்பதாகத் தன்னைத் தானே விளக்கிக் கொள்கிறது. இங்ஙனம் லோஹிதாக்ஷன் ஆகிய கண்ணன் அனைத்துமாய் இருப்பதற்கு அத்தாட்சியாகச் சிவப்பு நிறம் வாய்ந்த கண்களை உடையவனாக இருக்கிறான்.

59. प्रतर्दनः ப்ரதர்தன: — அனைத்தையும் எடுத்து விழுங்குபவன்.

இயற்கையின் நடைமுறையில் சிருஷ்டியும் பிரளயமும் மாறி மாறி வந்தமைகின்றன. இவ்விரண்டனுள் பிரளயம் என்றால் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இலயமாதல் என்பதன் பொருள் ஒடுங்குதல். பிரளயம் என்பது ஒன்றும் பாக்கி இல்லாது தோன்றியுள்ள பிரபஞ்சம் முழுதும் ஒடுங்கிப் போதலாம். இதன் உட்பொருளை ஒருவாறு நாம் அறிந்துகொள்ள முடியும். அண்டத்தில் இருப்பது பிண்டத்திலும் இருக்கிறது என்பது கோட்பாடு. அண்டம் ஆண்டவனுடைய செயல். பிண்டத்தில் நிகழ்வது ஜீவாத்மனுடைய செயல். தன் அமைப்பு முழுதையும் ஜீவாத்மன் உள்ளபடி அறிந்துகொள்வானாகில் பிறகு அண்டத்தின் அமைப்பையும் ஒருவாறு அறிந்துகொள்ள அவனுக்கு இயலுகிறது. ஜீவாத்மன் நாள்தோறும் இரவிலே உறங்கப் போகிறான். ஆழ்ந்து அவனுக்கு உறக்கம்

பிடிப்பது பிரளயத்திற்கு நிகர். ஜீவாத்மனுக்குச் சொந்தமாயுள்ள அனைத்தும் அவன் பூணும் சுஷுப்தி அவஸ்தையில் மறைந்து பட்டுப்போகின்றன. மடியிலே பணப்பையைக் கட்டி வைத்துக்கொண்டு அவன் உறங்குகின்றான். அப்படி உறங்கும்பொழுது தன் உடலும் அதில் அணிந்திருக்கும் உடையும் அந்த உடையில் அவன் வைத்திருக்கும் பணப்பையும் அவனுக்குச் சொந்தமாக மாட்டா. அதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். அயர்ந்து உறங்குதற்குப் பதிலாக அந்த ஜீவன் சொப்பனம் காண்கிறான் என்று வைத்துக்கொள்வோம். சொப்பனத்தில் ஜாக்கிரதாவஸ்தையில் அவன் காண்கின்ற உலகுக்கு நிகராக மற்றோர் உலகைத் தனக்குத்தானே அவன் அமைத்துக்கொள்கிறான். அப்படித் தான் அமைத்துக்கொண்ட உலகில் பிரயாணம் போகிறான். பிரயாணத்துக்குப் புறப்பட்டவன் பணப் பையைக் கையில் கொண்டுபோகவில்லை. பணம் இல்லை என்று வழியில் திணறுகிறான். ஜாக்கிரதாவஸ்தையில் மடியில் வைத்த பணம் இருந்தபடியே அவன் உடலில் இருக்கிறது. ஆயினும் சொப்பனவஸ்தையில் தன் கையில் பணம் இல்லை என்று அவன் கற்பனைபண்ணிக்கொள்கின்றான். ஆகவே, ஜீவாத்மன் அனுபவிக்கின்ற நனவு, கனவு, அயர்ந்த உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளுள் ஓர் அவஸ்தையில் அவன் படைத்திருக்கும் பொருள் மற்றோர் அவஸ்தையில் பயன்படுவதில்லை.

மற்று, பரமாத்மன் உண்டுபண்ணுகின்ற பிரளயம் ஜீவாத்மன் உண்டுபண்ணுகின்ற பிரளயம் போன்றதன்று. அவன் உண்டுபண்ணுகின்ற பிரளயத்தில் அண்டங்களும் ஜீவகோடிகள் அனைத்தும் மறைந்துபட்டுப் போகின்றன. ஜீவாத்மன் உண்டுபண்ணும் உறக்கத்தில் ஒடுக்கம் ஏகதேசமானது. பரமாத்மன் உண்டுபண்ணும் பிரளயத்தில் அனைத்தும் ஒருங்கே மறைந்துபட்டுப் போகின்றன. ஜீவாத்மன் உண்டுபண்ணுகின்ற உறக்கத்தில் தான் மட்டும் மறைந்துபட்டுப் போகிறான். அந்நிலையில் அவனுடைய அகங்கார மமகாரமும் அழிந்துபட்டுப் போகின்றன. ஆனால் விழித்திருக்கும் மற்ற ஜீவர்களுடைய அகங்காரமும் மமகாரமும் நிலைத்திருக்கின்றன. பரமனுடைய பிரளயத்தில் எந்த ஜீவனுக்காவது விழித்திருக்கும் இச்சா சுதந்திரமும் இல்லை. பரமனுடைய சான்னித்தியம் மட்டும் அழிந்துபட்டுப் போகாதிருக்கிறது.

60. प्रभूतः ப்ரபூதः — பிரளய காலத்திலும் தன் நிறைவிலிருந்து குறைபட்டுப் போகாதிருப்பவன்.

பரமனுக்குச் சொந்தமாயுள்ள ஜகத்தும், ஜீவனும் பிரளயத்தில் ஒடுங்குகின்றன. ஆனால் அதை முன்னிட்டு அவனுடைய நிஜ சொரூபம் பழுதுபடுவதில்லை. பரமனைப் பற்றிய இவ்வுண்மையை ஆத்ம சாதகன் தன் சாதனத்தில் நன்கு கையாளலாம். விழித்திருக்கும் வேளையில் தன் மனதினுடைய செயல்கள் அனைத்தையும் சாதகன் ஒதுக்கித் தள்ளுவானாகில் அது கிட்டத்தட்ட பரத்தினுடைய பிரளயத்துக்கு நிகரானது. தன்னுடைய ஜீவ வியக்தியையும் பரத்தில் அவன் ஒன்றுபடுத்துவானாகில் பரம்பொருளுக்கு நிகராகிறான். இதற்கு மேல் அவன் அடைய வேண்டிய உயர்நிலை இல்லை.

61. त्रिककुब्धामा த்ரிககுபூதாமா— ஆகாயத்தின்கண் உள்ள மேல், கீழ், நடு ஆகிய மூன்று இடங்களுக்கும் ஆதாரமாயிருப்பவன்.

ஐம்பூதங்களுள் ஆகாசம் மிகச் சூட்சுமமானது. அதை ஜட ஆகாசம் என்றும் பர ஆகாசம் என்றும் வேண்டியவாறு நாம் பொருள்படுத்தலாம். எப்படிப் பொருள்படுத்தினாலும் விஷயம் ஒன்றேயாம். பரமபதத்தில் வீற்றிருப்பவன் பரந்தாமன். சாதனம் புரிகிற சாதகன் அப்பரமபதத்தினை உச்சநிலை, இடைநிலை, கடைநிலை என மூன்றாகக் கருதுகிறான். ஆயினும் சுத்த சைதன்யத்துக்கு அத்தகைய பாகுபாடு இல்லை. ஆனால் மூன்று நிலைகள் பரமபதத்தில் இருக்கின்றன என்று வைத்துக் கொண்டால் மேலும் அதன் மகிமைகள் விரிவடைகின்றன. அவையாவன: ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் இவை யாவும் திரிகுணங்களின் மகிமைகளாம். ஏக காலத்தில் நிர்குணப் பிரம்மமாகவும் சகுணப் பிரம்மமாகவும் பரம்பொருள் உள்ளது. ஆத்ம சாதகன் குணஸஹிதனாகவோ குணரஹிதனாகவோ அப்பரமனை வைத்துக்கொள்ளலாம்.

தகுதி

(சேலம் சகோதரி தங்கம் தமிழில் மொழிபெயர்த்தது)

விவேகத்தின் அவசியத்தை இந்துமதம் வலியுறுத்துவதுபோல வேறு எந்த மதமும் முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தவில்லை. விவேகம் இல்லாத அன்புகூடத் தாமஸமானதே. தவறாகப் புரிந்துகொண்டு செய்யப்பட்ட தானம் கூடக்குறைபாடு உடையதுதான்.

அச்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ் தப்தம் [க்ருதஞ்ச யத்
அஸத் இத்யுச் யதே பார்த்த நச தத் ப்ரேத்ய [நோ இஹ

"சிரத்தையின்றி செய்யும், யாகமும், தானமும், தபசும், மற்ற கர்மமும் 'அஸத்' எனப்படும். அர்ஜுனா, அது மறுமைக்கும் உதவாது, இம்மைக்கும் உதவாது."

அதேச காலே யத் தானம் அபாத் ரேப்யஸ் [ச தீயதே
அஸத் க்ருதம் அவக்ஞாதம் தத் தாமஸ [முதாஹ்ருதம்

தகாத இடத்திலும் காலத்திலும் தகுதியற்றவர்களுக்கு வணக்கமின்றி இகழ்ச்சியுடன் செய்யப்படுகின்ற தானம் எதுவோ அது தாமஸம் எனப்படுகின்றது.

நற்செயல் செய்யவேண்டும் என்ற உணர்ச்சியின் உந்துதல் இருந்தால் மட்டும் போதாது; நாம் செய்யும் செயல், ஆழ்ந்த நீண்டகால சிந்தனை, முயற்சி இவற்றின் விளைவாக இருப்பதும் அவசியமாகிறது. எந்த ஒரு செயலிலும், ஆன்மிகத்தில் ஒருவர் அடைந்துள்ள பண்பாட்டின் முன்னேற்றக் குறியாக விளங்குவது விவேகமே. பெரிய மாளிகை ஒன்றை உறுதியற்ற நிலத்தில் கட்டிய கட்டடக் கலைஞனை நாம் பாராட்ட முடியாது. அவ்வாறே நம்முடைய ஒவ்வொரு எண்ணத்திலும் செயலிலும் நன்மை வெளிப்பட்டால் மட்டும் போதாது; அதற்கும் மேலாக, விவேகத்தினின்றும் விளைந்த தகுதி இருக்கவேண்டும் என்று நம் சனாதன தர்மம் போதிக்கிறது. நன்மையும் விவேகமும் சேர்ந்த செயலே நம் இலட்சியமாக எடுத்துக்காட்டப்படுகிறது.

விவேகத்தை இவ்வாறு வலியுறுத்துவதன் மூலம் மதங்களுக்கெல்லாம் தாய்மதமாக விளங்கும் நம் இந்து மதம், தெளிந்த வண்ணம், கல்வி அறிவு, முதிர்ந்த சிந்தனா சக்தி இவற்றின் அவசியத்தை நம் மனதில் பதிய வைக்கிறது. தூய உணர்ச்சிகளினின்றும் வரும் பிரார்த்தனையைப் போலவே, விவேகத்தைத் தரும் சாஸ்திர அறிவும் அவசியமாகிறது. உண்மை எங்குக் காணப்பட்டாலும் அதனோடு முரண்படாமல் அதை ஏற்றுக்கொள்கிற ஒரே மதக்கொள்கை இந்து மதக் கொள்கைதான். சிந்தித்துப் பாருங்கள்! மற்ற மதங்கள் விஞ்ஞான முன்னேற்றத்தைச் சகித்துக்கொள்ளலாம்; மற்ற மதங்களைச் சேர்ந்த தனி மனிதர்கள் அறிவை வளர்க்கத் தாம் கடமைப்பட்டிருப்பதை உணரலாம். ஆனால் இந்து மதம் மட்டுமே மெய்ப்பொருள் காணும் அறிவு தேவை என்று சொல்கிறது. ஆழ்ந்த ஊற்றிலிருந்து தெளிந்த நீரானது பொங்கி வருவது போல இந்துமதத் தத்துவஞானிகளின் சிந்தனை இருந்திருக்கவேண்டும். அதனால்தான் விவேகத்தை வளர்க்கும் நூலறிவையும் பல்கலை ஞானத்தையும் அவர்கள் உண்மையின் கூறுகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அந்தோ! எதிர்ப்பு இன்மையே ஒரு செயலினின்று ஊக்கத்தையும் வலிவையும் எடுத்துவிடுகின்றதே. இன்று ஐரோப்பாவில் அறிவுத் துறைகள் பலவற்றில் வல்ல பண்டிதர்கள் பலர் இருக்கின்றார்கள். நம் நாட்டில் எத்தனைபேர் உள்ளனர்? ஆயினும் நமக்கும் ஐரோப்பியருக்கும் உள்ள ஒரு வேற்றுமையைக் கவனிக்கவேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் காண்போம். உடற்கூறில் மனித உயிர் அடைந்திருக்கும் வளர்ச்சி ஒருநாளில் ஏற்பட்டதன்று. பல்லாயிரம் ஆண்டுகளாகப் பரிணமித்துச் சிற்றுயிர் தற்போது இருக்கும் மனிதவடிவாக வளர்ந்திருக்க வேண்டும்—இந்த உண்மையை விஞ்ஞான பூர்வமாகக் கண்டுபிடித்து உலகுக்குச் சொன்னவர் சார்லஸ் டார்வின் என்ற ஆங்கில விஞ்ஞானி ஆவார். ஆனால் கிறிஸ்துவ மதக்கொள்

கையோ இதற்கு முற்றிலும் மாருனது. மனிதன் இறைவனுல் ஒரேநாளில் சிருஷ்டிக்கப்பட்டான் என்பது மத குருமார்கள் போதிக்கும் கொள்கை. இந்தக்கொள்கையை டார்வின் வெளியிட்ட விஞ்ஞான முடிபு பொய்யாக்கிவிட்டது. எனவே வேற்ருன் ஒருவனைப் பார்த்து நாயானது குரைத்துத் தீர்ப்பது போல, ஐரோப்பியர்கள் எல்லாரும், குறிப்பாக மதகுருக்கள், டார்வினை இருபது ஆண்டுகள் தொடர்ந்து எதிர்த்தார்கள். தடையின்றிப் பயமில்லாது தன் கருத்துக்களை வெளியிடும் விஞ்ஞானியையோ, வரலாற்று ஆசிரியரையோ அல்லது விமர்சகரையோ கண்டால் சந்தேகங்கொண்டு அவர்களைத் தம் எதிரியாகக் கருதும் மத குருமார்களை ஐரோப்பாவில் காணலாம். எங்கே தாம் சொல்லும் மதக் கொள்கைகளை இவர்களுடைய விளக்கமும் விமர்சனமும் தகர்த்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சுகிருர்கள். இந்தியாவிலோ மத போதகர்களுக்கு அத்தகைய பயம் இல்லை. அந்தப் பயத்தை, குறுகிய பிரிவினை உணர்ச்சியினின்று வரும் அர்த்தமற்ற அச்சம் என்று நாம் ஒதுக்கிவிடுகிறேம். இந்தியாவில் ஜகதீச சந்திரபோஸைப் போன்ற விஞ்ஞானிகள் எந்த விதத் தயக்கமும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்படுகிருர்கள். இத்தகைய அறிஞர்கள் தம்போக்கில் உண்மையைக் கண்டுசொல்லும் தீர்க்கதரிசிகளாக, ரிஷிகளாகக் கருதப்படுகிருர்கள்.

ஆனால் உண்மைக்கு எதிர்ப்பு இருக்குமானல் அந்த எதிர்ப்பே,உண்மையைக் காக்க இளைஞர்களை ஓடிவரச் செய்யும் அறைகூவலாக இருக்கும். ஒருமுறை ஹஸேன் உஸேனை எதிர்த்த எதிரிகள் சரணடைய வேண்டிவந்தது. சரணடைவதற்கான நிபந்தனைகளை எடுத்து வந்த எதிரி படைத் தலைவன் செய்தியை ஹஸேன் உஸேனிடம் சொன்ன பின் தன்னேடுவந்த முப்பது வீரர்களுடன் போருக்கு ஆயத்தமானன். சாவைத்தவிர வேறு முடிவு இருக்க முடியாது என்று தெரிந்திருந்தும் எதிர்ப்பைத் தெரிவிக்க முயன்றனர். ஹஸேன் உஸேன் காலத்தில் மட்டுமல்ல, எல்லாக்காலங்களிலும் அப்படித்தான். உண்மை தன்னைத்தானே விளக்கிக்கொள்கிறது. தானே பரவுகிறது. குறைவற்ற நிறைவாகிய ஸத்தியப் பொருள் என்றும் மனிதனுக்கு அருகிலேயே இருக்கிறது. அதை மறைக்கவோ மறுக்கவோ மனிதன் எவ்வளவு முயன்ருலும், அதற்கு என்ன தடைபோட்டாலும், உண்மையானது மனிதனுக்குத் தன்னை விளக்கிக் காட்டிவிடுகிறது. உண்மை இவ்வளவு வலிவு மிக்கதாய் இருப்பதால், நாம் உண்மை என்று கருதுகின்ற ஒன்று தன்னேடு சீதனமாகத் துன்பத்தையும், துயரத்தையும், மரணத்தையும் கொண்டுவந்தாலும் அந்த உண்மையை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியாது. எனவே எதிரியால் மறக்கப்பட்டிருப்பதைவிடத் தாக்கப்படுவதே மேல்; பிறரால் அவதூறு பேசப்படுவதே நல்லது. போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரியராய் இருப்பதைவிடத் துன்புறுத்தப்படுவதே மேல்-எப்போது? தாக்குதலும், அவதூறும், துன்பமும் லட்சியத்தை நம் நினைவுக்குக் கொண்டு வருவதாய் இருக்குமானல், இந்த உண்மையை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் நம் நாட்டின் தற்போதைய நிலை நன்கு விளங்கும். இந்தியர்கள் விஞ்ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்ததினுல் அந்த விஞ்ஞானிகளும் அறிஞர்களும் பெற்ற நன்மையைவிட, ஐரோப்பிய மத குருமார்களால் தொடர்ந்து தாக்கப்பட்டு வந்த மேல்நாட்டு விஞ்ஞானிகளும் அறிஞர்களும் அதிக நலன் பெற்றிருக்கிருர்கள்; எதிர்ப்பையே ஊக்கம் தரும் தூண்டுதலாகக் கொண்டு தத்தம் துறையில் முன்னேறியிருக்கிருர்கள். எனவே, பெருஞ் செயலில் ஈடுபட்டிருப்பவர்கள் தாக்குதல்களையும் எதிர்ப்பையும் கண்டு பயந்துவிடாமல், எத்தகைய பிரதிகூலமான சூழலிலும் இலட்சியத்திற்காகப்பாடுபடுவதே மேலானது என்ற விவேகத்தோடு, அச்சூழ்நிலைகளையே சாதகமாக எடுத்துக்கொண்டு செயலாற்றவேண்டும்.

ஒருமுறை ஐரோப்பியர் ஒருவர் பகர்ந்தார்: ஒரு நாட்டிற்குக் கஷ்டகாலம் வரும்போது அந்த நாட்டில் வாழும் தனி மனிதன் தன் பிழைப்புத் தொழிலையும் விட்டுவிட்டு நாட்டுக்காகப் பாடுபடவேண்டும்.'' 'தன் தொழில்' என்று அவர் சொன்னது அந்தத் தனி மனிதனுக்குத் தனிப்பட்டமுறையில் மகிழ்ச்சியையும்

செல்வத்தையும் பதவியையும் தரக்கூடிய தொழிலே. சுயநலப்பற்றை ஒதுக்கி விட்டு ஒரு பொதுக் கொள்கைக்காகப் பாடுபடுவோர்க்கும் ஏதாவதொரு தொழில் வாய்க்கும். ஆனல் இதற்காக நாம் பெரியவிலே கொடுக்க வேண்டி இருக்கும். வறுமை, கடின உழைப்பு, சமயங்களில் தோல்வி என்ற இந்தப் பெருவிலே கொடுத்துத்தான் கொள்கைக்காகப் பாடுபட வேண்டும். இவ்வளவு துன்பங்களுக்கிடையில் இப்படியொரு கொள்கையைத் தேர்ந்தெடுக்க நமக்கு உறுதி நல்குவது எது? இந்தக் கொள்கையைப் பின்பற்றுவதனல் நமக்கோ பிறர்க்கோ அளப்பரிய நன்மை வரப்போகிறது என்ற ஞானம்தான். இத்தகைய தியாகத்தைச் செய்ய நம்முன் பெரும் பசியை நாம் எழுப்பிக் கொள்ளவேண்டும். ஆம் உணவுக்காக எழும் விருப்பமாகிய வயிற்றுப் பசியைப் போல இலட்சியங்களைக் குறித்துப் பெருவிருப்பங்கள் நமக்கு ஏற்படவேண்டும். சந்நியாசி ஒருவர் தியாகம் செய்ய வேட்கைமிகக் கொள்கிருர். அதுபோல நாமும், அறிவுக்காக, உண்மைக்காக, நீதிக்காக, வலிமைக்காகத் தாகம் கொள்வோம். நம்முடைய இலட்சியத்தில் நம் அறிவுக்கெட்டிய மிக உயர்ந்த நிலேயை அடையப் பாடுபடுவோம். எந்த மார்க்கத்தை நாம் தேர்ந்தெடுத்தாலும் அதில் பூரண நிலேயை—நிறை நீர்மையை அடைய உழைப்போம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனைப் பிரார்த்திப்போம்—"இறைவா! உன்னுடைய தொண்டர்களுக்கு உன் திருத்தொண்டு என்ன என்பதைக் காட்டி அருளுவாயாக! அத்தொண்டர்களின் மக்களை உன் மகிமையைக் காண வைப்பாயாக!"

ஆனல் இலட்சியத்தைக் குறித்து ஏற்படும் விருப்பம் நம்முள் வலிவு பெறுவதற்கிடையில், அந்த விருப்பத்தைச் சிறிது பூர்த்தி செய்து கொள்வதற்கு முதலில் ஏற்படும் சிறிய வாய்ப்புக்களோடு நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது. அதே சமயம், தான் நினைத்தபடி தான் நடப்பது என்ற பிடிவாதத்தோடு விவேகமின்றிச் செய்யும் செயல் கசப்பு மிக்க தோல்வியைத்தான் தரும். பொதுநலச் சேவையில் ஈடுபட்டிருக்கும் பலர் தம் முயற்சிகள் உடனடியாகப் பயனளிக்காததால் குறைகூறுவதையும் ஆத்திரத்தில் கையைப் பிசைவதையும் பார்க்கிறேம். இது உண்மையான சேவை மனப்பான்மை அன்று. தமோகுணம் நிறைந்த ஒரு உணர்ச்சி—அவ்வளவுதான். உபநிஷதங்களில் நம் ரிஷிகள் கூறிய அறிவுரையாவது: "ஞான மார்க்கமானது கூர்மையான க்ஷவரக் கத்தியைப் போன்றது; நீண்டது; அறிந்து கொள்வதற்கு அரியது. ஆயினும், தளர்வுருதே, எழுந்திரு; விழித்திரு. இலட்சியத்தை அடையும் வரை நில்லாது பாடுபடு."

சூதாட்டம்

சூதும் வாதும் வேதனைசெய்யும். பிறர் பொருளை முறை தவறிக் கைப்பற்றுவது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலேத்திராது. நாம் உழைத்துப் பெருத செல்வமும், நம்மிடம் நிலேத்திராது. காலம் மிகவும் அருமையானது. காலத்தை இழந்துவிட்டால் திரும்பப் பெறமுடியாது. சூதாட்டத்தில் செலவழிக்கும் காலமும் பொருளும் தனக்குத் தானே செய்துகொள்ளும் துரோகமாகும். பாபத்தையும் பாதரசத்தையும் ஜீரணம் பண்ணமுடியாது. சூதாட்டம் பொல்லாதது என்பது தொன்று தொட்டு நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பழங்காலத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்ற சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினர்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச்சீட்டு என்ற சூதாட்டத்தையும் குதிரைப்பந்தயம் என்ற சூதாட்டத்தையும் செய்து வருகிருர்கள். இவைகளின் விளைவு கேடு. நல்லார் இத்தீங்குகளினின்று விலகியிருப்பார்களாக. பொது நலனுக்காகவென்றும் இவைகளில் ஈடுபடலாகாது. இவைகளில் கருத்துச் செலுத்தாதிருக்குமளவு நலத்தை வளர்த்தவர்களாவோம்.

சின்னங்களின் இன்றியமையாமை

(விவேகானந்தரின் கட்டுரையை சேலம் சகோதரி மங்கையர்க்கரசி மொழிபெயர்த்தது)

பக்தி இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று ஆரம்ப நிலையிலுள்ள வைதிக பக்தி. சடங்கு, கிரியை, சின்னம் இவைகளைத் தன்னகத்தே கொண்டது வைதிக பக்தி என்று பகரப்படுகிறது. மற்றொன்று மிக உயர்ந்தது. அது பராபக்தி என்று பகரப்படுகிறது. ஆரம்ப நிலையில் உள்ள வழிபாடு தொடங்கி மிக உயர்ந்த பராபக்தி இறுதியாக அனைத்தும் பக்தி என்றே பகரப்படுகின்றது. அனைத்து நாடுகளிலும் எல்லாச் சமயத்தின் வழிபாடும் அன்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆன்மிகப் பாதையில் முன்னேறக் கிரியைகள் அவசியமானவை. ஒரே தாவலில் மிக உன்னத நிலையை எட்டிவிடலாம் என மனிதன் கருதுவானாகில் அவன் பிழை போகின்றான். ஒரே நாளில் வயோதிகத்தை அடைந்துவிடலாம் என்று குழந்தை கருதுமானால் அது பிழையன்றோ! சமயம் என்பது நூல் ஆராய்ச்சியிலோ, அறிவுத் திறமையிலோ, புத்தியைக்கொண்டு பாகுபடுத்தலிலோ இல்லை என்பதனை என்றும் நினைவில் இருத்திக் கொள்ளுதல் அவசியம். பாகுபடுத்தல், சாஸ்திரங்கள், சடங்குகள், சின்னம், விக்ரகங்கள் அனைத்தும் சமய நெறியில் செல்லத் துணைபுரிகின்றன. அவ்வளவே. அனுபூதியே சமயமாகும். அனைவரும் கடவுள் என்று கூறுகிறோம். கடவுளைக் கண்டதுண்டா என்ற வினாவிற்கு ஒருவன் கண்டதுண்டு என்று பகர்வானாகில் அவன் நகைப்புக்குள்ளாகிறான். பெரும்பான்மையோருக்குச் சமயம், புத்திபூர்வமான உடன்பாடே. அன்னவர்கள் சாஸ்திரத்தைக் கடந்து மேலே செல்லுவதில்லை. அது சமயமன்று. அப்படிச் சமயத்தை அனுஷ்டிப்பதைவிட நாஸ்திகர்களாக இருப்பதே மேல். ஆன்மா இருப்பதாகக் கருதுபவனும் அதனைக் கண்டதில்லை. அனைவரும் ஆத்ம சொருபமாயிருந்து அதனை அறியாமல் இருக்கும் காரணத்தை அறிதலும் ஆத்மானுபூதியை அடையும் வழிவகையை அறிதலும், அவசியமாகிறது. அப்படியில்லாவிடின், சமயத்தைப்பற்றிப் பேசுதல் உபயோகமற்றது. சமயம் என்பது உண்மையெனின் ஆத்மானுபூதியைப் பெறுதற்குரிய சாதனையைப் புகட்டுதல் வேண்டும். தத்துவத்தைப் பற்றியோ, சாஸ்திரத்தைப்பற்றியோ ஓயாது தர்க்கம் செய்துகொண்டிருப்பினும் ஒரு முடிவுக்கு வர இயலாது. சமயம், புத்திக்கு அப்பாற்பட்டது. புத்தியைக் கடந்து மேலே சென்று சுவானுபூதியடைவதே சமயமாகும். சுவர் இருக்கிறதா இல்லையா என்று வருடக் கணக்கில் வாதம் செய்தாலும் ஒரு முடிவுக்கும் வர இயலாது. நேரில் காண்பதே இருப்பதற்குப் பிரமாணம். உலகத்தவர் அனைவருமே சுவர் இல்லை என்று கூறினும் கண்ணால் கண்டவன் அதனை ஒத்துக்கொள்வதில்லை. வெறும் ஏட்டுக் கல்வியினால் சமய அனுஷ்டானம் வருவதன்று. அனுஷ்டானத்தில் கொண்டுவர விரும்புவோர் குறைந்த அளவில் நூல்களைக்கற்பது உத்தமம். நவீன காலத்தில் பலவிதமான எண்ணங்கள் மூளையில் திணிக்கப்படுகின்றன. எண்ணங்கள் மனத்தில் பதிந்து ஒரு உருப் பெறுவதற்கே சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. ஜீரணிக்கப்படாத எண்ணங்கள் புத்தியைக் குழப்புகின்றன. சாஸ்திரங்களை அனுஷ்டானத்தில் கொண்டுவராமல் வெறுமனே கற்பது வியாதியேயன்றி சமயமன்று. சிலர் திகில் ஊட்டக்கூடியதையும் பரபரப்பு அளிப்பதையுமே சமயம் என்று எண்ணுகின்றனர். வட துருவத்திலிருந்து இறக்கைகளுடன் கூடிய ஒருவன் வந்து உலகத்தவர் கண்களுக்குத் தெரியாமல் அவர்களைக் கண்காணிக்கின்றான் என்பன போன்ற புத்திக்கு ஒத்து வராதவற்றை நம்புகின்றனர். பேய், பிசாசு போன்ற திகில் ஊட்டுவனவற்றை அன்னவர்கள் வரவேற்கின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கும் அடுத்த இருபத்துநான்கு மணி நேரத்தில் புதிய பரபரப்பு வேண்டியிருக்கிறது. இவை பைத்தியக்காரத்தனமே அன்றி சமயமல்ல. பலவீனர்களால் இறைவனை அடைய இயலாது. பரப்பரப்பு விரும்புவோர் சிறிது சிறிதாக ஆற்றலை இழந்து பலவீனர்கள் ஆகிவிடுகின்றனர். ஆதலால் இவற்றைத் தவிர்த்தல் இன்றியமையாதது.

சமயம் என்பது வெறும் பேச்சிலோ, தத்துவத்திலோ, நூல்அறிவு பெறுவதிலோ இல்லை. சமயம் என்பது அனுபூதி என்பதை மறந்துவிடலாகாது. துன்புறுத்தலாகாது, திருடக்கூடாது என்பதனை அறிவதினால் மட்டும் பயனில்லை. அதனை உணர்ந்தவர்களே அக்கொள்கைகளைத் தன்மயமாக்கிக்கொண்டு ஒழுகுகிறார்கள். என்ன இயல்பு மனிதன் படைத்துள்ளான், எவ்வளவு உணர்ந்துகொண்டிருக்கிறான் என்பதே சமய அனுஷ்டானத்திற்குத் துணைபுரிதலால் சமயம் ஒரு நீண்ட பயணமாக அமைகிறது. உயர்ந்த ஒன்றை அடைதற்கு இடையறாது சாதனம் புரிதல் வேண்டும் என்பதை மறந்துவிட்டு உடனே அதனை அடைய முடியும் என்று மக்கள் எண்ணுகின்றனர். படிப்படியாக சாதனையினால் உயர்ந்த நிலையை அடையமுடியுமேயன்றி ஒரே தாவலாகத் தாவ முடியாது. ஆதலால் வழிபாட்டின் முதற்பகுதியாக வைதிக பக்தி அமைந்துள்ளது.

சிறார்கள் முதலில் ஸ்தூலத்தின் வாயிலாகக் கற்றபின் மெதுவாக சூக்ஷ்மத்திற்கு வருகின்றனர். ஒரு குழந்தையிடம் ஐந்து தடவை இரண்டு என்பது பத்து என்று கூறினால் குழந்தைக்குப் புரியாது. ஸ்தூலமாகப் பத்துப் பொருட்களைக் கொண்டு வந்து ஐந்து தடவை இரண்டு என்பது பத்து என்று காண்பித்தால் குழந்தை அதைப் புரிந்துகொள்ளும். அதே போன்று அனுபூதியில் பெறுதற்கரிய நிலையை அடைதற்கு மக்கள் ஸ்தூலத்தினின்று சூக்ஷ்மத்திற்குச் செல்லுதல் வேண்டும். அனைத்து நூல்கள் கற்றிருப்பினும், வயோதிகர்களாக இருப்பினும் ஆன்மிகத்துறையில் மக்கள் அனைவரும் குழந்தைகளே. ஸ்தூல நிலையில் உள்ள சரியை, கிரியை, வழிபாடு, சின்னம் ஆகியவற்றின் மூலமாகச் சமய அனுஷ்டானத்தை ஆரம்பித்தல் வேண்டும். அனைவரும் ஒரே வழிபாட்டு முறையைப் பின்பற்ற வேண்டியதில்லை. அவரவர் மனநிலைக்கும், மன பரிபாகத்துக்கும் ஏற்றாற்போல் சாதனை முறை மாறி அமைகிறது. ஸ்தூலத்தின் வாயிலாகப் பயிற்சி பெற்றுப் படிப்படியாகச் சூக்ஷ்மத்தை உணரவும் பழகுதல் வேண்டும்.

குறி ஒன்றேயாயினும் ஒவ்வொரு மானுடனும் அவனுடைய மன இயல்பிற்கு ஏற்ற உபாசனா மூர்த்தியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுதல் அவசியமாகிறது. தனக்கேற்ற தெய்வ சொரூபத்தைப் பிரித்தெடுத்துக் கொள்வதை இஷ்டம் என்று பக்தியோகம் கூறுகிறது.

அடுத்ததாக, மந்திரங்கள் சமய அனுஷ்டானத்தில் முக்கிய ஸ்தானத்தைப் பெறுகின்றன. ஓசைகள், நாமங்கள் இவற்றின் ஆற்றலில் மனிதகுலம் வயப்பட்டிருக்கிறது. அடுத்துச் சமய அனுஷ்டானத்தில் சின்னங்கள் கையாளப்படுகின்றன. சின்னங்கள் மனித மனத்தை திருத்தியமைக்க வல்லதாகின்றன. எண்ணத்தின் இயற்கையான வெளிப்பாடே சின்னங்களாகும். பலதரப்பட்ட மக்களுக்கு ஏற்றாற்போல் பல சின்னங்கள் உள்ளன. சின்னங்கள் எண்ணங்களுடன் நெருங்கிய தொடர்புடையவை. வெளியே உள்ள சின்னங்களை எண்ணங்கள் ஞாபகப்படுத்துகின்றன. உள்ளே உள்ள எண்ணங்களைச் சின்னங்கள் நினைவுறுத்துகின்றன. பக்தியின் முதற் பகுதி சின்னங்கள், மந்திரம், வழிபாடு முதலியவற்றைக் கூறுகிறது. ஒவ்வொரு சமயத்திலும் பிரார்த்தனை என்ற பகுதி இடம் பெறுகிறது. உடல் நலத்திற்காகவும் செல்வத்திற்காகவும் சொர்க்கத்திற்காகவும் பிரார்த்திப்பது காமியப் பிரார்த்தனை. பக்தனாக விரும்பும் அனைவரும் காமியப் பிரார்த்தனையைத் தவிர்த்தல் அவசியம். இறைவனிடம் இந்தக் கொடுக்கல், வாங்கல் வியாபாரம் பண்ணுவது பிச்சைக்காரத்தனம். கங்கைக் கரையில் வசிப்பவன் தண்ணீருக்காகச் சிறிய கிணற்றைத் தோண்டுவது மடமையன்றோ! வைரச் சுரங்கத்தை அடைந்தவன் கண்ணாடிக் கற்களைத் தேடுவது அறியாமையன்றோ. என்றாவது ஒரு நாள் அழியக்கூடிய தேகத்திற்காகவும் நிலையற்ற செல்வத்திற்காகவும் பிரார்த்தனை பண்ண வேண்டியதின் அவசியம் தான் என்ன? பரம்பொருளின் சன்னிதானத்தில் வியாபாரிக்கோ வியாபாரத்துக்கோ இடமில்லை. சுகபோகத்தை மட்டும் வேண்டினால் மனிதனுக்கும் விலங்கிற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும். மிருகத்தை விட மேம்பட்டவர்கள் மனிதர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

ஆசையை அறவே ஒழித்தல் வேண்டும்.

இயற்கை ஆட்டுவிக்கும் பதுமையாக, அடிமையாக மக்கள் இருக்கின்றனர். அற்ப விஷயம் கூட மனிதனைப் பாதிப்பதனால் பயந்து கொண்டே வாழ்க்கை நடாத்துகிறான். மான் பயந்து ஓடுவதைவிட மனிதன் பயந்து ஓடுகின்றான். மான் சிறிதளவு புல்லில் திருப்தி அடைகிறது. ஆனால் மனிதர்கள் திருப்தி இல்லாமல் தேவைகளைப் பெருக்கிக்கொண்டே போகின்றனர். இயற்கைக்கு முரண்படுவதே மக்களின் இயல்பாக மாறி அமைந்துவிட்டபடியால் இயற்கையான எதுவுமே திருப்தி அளிப்பதில்லை. இயற்கைக்கு முரண்பட்ட உணவு, பானம், சூழ்நிலை, வாழ்க்கைப் பரபரப்பு இவற்றையே மனிதன் வேண்டுகிறான். மனிதன் உலகனைத்தையும் கண்டு அஞ்சுகிறான். மனிதனின் இக்குணமே அவனுடைய துன்பத்திற்கு ஏதுவாக அமைகிறது.

மரணத்திற்கு அப்பால் உள்ளதைப் பற்றியோ இறைவனைப் பற்றியோ தெரியாத நிலையில் இவ்வுலகத்தில் மகிழ்ச்சியுடன் வாழலாமே என்று காரியவாதிகள் கூறுகின்றனர். இயற்கைக்கு அடிமையாக இருக்கும் பரியந்தம் இவ்வுலகத்தில் மகிழ்ச்சியுடன் வாழ இயலாது. வாழ்க்கைப் போராட்டமே மனிதனைப் பக்குவப்படுத்துகிறது. சுகமாக வாழ்வதற்காகப் பலவருடங்கள் திட்டமிட்டுச் செயல்படினும் துக்கமே வந்தமைகிறது. இருநூறு ஆண்டுகளுக்கு முன் மக்களின் தேவை மிகக் குறைவு. மக்களின் அறிவு, கூட்டுத் தொகையில் பெருகினால் அவர்களின் தேவைகள் பெருக்கற்தொகையில் பெருகி விட்டன. சொர்க்கத்தில் ஆசைகளனைத்தையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற ஆவலினால் அங்குச் செல்ல மனிதர்கள் விழைகின்றனர். ஆசைகள் முடிவில்லாமல் தொடர்கிறது. ஆசையைக் கடத்தலே முக்தி நிலை ஆகும்.

நான் அத்வைதத்தையோ, துவைதத்தையோ, வேறெந்த மதக் கொள்கையையோ போதிக்க வரவில்லை. ஆத்மாவைப் பற்றியும், அதன் எல்லையற்ற வலிமையைப் பற்றியும், ஆற்றலைப் பற்றியும், பூரணத்துவத்தைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். எனக்கொரு குழந்தை இருக்குமாயின் சிறு வயதிலேயே அதற்கு "நீ பரிசுத்தன்" என்று போதிப்பேன். புராணம் ஒன்றில் மதாலஸா என்னும் இராணியைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவள் தன் குழந்தையைத் தாலாட்டும்பொழுது "தூய பரிசுத்தச் சுடரொளியே கண்வளராய், மாய வினை மாசுபடாத மாமணியே கண்வளராய்; சீர்மிகுந்த வலிமைபடைத்த செம்மலே கண்வளராய்; பேராதரிக்கும் பெருமானே கண்வளராய்" என்று பாடுவாள். ஆம், அதிலே பெருமிதம் இருக்கிறது.

அந்த உணர்ச்சி எத்தகையது? ஒரு கற்பாறை மேலே ஒரு சந்நியாசி இருக்கின்றார். அவருடைய அருமையை அறிந்த மேனாட்டுச் சக்கரவர்த்தி அலெக்ஸாந்தர் பொன்னையும் பொருளையும் காட்டி கிரேக்க தேசத்திற்கு வருமாறு அவரை அழைக்கின்றார். சந்நியாசி அவற்றைப் பார்த்து நகைக்கின்றார். அரசன் வெகுண்டு "நீ வராவிட்டால் உன்னைக் கொன்றுவிடுகின்றேன்" என்கிறார். சந்நியாசி பெருகச் சிரித்து "உன்னுடைய வாழ்க்கையில் இதைவிடப் பெரிய பொய்யைச் சொல்ல முடியாது. நான் பிறந்ததுமில்லை, இறப்பதுமில்லை. நான் அகண்டமாய் எங்கும் பரந்து, எல்லாம் அறிந்த சித்துப் பொருள். நீ இதை எப்படிக் கொல்வாய்? ஆன்மா அழிவதில்லை. ஆன்மா பிறப்பதுமில்லை. ஆன்மாவை யாரும் அழித்துவிடமுடியாது. நான் ஆன்ம சொரூபம். என்னை நீ கொன்றுவிடுகிறேன் என்று சொல்லுவது வியப்புக்குரியதாக இருக்கிறது. எங்கே என்னைக் கொல் பார்ப்போம்?" என்கிறார். உடனே வீரன் விவேகியின் அடிபணிகிறான். ஆன்ம வலிமைக்கு நிகரான வலிமை இல்லை. ஆன்ம வலிவை எதிர்த்து எதுவும் நிற்க இயலாது. இதுவே வலிமை; இந்த வலிமையே நாம் வேண்டுவது.

—சுவாமி விவேகானந்தர்.

ஸத் ஸம்பாஷணை

'கேள்வி (407) ஞானமார்க்கத்தில் சென்று கொண்டிருக்கும் போதும்கூட மனதில் கீழான எண்ணங்கள் தலைதூக்குகின்றன. அவற்றை வேரோடு களைந்தெறிய ஓர் உபாயம் தந்தருள வேண்டுகிறேன்.

'வீட்டு ஈ போன்று இருக்கவேண்டாம்; தேன் ஈ போன்று இரு' என்பது பரமஹம்ச தேவருடைய வாக்கு. பாங்கில் வீட்டு ஈ, தேனீ ஆகியவற்றுக்கிடையில் பெரிய வேறுபாடு உண்டு. வீட்டு ஈ. நல்லுணவு. மலம் ஆகியவைகளின்மீது மாறி மாறி உட்காரும். அவைகளுக்கிடையில் உள்ள வேறுபாடு வீட்டு ஈக்குத் தென்படுவதில்லை. ஆனல் தேனீயினுடைய பாங்கு இதற்கு முற்றிலும் மாறுபட்டது. அது மலர்மீது அமரும் அல்லது தன் அடையில் அமரும். வேறு எங்கும் அது அமர்வதில்லை. மனிதன் பழக்கத்தாலும் பயிற்சியினுலும் வீட்டு ஈ போன்று இருக்கலாம்; அல்லது தேனீ போன்று ஆகலாம். பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ விரும்புகின்றவன் தேனீ போன்று இருக்கக் கடமைப்பட்டிருக்கின்ருன். அதன் பொருட்டு அவன் தீவிரமான விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும். 'பொருந்தாத எண்ணங்களை எண்ண மாட்டேன்; பொருந்தாத வார்த்தைகளைப் பேச மாட்டேன்; அவற்றிற்குச் செவிசாய்க்கவும் மாட்டேன். பொருந்தாத செயல்களைத் துச்சம் என ஒதுக்கித் தள்ளுவேன்.' இங்ஙனம் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களைச் சுத்தமாக வைத்திருக்கத் தீர்மானம் செய்துகொள்பவனே ஆத்ம சாதனத்துக்குத் தகுதி உடையவனுகிருன். அதற்கிடையில் பழைய வாசனையை முன்னிட்டோ சம்ஸ்காரங்களை முன்னிட்டோ பொருந்தாத எண்ணங்கள் உள்ளத்தில் தோன்றுமாகில் அவைகளை அப்போதைக்கப்போது ஒதுக்கித்தள்ள வேண்டும். பிறகு அவைகளைப் பற்றி நினையாதிருந்து பழகவேண்டும். தீவிரமாக முயன்ருல் வெற்றி கிட்டுவது உறுதி.

கேள்வி : (408) சஷ்டி விரதம், கிருத்திகை விரதம் ஆகியவற்றை எம்முறையில் அனுஷ்டித்தால் இல்லற வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒருபெண் சிறந்த பலனை அடைய முடியும்?

சஷ்டி விரதம், கிருத்திகை விரதம், சோம வார விரதம், சனி வார விரதம் ஆகியவைகள் பாராட்டப்படுபவைகளே. அவைகளுள் விருப்பமான ஒன்றிரண்டை எடுத்துக்கொண்டு தீவிரமாகக் கையாள மக்கள் எல்லாரும் கடமைப்பட்டிருக்கின்றனர். விரதம் அனுஷ்டிக்கின்ற நாளன்று காலையில் உணவு எதையும் உண்ணுது இருத்தல் வேண்டும். அன்று சிறப்பாக வழிபாட்டில் ஈடுபட வேண்டும். சுத்தமான சாத்விக உணவையே வழிபடு தெய்வத்துக்குப் படைத்து அதைப் பிரசாதமாக உற்ரூர் உறவினருக்கு வழங்குதலும் பிறகு தானும் அருந்துதலும் முக்கியமான கடமையாகும். பிற்பகலில் இரண்டு மணி நேரம் மௌன விரதம் அனுஷ்டிக்க வேண்டும். மாலை அரை மணி நேரம் தியானம், ஜபம் முதலியவை செய்தல் முற்றிலும் இன்றியமையாத பகுதியாகிறது. இரவில் சொற்ப ஆகாரம் மட்டும் ஏற்பது முறைமை. பிறகு வழிபடு தெய்வத்தைப் பற்றிய கோட்பாடுகளை வாசிக்கவோ அல்லது வாசிக்கக் கேட்கவோ செய்தல்வேண்டும். படுக்கப் போவதற்கு முன்பு பத்து நிமிடம் உட்கார்ந்து தியானம் செய்ய வேண்டும். இம்முறைகளைத் தீவிரமாக அனுஷ்டித்து வந்தால் அதனல் வரும் மனத் தெளிவும் தூய்மையும் தனக்கே நன்கு விளங்கும்.

கேள்வி : (409) ஆசை ஏன் ஏற்படுகிறது? மனிதன் பந்தத்திற்குட்படுவது எங்ஙனம்? பந்தப்படாமலிருக்க வழி என்ன?

உலக ஆசைக்குப் பிறப்பிடம் அக்ஞானம். கீழ்த்தரமான உலக ஆசையும் மனிதனை மேலோனுக்குகிற தெய்விக ஆசையும் ஒன்ருேடொன்று சேர்ந்து இருக்கமாட்டா. அவைகளைக் குறித்துப் பரமஹம்சதேவர் பகர்வதாவது: இராமனிருக்குமிடத்தில் காமன் இல்லை; காமனிருக்குமிடத்தில் இராமன் இல்லை என்பதாம். காமன் என்பது கீழ்த்தரமான உலக ஆசை. அது தோன்றுமிடத்து அது தனக்குப் பொருந்தாது என்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். பட்டுப்புழு தான் உண்டுபண்ணிய கூட்டிலேயே கட்டுண்டு கிடப்பது போன்று

மனிதன் தனக்குத் தானே சிருஷ்டித்துக் கொண்ட உலக ஆசைகளில் கட்டுண்டு உழல் கிறான். உலக ஆசைகளை எல்லாம் அறவே ஒதுக்கித் தள்ளுகின்ற இடத்துத் தெய்விக ஆசை ஆழ்ந்து உரு எடுக்கிறது. பந்தமும் முக்தியும் அவரவர் மனநிலையைப் பொறுத்தது.

கேள்வி : (410) தவவேடத்தில் காட்டிற்குச் சென்ற சீதையிடம் நகைகள் ஏன் இருந்தன?

இராமனும், இலட்சுமணனும் மரவுரி தரித்துத் தவவேடத்தில் இருந்தனர். ஆனால் சீதைக்கு அத்தகைய தவவேடம் அவசியம் இல்லை என்று தசரதரே பகர்ந்தார். ஆகையினால் பெண்பாலர்க்கு இன்றியமையாத ஆபரணங்கள் சிலவற்றை அவள் அணிந்திருந்தாள். அத்துடன் தவத்தின் சின்னமாக அவள் அணிந்திருந்தது மஞ்சள் புடவையேயாம். தற்செயலாக அமைந்திருந்த இக்கோலம் ஒரு நெருக்கடியில் அவளுக்கு நன்கு பயன்பட்டது. இராவணன் அவளைப் புஷ்பக விமானத்தில் வைத்து வானவெளியில் தூக்கிக் கொண்டு போனபொழுது தான் அணிந்திருந்த நகைகளை ஒரு துணியில் முடிந்து சுக்ரீவன் முதலிய சில வானரங்கள் தரையின்மீது அமர்ந்திருந்த இடத்தை நோக்கி அம்முடிச்சைக் கீழே போட்டாள். ஆதலால் அவளைப் பற்றிய துப்பு அறிதற்கு அம்முடிச்சு நன்கு பயன்பட்டது.

கேள்வி : (411) 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை.'—மழைக்கும் மனைவியின் தர்மத்துக்கும் என்ன தொடர்பு?

மனைவி என்பாள் சமுதாயத்தின் ஓர் அங்கமாக அமைந்திருக்கிறாள். சமூகத்திலிருக்கும் மக்களின் மனப்பான்மைக்கும் மழை பெய்தற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மக்களிடத்துள்ள நல்ல மனப்பான்மையே அறச்செயலுக்கு ஏதுவாகிறது. அந்த அறச்செயலே வேள்வி என்று பெயர் பெறுகிறது. மக்கள் முறையாக வேள்வியும் கடவுள் வழிபாடும் செய்து வருவார்களானால் பருவத்தில் நல்ல மழை பெய்கிறது. இக்கோட்பாடு 'தானம் சுருங்கின் வானம் சுருங்கும்' என்னும் நீதி மொழியாக வடிவெடுத்துள்ளது. தாங்கள் சம்பாதிக்கும் செல்வத்தில் ஒரு பகுதியை நல்லவர்கள் சிலரோடு பங்கிட்டுக் கொள்ளும் செயலே தானம் என்னும் பெயர் பெறுகிறது. ஆகவே மக்களுக்கிடையிலே உள்ள சீரிய மனப்பான்மையும் அதனின்று வரும் ஸத்கர்மங்களும் முறையாக மழை பெய்வதற்கு முதற்காரணங்களாகின்றன. மாதம் மும்மாரி பெய்வதற்கு மக்களுள் மூன்று கூட்டத்தார் முதற்காரணமாக அமைகின்றனர். வேதநெறி வழுவாத வேதியர் ஒரு கூட்டத்தார். அறநெறி வழுவாத அரசன் அல்லது அரசாங்கம் மற்றொன்று. மூன்றுவதாக அமைவது கற்புடைய மாதர். இதற்குமாறாகச் சுயநலமும் கீழான மனப்பான்மையும் மக்களுக்கிடையில் தலையெடுக்குமாகில் மழை பொய்த்துவிடும் அல்லது பருவம் தவறிப் பெய்யும்.

கேள்வி : (412) சூத்திரன் தன் முயற்சியால் பிராமணன் ஆகமுடியுமா?

இயற்கையின் நடைமுறையும் இறைவனின் திட்டமும் ஒன்றேயாம். அதில் பிழை உண்டாவதில்லை. ஆனால் பிறப்பை முன்னிட்டு மக்கள் அமைக்கும் கட்டுமானத்தில் பிழைகள் ஏராளமாக உண்டாகின்றன.

'நான்கு வருணங்கள் குணத்தையும் கர்மத்தையும் முன்னிட்டு என்னால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன' என்பது கண்ணன் வாக்கு.

குணமும் கர்மமும் ஒரு மனிதனுக்கு அமைவது பிறப்பை முன்னிட்டு அன்று. மனிதனுடைய இயல்பையும் நாட்டத்தையும் முன்னிட்டே அவன் தனக்கேற்ற கர்மத்தை எடுத்துக்கொள்கின்றான். இக்கோட்பாட்டைப் பரமஹம்ச தேவர் 'இரண்டு சகோதரர்களுக்கிடையில் ஒருவன் சமையற்காரனாக அமைகின்றான், மற்றொருவன் கோவிலில் பூஜைபண்ணும் தொழிலில் அமைகின்றான். இவ்விருவருள் இரண்டாமவனைப் பிராம்மணன் என்றும் முதல்வனைச் சூத்திரன் என்றும் பகர்வதுதான் பொருந்தும்' என்று பாதுபடுத்தினர். இறைவனுடைய திட்டப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் கர்மத்தில் மேல்நிலைக்கு வருகிற சுதந்திரம் உண்டு. இக்கோட்பாட்டை அனுசரித்தே விவேகானந்த சுவாமிகள் உலகில் உள்ள மக்கள் எல்லாரையும் பிராம்மணனாக்குதல் நம் குறிக்கோள் என்று பகர்ந்தார். மக்கள் எல்லாரும் மேல்நிலையை நாடி முயலலாம். இக்கோட்பாட்டின்படி சூத்திரன் பிராம்மணன் ஆகக்கூடும்.

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

பரீக்ஷித்துக் காளையினிடம் இங்ஙனம் பகர்ந்தான் :—" காளையின் வடிவில்தோன்றும் நீர் யார்? நீர் தேவலோகத்தைச் சேர்ந்த தேவரா? நீர் மற்ற கால்களை எப்படி இழந்தீர்? நீர் இங்ஙனம் சஞ்சரிப்பது எங்களுக்கு வருத்தத்தை உண்டாக்குகிறது. குரு வம்சத்து அரசர்கள் குடிகளை நன்கு பாதுகாக்கிறார்கள். மக்களும் க்ஷேமமாய், சந்தோஷமாய் வாழ்ந்து வருகிறார்கள். உம்மைத் தவிர கண்ணீர் சிந்தியவரை ஒருவரையாவது நான் பார்க்கவில்லை. காமதேனுவின் வழிவந்தவரே! இனி மேலும் நீங்கள் கண்ணீர் சிந்தவேண்டாம். இக் கீழோனைக் குறித்து இனிப் பயப்படவேண்டாம்." அதற்கு அடுத்து அந்த ராஜன் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும் அப்பசுவை இங்ஙனம் சமாதானப்படுத்தினான்:— "தாயே! நீயும் கண்ணீர் சிந்தாது சாந்தமாய் இருப்பாயாக. இந்த அதமனை நான் தண்டிக்கிறேன். நான் உயிரோடு இருக்கும்வரையில் நீ க்ஷேமமாய் இருப்பாய். எந்த அரசனின் ராஜ்யத்தில் தீயவர்கள் மக்களைத் துன்புறுத்துகிறார்களோ அந்த அரசன் தன் புகழ், சௌபாக்கியம், அனைத்தையும் இழப்பான். அரசனின் தலையாய கடமை, அவனது புகழையும் சௌபாக்கியத்தையும் வளர்க்கும் செயல் துன்புற்றோரின் துயரம் துடைப்பதே ஆகும். தாயே! சிற்றுயிர்களைத் துன்புறுத்தும் இக்கொடியவனை நான் கொன்று விடுகிறேன்."

பரீக்ஷித்து மீண்டும் காளையைப் பார்த்துக் கேட்டார்:—"சுரபியின் புதல்வனே! நீ நான்கு கால் விலங்கு. உன் மற்ற மூன்று கால்களை வெட்டியவர் யார்? ஸ்ரீ கிருஷ்ணனையே சார்ந்து அவனையே கதியென வாழ்ந்து வந்த குருவம்ச பரம்பரையினராகிய பாண்டவர்கள் ஆட்சி புரியும் இந்த ராஜ்யத்தில் துன்பக்கண்ணீர் விடுவார் உன்னைத் தவிர வேறு யாரையும் நான் காணவில்லை. நீ குற்றமற்றவன், தெய்விகமானவன். உன்னைத் துன்புறுத்தி எங்கள் அரசாட்சிக்கும் களங்கம் உண்டாக்கிய அக்கொடியவன் யார் என்று சொல்லுவாயாக. உனக்கு எல்லா மங்களங்களும் உண்டாகட்டும். குற்றமற்றவர்களை, நல்லவர்களை, யார் துன்புறுத்தியிருந்தாலும் அவன் தேவலோகத்தைச் சேர்ந்தவனாயினும் சரி அவனது இரண்டு கரங்களையும் நான் துண்டிக்கிறேன். தர்மவான்களை, நல்லவர்களை, ஆதரவற்றவர்களைக் காத்தல், காரணமின்றி நல்லவர்களுக்கு இடைஞ்சல் பண்ணும் அரசு ஊழியர்களைத் தக்கபடி தண்டித்தல் ஒன்றே அரசனின் மிகப் பெரிய, தலையாய, கடமையாகும். அது ஒன்றே அரசனைக் காக்கும்."

இவற்றிற்கு விடையாகத் தர்மதேவனாகிய அக்காளை பதிலளித்ததாவது :—"இந்த மிக்க ஆறுதலான சொற்கள் சிறந்த அரசனாகிய உனக்கே தகும். பாண்டவர்களுடைய சிறந்த குணங்களால் கவரப்பட்டவனாக அல்லவா ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுக்கு வாயில் காப்பாளனாகவும், மெய்க்காப்பாளனாகவும் பணி புரிந்தான். அந்தப் பரம்பரையில் வந்த உனக்கும் அந்த மேலான பண்புகள் வாய்த்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அந்தோ! சிறந்த மானுடருள் மாணிக்கமே! இவ்வுலகில் துன்பங்கள் யாரிடமிருந்து வருகின்றன என்பது யாருக்கும் தெரியாது. புதிய நியாயங்கள் பேசப்படுவது நமக்கு மனக்குழப்பத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்குகின்றன. நாஸ்திகர்கள் தம் போக்கில் துன்பங்கள் யாவும் தனக்குத் தானே உண்டாக்கிக் கொண்டவைகள் என்று சொல்லுவார்கள். ஜோசியக்காரன் தன் போக்கில் இந்தத் துயரங்கள், தீமைகள் எல்லாம் கிரஹங்களின் அமைப்பால் உண்டாகின்றன என்பான். மீமாம்சகர்கள் ஜீவனின் கர்மபலன், வினையின் பயனாகத் துன்பங்கள் எல்லாம் வருகின்றன என்று விளக்குவான். நம்மில் சிலர் மனித சுபாவத்திலிருந்து துயரங்கள் எல்லாம் வருகின்றன என்பார்கள். பண்டிதர்களான ஆஸ்திகர்கள் சிலர் துன்ப துயரங்கள் யாவுமே கடவுளிடத்திருந்து வருகின்றன என்பார்கள். கடவுளோ, நம் இந்திரியங்களுக்கும் அறிவுக்கும் அப்பாற்பட்டவராக உள்ளார். ஓ ராஜரிஷியே! நீர் மிகவும் அறிவும் தபசும் உள்ளவர். உம் அறி

வின் தெளிவினுல் உண்மையை நன்கு புரிந்து கொள்ளும் வல்லமையினுல் மேலே சொன்ன வற்றினின்று நேர் உண்மையைச் சரியாக அறியவல்லவர்."

"ஓ சௌனக முனிவரே! பரீக்ஷித்துத் தர்ம தேவனின் அவ்வார்த்தைகளைக்கேட்டுத் தீர்க்க மாய்ச் சிந்தித்தான். அவன் அக்காளை தர்ம தேவன் என்பதை அறிந்துகொண்டான். அத்தர்மதேவனை வணங்கினுன். தர்மத்தை அறிந்திருக்கவும் வேண்டும். எந்த எந்தச் சந் தர்ப்பத்தில் அதை எப்படி அனுஷ்டிக்கவேண் டும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். இரண்டையும் நன்கு அறிந்திருந்தால்தான் சீலம், பண்பு, தர்மம் காத்தல், தர்மவான், தர்ம பராயணராக இருத்தல் அமையும். நமது தர்ம சாஸ்திரங்களில் நமக்கு இடைஞ்சல், தீமை செய்தவர்களை நாம் அறிந்திருந்தாலும் அவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லலாகாது, காட்டித்தரலாகாது. அப்படிக் காட்டித் தந்தால் அதே அளவு பாபம் அவனுக்கும் வந்துசேரு கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அம் முறையில் நீ நேரடியாக உனக்குத் தீமையைச் செய்தவனைப்பற்றிச் சொல்லவில்லை, சூசகமாக அறிவித்துள்ளாய். இம்முறையில் நீ தர் மத்தை நன்கு அனுஷ்டித்தவன் ஆகிருய். ஆகவே காளையின் வடிவில் சஞ்சரித்துவரும் நீ, தர்மதேவன் என்றே கருதுகிறேன். இவ் வுலகில் யாவும் கடவுளின் மாயையினுல், ஈஸ் வர சங்கல்பத்தினுல் நடைபெற்றுவருகின்றன. எது நல்லது, எது கெடுதலானது, எது பாவம் எது புண்ணியம், என்று பாகுபடுத்துவது வெகு சிரமம். கேடு செய்தவன் யார் அதற்கு ஆளானவன் யார் என்று பிரித்துக் கூறமுடியாது. முடிவில் எல்லாம் அவனே. எல்லாம் அவன் செயலே. அவன் அலகிலா விளையாட்டுடையான். இவ்வுலகம் அவனது விளையாட்டுப் பொம்மை. இந்த உண்மைகளை அறிந்தவன் நீ. ஆகவே நீ யாரையும் குறை கூறவில்லை. சத்திய யுகத்தில் உனக்கு நான்கு கால்கள் இருந்தன. அவைகள் சத்தி யம், அன்பு, தூய்மை, பக்தி ஆகும். இவை கள் உலகப் பொருள்களில் மோகம், கர்வம், பொறுமை ஆகிய தீய சக்திகளால் மூன்று கால்கள் அழிக்கப்பட்டுவிட்டன. சத்தியம் என்கிற ஒரு கால் எஞ்சியிருக்கிறது. சத்தியம் என்னும் ஒற்றைக்காலிலேயே இப் பொழுது நீர் சஞ்சரிக்கத் திருவுளம் கொண்டு விட்டீர். ஆனல் வல்லமை மிக்க தீயவனுகிய, கொடியவனுகிய கலிபுருஷனே அந்த ஒற்றைக் காலையும் தகர்த்து எறிய முற்பட்டிருக் கிருன். இப்பசு அன்னை பூமாதேவி என்பதை அறிந்துகொண்டேன். பகவான் பூபாரத்தைத் துடைத்துவிட்டுத் தம் யதாஸ்தானம் ஏகிவிட் டார். இனி தர்ம, பகவத், பிராம்மண துவேஷி களாகிய சூத்திரர்கள், பண்பற்றவர்கள் அரசர் கள் ஆகி இப்பூமியை ஆளப்போகிருர்கள். தூய, பரிசுத்த, உத்தம தாயாகிய அவள் இதைக்குறித்து அபலைப் பெண்போல் வருந்திக் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கிருள்.

இங்ஙனம் தர்மக்கடவுளையும், பூமாதேவியை யும் பரீக்ஷித்துச் சமாதானப்படுத்தினுன், ஆறு தல் மொழிகள் சொன்னுன். எல்லாக் கேடு களுக்கும் காரண புருஷனுகிய அக் கலியைக் கொன்றுவிடத் தீர்மானித்துக் கையில் வாளை ஏந்திக்கொண்டு கலியின் பக்கம் கோபா வேசத்துடன் திரும்பினுன். இதைக்கண்ட கலியானவன் மிகவும் பயந்துபோய்த் தன் ராஜ உடைகளைக் களைந்துவிட்டுப் பரீக்ஷித்தின் கால் களில் நெடுக வீழ்ந்து வணங்கினுன். என் றுமே அன்பு, கருணைமிக்க அரசனுகிய பரீக்ஷித் துக் கலியின் இச்செயலால் அவனைக் கொல்ல வில்லை. அடைக்கலம் என்று சரணடைந்தவனை எந்த அரசனும் கொல்லமாட்டான். தீனர்களி டத்து, ஆதரவற்றவர்களிடத்துப் பரிவுமிக்க வனுகிய பரீக்ஷித்து எங்ஙனம் கொல்லுவான்? ஆகவே கலியைக் கொல்லாது விட்டுவிட்டான். பிறகு கலியைப் பார்த்து இங்ஙனம் பகர்ந் தான்:—ஓ! கலியே! பகவான் ஸ்ரீ கிருஷ்ண வின் தோழராகிய அர்ஜுனரின் குலப் பெரு மையை அவர் ஏற்படுத்தின நற்கொள்கைகளை நாம் காத்து வருகிறோம். நீகைகூப்பி வணங்கி உன் உயிருக்குப் பிரார்த்திப்பதால் உன் னைக்கொல்லாது விடுகிறேன். ஆனல் நீ அதர் மத்தின் நாயகன், துணைவன். ஆனபடியால் நீ நமது ராஜ்யத்தில் எந்தப் பகுதியிலும் எவ் விதத்திலும் வசிக்கலாகாது. நீ இங்கு வசித் தாயானல், வெறுப்பு, பொய், திருட்டு, சுய நலம், வறுமை, வளர்ந்துவிடும். மதம், கடவுள்,

சீலம், ஆகிய நல்லது எதையும் மதிக்காத தன்மை,வளர்ந்துவிடும். ஏமாற்றுதல், சண்டை சச்சரவு, தற்பெருமை, ஆடம்பரம் ஆகியவை யும் விருத்தியாகிவிடும். அதமனே! இந்தத் தேசத்துக்குப் பிரம்மவர்த்தம், பரதகண்டம், புண்ணியபூமி என்ற பெயர்கள் பிரசித்த மானவை. இதன் பிரஜைகள் நேர்மையும் சத்தியமும் வடிவெடுத்தவர்கள். அடக்க மான நல்வாழ்வு உள்ளவர்கள். இந்தப் புண் ணிய பூமியில் மக்கள் பலதரமான வேள்வி களை, துறைகளை, கலை ஞானங்களை அறிந்தவர் களாய் இருந்தும் அவர்கள் கடவுளின், ஸ்ரீ ஹரி யின் பிரீதிக்காகமட்டும் உரிய வேள்விகளையே செய்கின்றனர். தங்கள் வாழ்வையே யக்ஞ சொரூபியாகியஈஸ்வரனிடத்தில் அர்ப்பணித்து விடுகிறார்கள். கடவுளைத் தவிர அவர்களுக்கு இவ்வுலகில் வேறு ஒன்றிலும் நாட்டமே கிடையாது. ஆகையால் இப்புண்ணிய பூமியில் நீ வாழத்தகுந்தவன் அல்லன். வாழக்கூடாது. வாழ்வில் உயர்ந்த லக்ஷியத்தைக் கடைப்பிடிப் பதால் இத்தேசத்துக்குப் புண்ணியபூமி என்று பெயர். வாழ்வில் வணங்கத்தக்கவர், புகழத் தக்கவர், பாராட்டத் தக்கவர், அடையப்பட வேண்டியவர் கடவுள் ஸ்ரீ ஹரி ஒருவரே. அவரைத் தவிர மற்றப்பொருள்களால் நமக்கு என்ன பிரயோஜனம்? அவர் விரும்பி எழுந் தருளியுள்ளமையால் இத்தேசம் ஒரு புண்ணிய க்ஷேத்திரமாகிறது. இந்த லக்ஷியத்தால் உல குக்கே நன்மை, சௌபாக்கியம் உண்டா கிறது. சரம், அசரம், சேதனம், அசேதனம் ஆகிய யாவற்றினூடும் வியாபித்துள்ள அப் பரமாத்மனையே லக்ஷியமாகக் கொள்ளுதல் மானுட ஜன்மத்தின் உயர்ந்த பிரயோஜனம் ஆகும், பாக்கியம் ஆகும்.

சூதர் சொன்னர் :— சௌனகரே! யமனைப் போன்று கையில் கத்தியுடன் உக்கிரமாய் இருந்த பரீக்ஷித்தைப் பார்த்துப் பயந்து நடுங் கிக்கொண்டிருந்த அக்கலி அரசனின் அபய மான இவ்வார்த்தைகளால் மனத்திடம்பெற் றான். அவன் பரீக்ஷித்தைப் பார்த்து இங் ஙனம் பகர்ந்தான்:— அரசர்க்கரசனே! உமது தேசத்தில் நான் வசிக்கலாகாது என உத்திர விட்டீர்கள். நான் வேறு எங்கு வசிப்பது என்று ஒரு முடிவும், எண்ணமும் கொள்ள முடி யாதவனாய் இருக்கிறேன். உத்தமர்களுக்குள் உத்தமமானவரே! கையில் வில்லும் அம்பும் ஏந்தியவனாய் நீர் உலகமெல்லாம் சுற்றிவரு கிறீர். ஆகையால் நீங்களே நான் வசிப்பதற் கேற்ற ஒரு இடம் காட்டியருளுவீராக. அதன் மூலம் தங்களின் கட்டளையை நான் நிறை வேற்றுகிறேன்.

இங்ஙனம் வேண்டிக்கொண்ட கலியைப் பார்த்துப் பரீக்ஷித்து இங்ஙனம் பகர்ந்தான். "சரி! எங்குச் சூதாடுகிறார்களோ, எங்குக்குடிக் கிறார்களோ, எங்கு விபசாரம் நடக்கிறதோ, எங்கு உயிர்ப்பலி இடுகிறார்களோ அவ் இடங் களில் நீ வசித்திரு." ஆனால் கலி தான் வசித் திருப்பதற்கு மேலும் சில இடங்களைக் குறித் தருளுமாறு மிகவும் கெஞ்சிக் கேட்டான். அதன்பேரில் பரீக்ஷித்து அவனுக்குப் பொய், தற்பெருமை, பேராசை, பொறாமை, விரோ தம் ஆகிய இடங்களையும் அவன் வசிப்பதற்கு ஆக்ஞாபித்தான். அபிமன்யுவின் செல்வக் குமரனால் இங்ஙனம் வழங்கப்பட்ட ஒன்பது இடங்களில் அதர்மத்தின் நாயகனாகிய கலி புருஷன் வாழ்ந்து வருகிறான். சன்மார்க்கத் தில், தெய்விகப் பாதையில் செல்லுகிற குடி மக்களும் நேர்மை, நீதியில் நிலைநிற்க விரும்பு கிற நல்ல அரசர்களும், கலி வாழும் இந்தத் தீய இடங்களுக்குப் போகலாகாது.

சூதர் சொன்னர் :— ஓ ரிஷிபுங்கவரே! பரீ க்ஷித்து இங்ஙனம் கலியைத் தண்டித்துத் தர்ம ராஜனுக்கு அன்பு, தூய்மை, பக்தி என்கிற மற்ற மூன்று கால்களைப் புதுப்பித்துக் கொடுத் தான். பூமாதேவிக்கும் அமைதியையும் ஆனந் தத்தையும் நல்கி திருப்திப்படுத்தினான். மிக்க புகழ் வாய்ந்தவனும், மிக்க பராக்கிரமம் வாய்ந்தவனும், ஜெயசீலனுமாகிய பரீக்ஷித்துத் தனது பாட்டனாரும் அதி ஆச்சர்யமான தர் மிஷ்டனும் ராஜரிஷியுமான தர்மராஜா யுதிஷ் டிரரின் உயர்ந்த சிம்மாசனத்தில் வீற்றிருந்து நன்கு ஆட்சிபுரிந்தான். புகழ்மிக்க தன் முன் னோர்கள், மூதாதையர்கள் மகிழும்வண்ணம், தன் குருவம்சம் பெருமையடையும் வண்ணம் ஆட்சிபுரிந்தான். அவனது நேர்மையான ஆட்சியினால் நீங்கள் எல்லாரும்சத்காரியங்களி லும், யக்ஞம், தானம், தபஸ் ஆகிய காரியங் களிலும் தடையின்றி ஈடுபட்டு வருகின்றீர்கள்.

அத்தியாயம் 18

ஓ பிராம்மணோத்தமரே, தாயின் கர்ப்பத்தில் இருந்தபோதே அஸ்வத்தாமனின் பிரம்மாஸ்திரத்தால் பரீக்ஷித்துத் தகிக்கப்பட்டான். பிறகு தீராத விளையாட்டுப்பிள்ளையாகிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணனது அருளினால் காப்பாற்றப்பட்டான். கருவிலேயே திருவுடையவனாகிய பரீக்ஷித்து ஒரு பூரணமான பக்தன். அதனால்தான் தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒரு சாபத்தினால் தக்ஷன் என்னும் பாம்பு அவனைத் தீண்டியபோதும் அவனுக்கு மரண பயம் ஏற்படவில்லை. மனதை ஸ்ரீ கிருஷ்ண ஸ்மரணையிலேயே நிலைத்திருக்கச் செய்ய முடிந்தது அவன் சுகதேவரைக் குருவாக ஏற்றான். அவன் ஸ்ரீ கிருஷ்ணனின் லீலா விநோதங்களையும் அற்புத தத்துவங்களையும், சரித்திரத்தையும் நன்கு தெரிந்துகொண்டான். இந்த ஞானம், பக்தியின் விளைவாக அவன் எளிதில் உலகப் பற்றுக்களை உதறி எறிய முடிந்தது. கிருஷ்ண ஸ்மரணையில் நிலைபெற்ற வண்ணம் அவன் கங்கைக் கரையில் உடலை உருக்க முடிந்தது. யாரெல்லாம் இங்ஙனம் ஹரி கதா காலக்ஷேபத்தில் சதா ஈடுபட்டு அந்த ஆனந்தத்தில் திளைத்திருக்கிறார்களோ, என் பிரபு ஹரியின் திருவடிகளையே சதா தியானிக்கிறார்களோ, அவர்கள் மரணகாலத்தில் மோஹமடையமாட்டார்கள், கலங்கமாட்டார்கள். ஹரிபஜனம், ஹரி ஸ்மரணை வாழ்வின் முடிவில் சாவின் கொடுரத்தையும் ஸ்மசானத்தின் வெற்றியையும் அற்பமானவைகளாகச் செய்துவிடும். பரீக்ஷித்தின் அந்திய காலம் மகோன்னதமாய் அமைந்தது. அவன் உத்தம பக்தன், நேர்மையான அரசன். ஸ்ரீ கிருஷ்ணன் பூலோக லீலையை முடித்துவிட்டு வைகுண்டம் ஏகியதும் கலிபுருஷன் இவ்வுலகில் பிரவேசித்தான். அப்போது பரீக்ஷித்தின் தர்மராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவன் நேர்மை, சீலம், வல்லமை, பக்தி எல்லாம் வாய்க்கப் பெற்றவனாக இருந்தமையினால் கலியின் ஆதிக்கம், செயல் பரவாமல் இருந்தது.

சக்கரவர்த்தியாகிய பரீக்ஷித்துத் தேனீ போன்றவன். உயர்ந்த பண்டமாகிய தேன் ஒன்றையே அது நாடும், சேகரிக்கும். அதே போல பரீக்ஷித்தும் உயர்ந்த விஷயங்களையே நாடினான், அவற்றின் உட்பொருளை நன்கு கிரஹித்துக் கொண்டான். கலியுகத்தில் நல்ல செயல்கள், புண்ணிய கர்மங்கள் உடனே பலன் தந்து விடும். அவைகளின் பலன் விரைவில் கிட்டிவிடும். ஆனால் தீய செயல்களோ, பாப கர்மமோ விரைவில் பலன் தராது. அவை நின்று கொல்லும். நல்ல சங்கல்பம், எண்ணம் உண்டான மாத்திரத்தில் பலன் கிட்டும். தீய எண்ணம் செயல்பட்டால்தான் பாப பலனைத் தரும். இது கலியுகத்தின் அமைப்பு. பரீக்ஷித்து இதை நன்கு அறிந்திருந்தான். காட்டில் தன் இரையைத் தேடி புலி ஒன்று அலைந்து திரிவதைப் போல பாமர மக்களையும் நல்ல அனுபவம் வராத குழந்தைகளையும் தன் வசப்படுத்த கலி பெரிதும் முயன்றான். ஆரம்ப நிலையில் அவன் ஆதிக்கம் அதிகம் செல்லவில்லை. தீமை அதிகம் பரவவில்லை. ஆகையினால் கலியின் தோஷங்களை அறிந்தும் அவனைக் கொல்லாது பரீக்ஷித்து விட்டு விட்டான். பிராமண சிரேஷ்டரே! பரீக்ஷித்தின் உயர்வான சீலமான வாழ்வைப்பற்றி நீர் கேட்டீர். இவைகள் எல்லாம் மனதை உயர்த்தும் நல்ல ஆசைகள். ஸ்ரீ கிருஷ்ணனது லீலைகளையும் அற்புதச் சரித்திரத்தையும் சொன்னதுடன் சேர்ந்து பரீக்ஷித்து வரலாறும் அமைந்தது. கடவுளின் லீலைகளையும் அருட் கதைகளையும் கேட்பது மானுடர்க்குத் தலையாய நன்மை பயக்கும். ஸ்ரீ கிருஷ்ணனது லீலைகளைச் சொன்னவனாகிய நானும் கேட்டவர்களாகிய நீங்களும் நற்பயன் அடைவோம்.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் மூன்று பகுதிகள் இருக்கின்றன, பகவானுடைய பெருமைகளையும், லீலைகளையும் ஒரு முகப்பட்ட மனதுடன் கேட்டல் சிரவணம் எனப்படுகிறது. கேட்டவற்றை மனதால் சிந்திப்பது அல்லது தியானிப்பது மனனம் எனப்படுகின்றது. எதைப்பற்றி மன ஒரு முகப்பாட்டுடன் சிந்திக்கின்றேமோ அல்லது தியானிக்கின்றேமோ அது நமக்குத் தெளிவாகின்றது. கடவுளைப் பற்றிய மகிமைகள் ஐயம் திரிபு அற நம்மனதுக்கு விளங்குகின்றபொழுது தெளிதல் அல்லது நிதித்தியாசனம் கைகூடுகின்றது.

சுவாமி பிரேமானந்தர் வாழ்வும் வாக்கும்

(பிரம்மச்சாரி சேகர்)

[152ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேறுசில சந்தர்ப்பங்களில் பரமஹம்சர் கல்கத்தாவுக்குச் செல்லும்பொழுது பாபுராமிற்குத் தாம்கொண்டுசென்ற தின்பண்டங்களைத் தம் கையாலேயே ஊட்டிவிடுவார். எல்லாவற்றுக்கும் மேலாகப் பாபுராமிடமிருந்து நீண்ட நாள் தாம் பிரிந்திருக்கநேரிட்டால் பரமஹம்ச தேவர் ஒரு குழந்தையைப் போன்று தேம்பித் தேம்பி அழுவார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவருக்கு அவ்வப்பொழுது ஏற்பட்ட தெய்விகப் பரவச நிலைகளும் தக்ஷிணேசுவரத்தின் மிகப் புனித மான சூழ்நிலையும் சேர்ந்து பாபுராமினுடைய மனதில் இறைவனைச் சாக்ஷாத்கரித்தாக வேண்டும் என்ற பேராவலைத் தீவிரமாக்கின. தமக்கும் தெய்விகப் பரவச நிலை கிடைக்க அருள்புரிய வேண்டும் என்று அவர் ஸ்ரீ ராம கிருஷ்ணரிடம் மீண்டும் மீண்டும் கேட்டுவந்தார். "திவ்விய மாதாவிடம் இதுபற்றிக் கேட்டுப் பார்க்கிறேன்" என்றார் பரமஹம்சர். "குழந்தாய், என் இச்சைப் பிரகாரம் ஏதும் நடக்கிறதா என்ன?" என்று பரமஹம்சர் மேலும் இயம்பினர். "தாயே, தயவு கூர்ந்து பாபுராம் ஓரளவு பாவ சமாதியில் திளைத்திருக்கும்படி அருள்புரிவாயாக" என்று உருக்கமாக அவர் அன்னையின் சந்நிதியில் பிரார்த்தித்துக் கொண்டார். பின்னல் ஒரு சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் குறித்துப் பரமஹம்சர் தம் பக்தர்களிடம், "பாபுராமிற்குப் பாவ சமாதி கிடைக்கும் பாக்கியம் இல்லை; அதற்குப் பதிலாக, இறைவனைப்பற்றிய ஞானத்திற்கு மட்டும் அவன் உரியவனுவான் என்று அம்பிகை என்னிடம் கூறியருளினுள்" என்று உரைத்தார். "குறைந்தபட்சம் பாபுராம் மனச் சாந்தியையாவது அதன்மூலம் அடைவான்; நான் அவனைக் குறித்துப் பெரிதும் துயருற்றிருந்தேன்" என்று மகிழ்ச்சி உற்றவராகப் பரமஹம்சதேவர் மொழிந்தார்.

பரமஹம்ச தேவரின் அந்திமக் காலத்தில் அவர் கல்கத்தா மாநகரின் புறநகர்ப் பகுதி யான காசிப்பூர் தோட்டத்திலிருந்த வீட்டிற்குக் கொண்டுசெல்லப்பட்டார். அப்பகுதி நெடுந்தொலைவில் இருந்ததால் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இளம் சீடர்களில் பலர் தம் வீடுகளிலிருந்து வந்து போய்க்கொண்டிருப்பதற்குப் பதிலாகப் பரமஹம்ச தேவருடனேயே தங்கி இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவ்வாறு காசிப்பூரில் தங்கி மனப்பூர்வமாக ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை புரிந்தவர்களுள் பாபுராமும் ஒருவர். பரமஹம்ச தேவரின் இறுதிக் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. பக்தர்கள், சீடர்கள் அனைவருடைய விருப்பத்திற்கும் மாறாக இறைவன் இச்சைப் படி 1886ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினாரும் நாள் திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் உடலை உகுத்து விட்டு மஹா சமாதி எய்தினர்.

இந்தக் கருணை ததும்பிய எளிமையே உருவெடுத்த இறையருளாளர் தங்களுடைய வாழ்க்கை முறையை அடியோடு மாற்றியமைத்திருந்ததைத் துன்பத்தில் ஆழ்ந்திருந்த இளம் சாதுக்கள் உணர்ந்தார்கள். திடீரெனத் தாங்கள் எல்லாரும் சகிக்கவொண்ணுத் தனிமையில் விடப்பட்டிருந்ததையும் அவர்கள் உணர்ந்தார்கள். பரமஹம்சதேவர் உலக வாழ்க்கையை நீத்த பின்னர் அவருடைய கரைகாணமுடியாத அன்பும், கருணையும், அப்பழுக்கற்ற ஆப்த மொழிகளும், மிக ஆழ்ந்து வேரூன்றியிருந்த இறையுணர்வும் சீடர்களுடைய உள்ளத்தில் நினைவலைகளாக எழுந்து கொண்டேயிருந்தன. ஆயினும், அளவுகடந்த துயரம் தியாக வாழ்க்கையில் அவர்கள் கொண்டிருந்த மாரு உறுதியை அசைக்கமுடியவில்லை. பரமஹம்ச தேவரின் சீடர்களில் பலர் கல்கத்தாவிற்கு அருகில் இருந்த வராஹ நகருக்குச் சென்று பாழடைந்துகிடந்த ஒரு வீட்டைத் தேடிப்பிடித்து அதில் தங்கித் தம் கடுமையான தவப்பயிற்சிகளை மேற்கொண்டார்கள். டிசம்பர் மாதத்தில் ஒருநாள் பாபுராமின் அன்னையார் பாபுராமையும் நரேந்திரரையும் அன்ட்பூருக்கு வரும்படி

கேட்டுக்கொண்டார். அங்ஙனம் அவர்களிருவரும் புறப்பட ஆயத்தமானபோது அவர்களுடைய குருசகோதரர்கள் ஏழுபேர் உடன் புறப்பட்டார்கள். எல்லாரும் பக்தி ததும்பிய கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டே பாபுராமின் கிராமத்தை நோக்கிச்சென்றனர்.

அன்ட்பூரில் வாசம் செய்த பொழுது அவர்கள் மணிக்கணக்காக ஸத்ஸம்பாஷணையிலும் தியானத்திலும் ஈடுபட்டு வந்தார்கள். ஒரு நாள் மாலை வீட்டின் வெளி முற்றத்தில் அக்னியை வளர்த்து அதைச் சுற்றி அனைவரும் அமர்ந்துகொண்டனர்; அப்படியே தியானத்தில் ஆழ்ந்து மூழ்கி விட்டனர். நெடுநேரம் கழித்து நரேந்திரர் துறவு வாழ்க்கையின் அவசியத்தைப் பற்றியும் கிறிஸ்துநாதருடைய சீடர்கள் அவருடைய போதனைகளை நாற்றிசைகளிலும் எடுத்துச் செல்வதற்கு முன்னால் எவ்வாறு ஓரிடத்தில் தங்களைப் போன்றே கூடியிருந்தனர் என்பதைப் பற்றியும் விரிவாகக் கூறினர். செயின்ட் மாத்யுவின் வார்த்தைகளைப் பின்வருமாறு மேற்கோள் காட்டிப் பேசினர்: "நரிகளுக்கெல்லாம் தங்குமிடம் உள்ளது; காற்றில் உலவும் பறவைகளுக்கோ கூடுகள் உள்ளன; ஆனல், இந்த இளைஞர்களுக்கு மட்டும் தலை சாய்க்க ஓரிடம் இல்லை.'' அந்தப் புனிதமான கூட்டத்தினர் செய்ததுபோலவே தம் குருசகோதரர்களும் உலகத்தை முற்றிலும் துறந்துவிட்டு ஆத்மாவின் பரிபூரண சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தும் பொருட்டு மக்களிடையே கிளம்பிச் செல்லவேண்டும் என்று நரேந்திரர் கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்ச்சி நடந்து முடிந்த பிறகுதான் அன்றைய மாலைப்பொழுது கிறிஸ்துமஸ் நாளுக்குரியது என்று அவர்கள் அறிந்தார்கள்!

அவர்கள் வராஹநகருக்குத் திரும்பி வந்தவுடன் சன்னியாசிகளுக்கே உரிய விரஜாஹோமத்தை முறையாக நடத்திச் சாதுக்களுக்குரிய திருநாமங்களை ஏற்றுக்கொண்டார்கள். அன்புத் தேவதையாகிய ராதையின் பிரேமை கலந்த ஓர் அம்சம் பாபுராமிடம் உருவெடுத்து விளங்கியது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியிருந்ததை உறுதிப்படுத்தும் வண்ணம் நரேந்திரர் பாபுராமுக்குப் பிரேமானந்தர் என்னும் பொருத்தமான பெயரைச் சூட்டினர். வராஹநகரில் வசித்துவந்த காலமெல்லாம் பாபுராம் பரமஹம்ஸ தேவரைப் பற்றிய சிந்தனையிலேயே இடையருது மூழ்கியிருந்தார். இதற்குத் திருஷ்டாந்தமாக, சுவாமி துரியானந்தர் தம் குரு சகோதரராகிய பிரேமானந்தருக்கு 1915ஆம் வருஷம் நவம்பர் இருபதாம் நாள் எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "உனக்குள்ளே பரம்பொருளின் நினைவைத் தவிர வேறு எதற்கும் இடம் கிடையாது. ஒவ்வொரு பொருளும் உனக்கு இறைவனின் சான்னித்தியத்தையே நினைவூட்டுவதாக என்னிடம் முன்பொருமுறை கூறியிருக்கிருய். கோபிமார்களின் கண்களுக்குக் காண்பவையெல்லாம் பரமாத்மாவாகிய கிருஷ்ணனுகவே தோன்றின என்னும் கோட்பாட்டிலுள்ள உண்மையை நான் அன்றுதான் பூரணமாக அறிந்துகொண்டேன். இவ்விஷயம் குறித்து உனக்கு ஞாபகம் இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆனல் என் உள்ளத்தில் அது ஆழப் பதிந்துள்ளது. இறைவனுடன் ஐக்கியமாகிவிட்ட மனப்பாங்கு எத்தகையதாயிருக்கும் என்பதை நான் அன்று கண்டுகொண்டேன்.''

அந்தக் காலத்தில் குரு சகோதரர்களுக்கிடையில் சகோதரர்கள் என்ற உணர்வும் பரமானந்தமும் விரவிக் காணப்பட்டன. இதைப் பற்றிப் பிரேமானந்தர் கூறுகிருர்: "நாங்கள் வராஹநகரிலிருந்தபோது எங்கள் ஒவ்வொருவரிடத்திலும் விளங்கிய நல்ல அம்சங்களையே சிலாகித்துப் பெருமிதம் கொள்வோம். யாரிடத்தும் குற்றங்காணமாட்டோம். விவேகானந்த சுவாமிகள் 'சாதுக்கள் அனைவரும் அதிகாலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் படுக்கையைவிட்டு எழுந்துவிட வேண்டும்' என்று ஒரு விதியை ஏற்படுத்தியிருந்தார். இதில் அணுவளவேனும் தவறியவர்கள் அன்றைய பொழுதை இரந்துண்டு கழிக்கவேண்டும் என்னும் விதியையும் ஏற்படுத்தினர். ஒரு நாள்காலை சுவாமி பிரேமானந்தருக்குக் குறித்த நேரத்தில் எழுந்திருக்க முடியாமல் போய்விட்டது. விவேகானந்த சுவாமிகள் சாது ஒருவரிடம் மணி ஒன்றைக் கொடுத்து அதைச் சுவாமி பிரேமானந்தரின் செவிக்கருகில் ஒலிக்கச் செய்யும்படி பணித்தார். மணி ஓசை கேட்டவுடன் திடுக்கிட்டு எழுந்த சுவாமி

பிரேமானந்தர் தாம் நீண்ட நேரம் உறங்கி விட்டதை உணர்ந்துகொண்டார். நேரே விவேகானந்த சுவாமிகளிடம் சென்று, "சகோதரரே, இன்று நான் எழுந்திருக்கத் தாமதமாகி விட்டது. ஆசிரமவிதிப்படி நான் தண்டனையை ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்" என்று பணிவுடன் கூறினர். கங்குகரையற்ற கருணையுடன் சுவாமி விவேகானந்தர் சுவாமி பிரேமானந்தரைப் பார்த்துக் கூறினர்: "உனக்கு ஏதாவது தண்டனை கொடுக்க எனக்குச் சாத்தியப்படும் என்று நீ எவ்வாறு நினைக்க முடிந்தது?" இவ்வாறு சொல்லிக் கொண்டிருந்த போதே அவர் கண்களினின்று கண்ணீர் பெருக்கெடுத்துக் கன்னங்களில் வழிந்தோடியது. இதைக் கண்ணுற்ற சுவாமி பிரேமானந்தரும் மனம் உருகிப் போனர்; அவரும் கண்ணீர்சொரிய ஆரம்பித்துவிட்டார்! இவர்கள் அன்றோ குரு சகோதரர்கள்!

இத்தகைய உணர்ச்சிமயமான வேளையில் சுவாமி பிரேமானந்தர் மெதுவாகப் பகர்ந்ததாவது. "இப்பொழுது யார் தண்டிக்கப்பட வேண்டும் என்பதன்று பிரச்னை. யார் குறித்த நேரத்தில் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லையோ அவர் அன்றையப் பொழுதை இரந்துண்டு கழிக்கவேண்டும் என்பதுதான் முக்கியமான விஷயம்" என்று அவர் உறுதியான குரலில் இயம்பினர். 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும்' என்பது பொய்யாமொழி. எனவே, சுட்டிக்காட்டப்பட்ட தவறை ஒப்புக்கொண்டு பிரேமானந்தர் பிச்சை எடுக்கும் பொருட்டு மடத்தைவிட்டு வெளியேறினர்.

1887ஆம் ஆண்டு சுவாமி சாரதானந்தர், சுவாமி அபேதானந்தர், சுவாமி பிரேமானந்தர் ஆகிய மூவரும் பூரி ஜகந்நாதர் ஆலயத்திற்குச் சென்றுவர முடிவுசெய்தார்கள். அவ்வாறே அவர்கள் புறப்பட்டுச் சென்று ஆங்கிருந்த ஒரு மடத்தில் தங்கினர். ஆலயத்திலிருந்து கிடைத்த பிரசாதத்தை மட்டும்தான் உண்பது என்று அவர்கள் தீர்மானித்துக்கொண்டார்கள். பூரி நகரில் இருந்தபோது சுவாமி பிரேமானந்தர் டைபாயிடு ஜுரத்தால் பாதிக்கப்பட்டுப் பெரிதும் வேதனையுற்ருர். குரு சகோதரர்களின் கண்காணிப்பாலும் சிகிச்சையாலும் சுவாமி பிரேமானந்தர் விரைவில் குணமடைந்தார். ஆறுமாத காலத்திற்குப் பிறகு அவர்கள் வராஹநகருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

மீண்டும் 1895ஆம் வருஷம் சுவாமி பிரேமானந்தர் ஸ்ரீ கிருஷ்ணன் ராதை முதலிய கோபிமார்களுடன் தெய்வீக லீலை நிகழ்த்திய புனித க்ஷேத்திரமான பிருந்தாவனத்திற்குச் சென்று பல மாதங்கள் தங்கியிருந்தார். அங்கிருந்தபொழுது நாளின் பெரும்பகுதிநேரத்தை இறைவனைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பதிலேயே அவர் செலவிட்டார். ஒவ்வொரு நாளிலும் பிற்பகல் அல்லது மாலை வேளையில் அவர் ஆலயங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசிப்பார். தெய்விகச் சூழல் நிறைந்த அந்தப் புனித பூமி சுவாமி பிரேமானந்தரின் உள்ளத்தில் ஆழ்ந்த பக்தியுணர்வைக் கிளப்பிவிட்டது. தாம் சந்திக்க நேர்ந்த பெண்பாலர்கள் யாவரையும் பராசக்தியின் தோற்றங்களாகக் கருதிப் பணிந்து வணங்குமளவுக்கு அவர் பக்திப் பிரவாகத்தில் மூழ்கியிருந்தார். 1897ஆம் ஆண்டு விவேகானந்த சுவாமிகள் தம் முதல் அமெரிக்க விஜயத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி பண்ணிவிட்டுத் தாய்நாடு திரும்பிவிட்டார் என்ற செய்தி சுவாமி பிரேமானந்தர் காதுக்கு எட்டியது. பிருந்தாவனத்தை விட்டுப் புறப்பட மனமில்லாதவராக இருந்தும், சுவாமி பிரேமானந்தர் விவேகானந்த சுவாமிகளைப் பார்த்தாகவேண்டும் என்ற ஆவல் உடையவராய்க் கல்கத்தா நகருக்குத் திரும்பினர்.

வரும் வழியில் அப்போது ஜயராம்பாடியில் தங்கியிருந்த புனித அன்னையாரை அவர் தரிசித்தார். ஜயராம்பாடியில் அவர் இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார். ஒருநாள் வெளியே உலாவச் சென்றபொழுது ஒரு சிறிய குளத்தில் கணக்கிலடங்காத தாமரைப் புஷ்பங்கள் மலர்ந்திருந்ததைச் சுவாமி பிரேமானந்தர் கவனித்தார். உடனே அந்த மலர்களைக் கொண்டு புனித அன்னையாருக்குப் பாதபூஜை செய்யவேண்டும் என்ற பேராவல் அவருக்கு ஏற்பட்டது. எனவே அந்தக் குளத்திற்குள் இறங்கித் தமக்குத் தேவையான மலர்களைப் பறித்துக்கொண்டு அவர் கரையேறினர். ஆனல் அந்தோ! அவருடைய உடலின்மீது

நீர்வாழ் அட்டைகள் பல பற்றிக்கொண்டிருந்ததை அவர் பார்த்தார்; அவருடைய உடல் முழுதும் ஒரே இரத்தமயமாகிவிட்டது. அத்தோற்றத்தில் அவர் அன்னையாரின் முன் பிரசன்னமானபோது அன்னையார் பதறிப் போனார். அதுபோல் இன்னொருமுறை நடந்து கொள்ளக்கூடாது என்று அவர் பரிவுடன் சுவாமி பிரேமானந்தரைக் கடிந்துகொண்டார்.

1902ஆம் வருஷம் பேலூர் மடத்தில் இருந்தபொழுது விவேகானந்த சுவாமிகள் உடலை உகுத்துவிட்டார். ஈடு செய்ய இயலாத அந்த இழப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கத்தைச் சேர்ந்தவர்களனைவரையும் ஸ்தம்பிக்கச்செய்துவிட்டது. ஆயினும் சுவாமி பிரம்மானந்தர் அவர்கள் தலைமைப் பொறுப்பில் உடனடியாக அமர்ந்துகொண்டு திசை தெரியாமல் தவித்துக்கொண்டிருந்த சகோதரர்களுக்கெல்லாம் வழிகாட்டத் தொடங்கினர். பேலூர் மடத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுவதும் சுவாமி பிரேமானந்தரிடம் விடப்பட்டது. அவர் தாம் அதற்குப் பொருத்தமானவராக இருந்தார். அந்தப்பொறுப்பை ஏற்கக்கூடிய மன உறுதியும் பேரன்பும் இயற்கையாகவே அமைந்திருந்தது. இளகிய சுபாவமும் அவரிடம் அமைந்திருந்தது. மேலும், அவர்தாம் அந்தப் பொறுப்பை ஏற்ருகவேண்டும் என்று பலரிடமிருந்தும் கோரிக்கைகள் கிளம்பின. சுவாமி பிரேமானந்தர் தாம் பூஜைக் காரியங்களைச் செய்துகொண்டு இளப்பிரம்மச்சாரிகளுக்குப் பயிற்சியளிப்பவராகவும், பக்தர்களையும் விருந்தினர்களையும் வரவேற்று உபசரிப்பவராகவும், ஆன்மீக விஷயங்களில் அனைவருக்கும் வழிகாட்டுபவராகவும் இலங்கினர். மிகக்கடினமான இப்பொறுப்புக்களைச் சுவாமி பிரேமானந்தர் மிக மகிழ்ச்சியுடனும் பேராற்றலுடனும் செய்து சாதித்தார்.

நாளடைவில், சுவாமி பிரேமானந்தருடைய இளகிய மனப்பான்மையும் மடத்தைச் சேர்ந்த இளம் சாதுக்களைப் போற்றிப் பாதுகாக்கும் பாங்கும் அவருக்கு "மடத்தின் தாய்" என்ற பட்டத்தைத் தேடித் தந்தன. அன்பு இத்தன்மையுடையது என்று வெறும் வார்த்தைகளால் விளக்கிக்கூற இயலாது. அதை மனப்பூர்வமாக உணர்ந்து பார்க்க வேண்டும். ஆகையால்தான் சுவாமி பிரேமானந்தர் கொண்டிருந்த பேரன்பு சக சாதுக்களிடம் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை வைத்துக்கொண்டுமட்டும் அதை எடைபோட முயல்வதில் நாம் தவறிவிட நேர்கிறது. சுவாமி பிரேமானந்தரின் அன்புகனிந்த உள்ளத்தின் மகிமையை விளக்கும் பொருட்டு அவருடன் பணியாற்றிய சுவாமி ஞானேசுவரானந்தர் என்ன கூறியிருக்கிருர் என்று பார்ப்போம்:

"சுவாமி பிரேமானந்தர்பால் விளங்கிய அபரிமிதமான அன்பு அவரை 'மடத்தின் தாய்' என்ற ஸ்தானத்துக்கு உயர்த்தியது. ஆயினும் அவ்வப்பொழுது அவர் கடுமையாக நடந்துகொண்டபோதெல்லாம் எங்களுடைய நன்மையின் பொருட்டேயாம். என்னையும் அவர் ஒருமுறை கடுமையாகத் திட்டிவிட்டார். அப்பொழுது பகவத்கீதையைப் பற்றிய சம்பாஷணை நடைபெற்றுக்கொண்டிருந்தது. 'நானும் அதைப் படித்திருக்கிறேன்' என்று கூறினேன். உடனே, சுவாமி பிரேமானந்தர், குழந்தாய்! நான் படித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல். நான் படித்திருக்கிறேன் என்று ஒரு பொழுதும் கூருதே. யாரும் பகவத்கீதையைப் படித்து முடித்துவிட முடியாது.

மற்ருெரு முறை நாங்கள் மடத்தைச்சேர்ந்த தோட்டத்தில் களை எடுத்துக்கொண்டிருந்தோம். சுவாமி பிரேமானந்தர் இதைப் பார்த்துக்கொண்டிருந்தார்; களை பறித்துக்கொண்டிருந்தவர்களில் ஒருவர் களைகளை வேரோடு கிள்ளி எறியாததைக் கவனித்துவிட்டார். அவரைத் தம் அருகில் அழைத்துச் சுவாமி பிரேமானத்தர் கூறியதாவது: "குழந்தாய்! நீ களையை வேரோடு பிடுங்கி எறிந்துவிட வேண்டும். இல்லையென்ருல் நீ உன்னையே முட்டாளாக்கிக் கொண்டும் உன் நேரத்தை வீணடித்துக் கொண்டும் இருக்கிருய் என்று பொருள்படுகிறது. தோட்டத்தில் இருக்கும் களையை எப்படி நீக்குவது என்று உனக்குத் தெரியாவிட்டால், உன் இயல்பில் பதிந்து போய் இருக்கும் குற்றங்களையெல்லாம் நீ எப்படிக் களைந்து நீக்க முடியும்? சாதனை என்பது குற்றங்களை நீக்குவதாகும். இங்ஙனம் களை பிடுங்குவதையும் சாதனையாகச் செய்ய வேண்டுமென்பதை விளக்கினர். (தொடரும்)

உலகிற்கு உயர் கல்வி அளித்த ஆசிரியர் யார்?

(யதீஸ்வரி சாரதாப்ரியா)

உலக மக்கள் அனைவரிடத்தும் பெருங்கருணை கூர்ந்து அவர்கள் உய்வு அடையும் பொருட்டு அரிய, பெரிய கருத்துக்களை இனிய, எளிய நடையில் உலகுக்கு வழங்கிய நமது உன்னதத் தாய் எந்தப் பள்ளியிலும் சென்று கல்வி பயின்றவர் அல்லர்; கல்லூரியைக் கண்டவர் அல்லர்; யாரிடத்தும் உபதேசம் பெற்றவர் அல்லர். ஆனால் அவர் புகட்டிய கருத்துக்களோ மிகவும் மகோன்னதமானவைகள். மிக உயர்ந்தகல்வி என்று கூறுமிடத்து அது ஆத்ம ஞானம் அடையப் பெறுவது தான். அவதார வரிஷ்டராகத் தோன்றிய பகவான் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் முதன்முதலில் மகேந்திரரோடு உரையாடும்போது, "உன் மனைவி எப்படிப்பட்டவள்?" என்று கேட்கின்றார். அதற்கு மகேந்திரர் "அவள் நல்லவள், ஆனால் அக்ஞானி" என்று விடை பகர்கின்றார். உடனே பரமஹம்சர் "நீ ஞானியோ?" என்று அவரது ஏட்டுக்கல்வியின் அகந்தைக்கு ஓர் அடி கொடுக்கின்றார். ஏட்டுக் கல்வி மட்டும் கல்வி அன்று என்பதற்கு இது சான்றாகிறது.

ஔவைப் பிராட்டியார் "கற்றது கை மண் அளவு, கல்லாதது உலகளவு" என்று கூறுகின்றார். மிகவும் கஷ்டப்பட்டுப் பாடம் பயின்று பட்டதாரி ஆகி ஒரு வேலையில் அமர வேண்டும் என்னும் முக்கியக் குறிக்கோளுடன் தான் பெரும்பாலோர் இக்காலத்தில் கல்வி பயிலுகின்றனர். செல்வம் சேகரிப்பதால் மட்டும் மனச் சாந்தியைப் பெற்றுவிட முடியாது. உலக மக்கள் அனைவரும் படாதபாடு படுவது இவ்வுலக இன்பங்களைப் பெறுவதற்காகத்தான். ஆனால், இவ்வுலகப் பொருள்கள் எதுவும் நிலைத்த இன்பத்தைத் தரமாட்டா. நிலையான இன்பத்தை அடைய வழி என்ன என்று ஆராய்ச்சி செய்யவேண்டும். நாம் ஒவ்வொருவரும் மிகவும் நல்லவர் என்றும் மற்றவர்கள்தாம் குறைபாடுகள் உடையவர் என்றும் கருதிக்கொண்டிருக்கிறோம். எந்த ஒரு தவறும் பிறரால்தான் ஏற்படுகிறது என்றும் கருதிக்கொண்டிருக்கிறோம். ஆனால், சான்றோர்கள் அவரவர் மனபரிபாகத்திற்கு ஏற்பத்தான் இவ்வுலகம் காட்சி அளிக்கிறது என்று கூறுகின்றனர். நல்ல மனம் உடையவர்க்கு இவ்வுலகம் நலன் நிறைந்ததாகக்காட்சி அளிக்கிறது. கெட்ட மனம் உடையவர்க்கு இவ்வுலகம் கேடு உடையதாகக் காட்சி அளிக்கிறது. இதற்குச் சான்றாக மகாபாரத நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் குருவாக அமைந்த துரோணாச்சாரியர் தர்மராஜனை அழைத்து இவ்வுலகில் கேடு உடையவர் யாராவது இருக்கின்றனரா என்று பார்த்து வரும்படி அனுப்புகின்றார். தர்மருக்குச் சுற்றிப்பார்த்ததில் ஒரு கெட்டவன் கூடத் தென்படவில்லை. எல்லாரிடத்திலும் ஏதோ ஒரு நலன் இருப்பதே அவருக்குப் புலப்பட்டது. அவரது மன பரிபாகத்தின் விளைவு இது. துரியோதனனை அழைத்து நல்லவர் யாராவது இருக்கின்றனரா என்று ஆராய்ந்து வரும்படி துரோணாச்சாரியர் அனுப்புகின்றார். அவன் சுற்றிப்பார்த்தபின் ஒரு நல்லவன்கூட இல்லை என்று திரும்புகின்றான். எல்லாரிடத்திலும் உள்ள கேடே அவன் கண்ணுக்குத் தென்பட்டது. அவனது மனபரிபாகத்தின் விளைவு இது. ஒரே குடும்பத்தில் பிறந்து ஒரே சூழ்நிலையில் வளர்ந்து ஒரே குருவினிடம் பயிற்சி பெற்ற இருவருக்கும் ஒரே உலகம் வெவ்வேறுவிதமாகக் காட்சி அளித்தது. ஆகவே ஒவ்வொருவரும் அவரவர் குற்றத்தை நன்கு கவனித்து அதைக் களைவதற்குத்தான் முயலவேண்டும். பிறர் குற்றத்தைக் காணலாகாது. உலக மக்கள் அனைவரையும் நாம் சொந்தமாகக் கருதினால் பேத புத்தி அகலுகிறது. ஒற்றுமையை வளர்ப்பது ஞானம்; வேற்றுமையைக் காண்பது அக்ஞானம். பிறர் குற்றம் காணாமல் இருக்கப் பழகினால் நமது மனம் மேலான நிலையை அடைகிறது. சுத்தமடைந்த மனத்தில் தெய்வ சான்னித்தியம் நன்கு பிரதிபலிக்கிறது. "சுத்த மனமும் சுத்த சைதன்யமும் ஒன்றே."

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்பது கோட்பாடு. ஆகவே ஒவ்வொருவரும் தன்னைத்தான் திருத்தி அமைத்

துக்கொள்ளவே முயலவேண்டும். இத்தகைய அரிய பெரிய கருத்தை நமது அன்னை நமக்குக் கருணைகூர்ந்து புகட்டியுள்ளார்.

மனிதனுடைய இவ்வுலக வாழ்க்கைக்கு உணவும் உடையும் இன்றியமையாதவை. மக்கள் அனைவரும் இவ்விரண்டையும் பெறுவதற்காகத்தான் மிகவும் பாடுபடுகின்றனர். போதுமான அளவு உணவும் உடையும் இல்லாது துன்பப்படுபவர் எத்தனையோ பேர் இருக்கின்றனர். உண்ண உணவில்லாது துன்பப்படுகிறவர்களைக் காண நம் அன்னையின் மனம் சகியாது. தெய்வமே தமது துணைவராகத் திருவுரு தாங்கி வந்திருப்பதை உணர்ந்தும் பிறருக்கு உணவு வழங்கும் விஷயத்தில் மட்டும் அவரையும் மிஞ்சி நிற்கின்றார் நம் அன்னை. எல்லாவற்றிற்கும் மேலாகத் தம் பெருங்கருணையினால் அனைவரையும் ஈர்த்து ஆட்கொண்டார். சிஷ்யர்களிடத்தில் அவர் வைத்திருந்த பேரன்பை எதனுடனும் ஒப்பிட முடியாது. "தாயினும் சாலப்பரிந்து" என்னும் கோட்பாட்டைத்தான் மேற்கோளாகக் காட்ட முடியும். ஒருமுறை சிஷ்யர்களுக்கு இரவு உணவு கொடுக்கும் விஷயம் பற்றிப் பேச்சு வந்தது. இரவில் அதிக உணவு கொடுத்தால் அது அவர்களுக்கு ஆத்மஞானப் பயிற்சிக்குத் தடையாகும் என்று பகர்ந்தருளினர் பரமஹம்சர். ஆனால் இத்தெய்வத்தாயோ "அதைப் பற்றித் தாங்கள் கவலைப்படவேண்டாம், இந்த ஒரு விஷயத்தை மட்டும் என்னிடம் விட்டு விடுங்கள், நான் பார்த்துக்கொள்கின்றேன்" என்று கூறிவிடுகின்றார். தன்னை நாடிவருபவர்களின் பசிப்பிணியை முதலில் அகற்றிய பின்னரே வேண்டிய அறிவுரைகளைக் கூறுவார். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது பழமொழி. காசியில் மாதா அன்னபூரணி காசி விசுவநாதருக்கு அன்றே உணவு வழங்குகின்றாள்!

உடைமையும் வறுமையும் புறத்தில் இல்லை. அவரவர் மன பரிபாகத்தில்தான் உள்ளது. பரமபக்தரான நாகமஹாஷயர் குடும்ப சம்ரட்சணைக்கே பொருளின்றி வறுமையில் இருந்தார். ஆனால் அவர் மனத்தில் தாம் வறியன் என்று கருதியது கிடையாது. அதேபோன்று பலராம்போஸ் என்ற செல்வந்தர் மிகுந்த செல்வம் உடைத்திருந்தார். அதற்கிடையில் தாம் செல்வந்தர் என்ற அகந்தை அவருக்கு இல்லை. பக்தர்கள் அனைவரின் நலத்தையும் கவனிக்க அவரது செல்வம் செலவழிக்கப் பட்டது. இக்காலத்தில் எத்தனையோ செல்வந்தர்கள் செல்வம் மிக உடைத்திருந்தும். மனதில் அச்செல்வ உடைமையைப்பற்றிய நினைவின்றி வறுமையை வரவழைத்துக்கொள்கின்றனர். எளியவர்க்காக மருத்துவமனைகள், பயிற்சிக்கூடங்கள் மற்றும் பல இலவச வசதிகள் செய்துகொடுத்தால் அவற்றையும் உபயோகப்படுத்தவே அச்செல்வந்தர்கள் முன் வருகின்றனர். வசதி குறைந்த எளியவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இடங்களில் செல்வந்தர்கள் உதவி பெற விரும்பினால் அக்கணமே அவர்கள் வறுமை நிலையை எய்தியவர் ஆவர். அவர்கள் எவ்வளவு செல்வம் உடைத்திருந்தும் பிரயோஜனமில்லை. இதுவே உடைமையில் வறுமை நிலை. தன்னிடத்துள்ளதைப் பிறருக்குக் கொடுத்துப் பழகும் அளவுதான் மனம் விரிவடைகிறது. பிறருக்கு நாம் எதைக்கொடுக்கின்றோமோ அதுவே நமக்கு வளர்கின்றது. கொடுக்கக்கொடுக்க மனம் விரிவடைகின்றது. வறிய மனப்பான்மை உடையவர்க்குக்கூட கருணை காட்டுகின்றார் நமது காருண்யத்தாய். அத்தகையவர்க்குக்கூட வேண்டியதைக் கொடுக்கும்படி புகட்டுகின்றார். ஆனால், செல்வம்படைத்தவர்கள் தமக்குள்ள செல்வத்தை மற்றவர்க்கும் உபயோகப்படும்படி கொடுத்து நல்வாழ்வு வாழ்ந்தால்தான் சேகரித்த செல்வத்தினால் பயன் உண்டாகும் என்பதை உணரவேண்டும். இல்லையெனில் அவர்கள் செல்வத்தை முறையாக உபயோகிக்கத் தெரியாதவர்கள் ஆவார்கள். நமது வாழ்க்கை இம்மைக்கும்மறுமைக்கும்உபயோகமுள்ளதாக இருக்க மனமாரக்கொடுத்துப் பழகவேண்டும்.

வீரப்பெண்மணி

நமது தெய்வத்தாய் கருணைக்கடலாக இருப்பதற்கிடையில் வீரப்பெண்மணியாகவும் எப்படி விளங்கினர் என்பதனையும் நோக்கலாம். பெண் ஒருத்தி கருணைகாட்ட வேண்டிய இடத்தில் கருணையும், கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிப்பும் உடையவளாக இருந்தால் தான் இவ்வுலகில் செவ்வனே வாழ்க்கை

நடத்த முடியும் என்பதை அவர் விளக்கிக் காட்டுகின்ருர். ஒருமுறை கெட்ட எண்ண முடைய கயவன் ஒருவன் அன்னையை நெருங் கும்போது முதலில் அவனிடமிருந்து தப்பிக்க எத்தனிக்கின்ருர். பின்னர் திடீரென்று வீரா வேசத்துடன் அவனைக் கீழே தள்ளி நெஞ்சில் காலை வைத்து மிதித்து அவனை நையப்புடைக் கின்ருர். "மோதி மிதித்துவிடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" என்று பாரதியார் கூறுகின்ருர். இத்தகைய செயலை இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மேற் கொள்ள வேண்டுமென அன்னையினல் காட் டப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் கருணை காட்டுதல் தகாது. தீயவர்களைத் தண் டித்துத் திருத்துவதும் அவருடைய அளப்பரிய கருணையினுல் நடக்கின்றது.

அன்னை கல்கத்தா நகரில் நகப்பத்தில் வாழ்ந் திருந்தபோது அவரைத் தரிசிக்க எத்தனையோ பக்தர்கள் வருவார்கள். அவர்களில் பலதரப் பட்டவர்களும் இருப்பார்கள். பக்தி நிறைந்த வயது முதிர்ந்த மாதர் சிலருடன் இளம் வய துள்ள பெண்மணிகள் சிலர் நவநாகரிகமாக உடையணிந்து, வாசனைத் திரவியங்களை உபயோகித்துத் தம் உடலை அலங்கரித்துக் கொண்டு வேடிக்கை பார்க்கும் நோக்கத்துடன் வருவார்கள். அவர்களைக் கண்டு மனம் கனிந்து அன்னை அறிவுரை வழங்குவார். அவர்கள் மனம் புண்படாதவாறு "அழிந்து பட்டுப் போகிற இவ்வுடலுக்கா இத்தகைய வாசனைத் திரவியங்களும், இத்தகைய அலங்காரமும்" என்று கூறுவார். நாற்றம் எடுத்து அழிந்து போகும் தன்மை உடைய இந்தச் சரீரத்தின் மீது இத்தகைய அபிமானம் வைக்கலாகாது என்னும் உண்மையை அவர்கள் மனம் நோகா தவாறு அவர் எடுத்துரைப்பார். அருளோடு கூடிய அவருடைய உபதேசமொழிகள் அந்நவ நாகரிகப் பெண்மணிகளின் மனத்தில் ஆழப் பதியும். தம்மை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் மனதில் உறுதி பூண்டு மீண்டும் அன்னையைக் காண வரும் போது அகம், புறம் இரண்டிலும் திருந்தி அமைந்தவர்களாகக் காணப்படுவர். அன்னை யின் போதனையைக் கடைப்பிடித்து நடக்காத தனல்தான் நவநாகரிகம் என்னும் பெயரால் இன்று நாட்டிற்குப் பல அழிவுகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படியே சென்று கொண்டு இருந்தால் நாம் மனநிம்மதியின்றி வாழ்வதோடு பிறரும் மனநிம்மதியுடன் வாழ முடியாது. ஆகவே இக்காயம் அழியும் தன்மை யுடையது என்பதை நினைவில் கொண்டு எளிய வாழ்வும் உயர்ந்தநோக்கமும் கொண்டு வாழ்க் கையை நடத்தவேண்டும். அன்னையின் அருள் உபதேசமொழிகளில் ஏதாவது ஒன்றையாயி னும் கடைப்பிடித்து ஒழுகுவதே அன்னைக்கு நாம் செய்யும் வழிபாடாகும்

அன்னையின் அருள் மொழிகள் ஒவ்வொன் றும் அன்ருட வாழ்க்கையில் நாம் எங்ஙனம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை நன்கு உணர்த்துகின்றன. சின்னஞ்சிறிய பொரு ளாக இருந்தாலும் அதை முறையாக உபயோ கிக்கத் தெரிந்து கொள்ளவேண்டும். சிறிய காரியங்களை முறையாகச் செய்பவன்தான் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும். வீட் டைப் பெருக்கிச் சுத்தப்படுத்த உதவும் துடைப்பம் ஒன்றை மிகவும் சாதாரணப்பொரு ளாக நாம் கருதுவோம். ஆனல் அதை உப யோகப்படுத்துவதில் நாம் கவனிக்க வேண்டிய முறையை நமக்கு அன்னை புகட்டி யுள்ளார். ஒருமுறை சரியாகக் கட்டப்படாத சிறிய துடைப்பம் ஒன்றை வைத்து ஒரு பெண் அன்னையின் இருப்பிடத்தைக் கூட்டிச் சுத்தப் படுத்திக் கொண்டிருந்தாள். அதிலிருந்து துடைப்பக்குச்சிகள் ஆங்காங்கே சிதறின. அதனைக் கண்ட அன்னை அக்குச்சிகளை எல் லாம் ஒன்று சேர்த்து இறுகக்கட்டி அதை எங்ஙனம் உபயோகப்படுத்த வேண்டுமென் பதைக் காட்டிக் கொடுத்தார்.

பிறர் குற்றம் காணுத பேரியல்பும், உயிர் வகைகளிடத்து இரக்கச் சிந்தனையும், பரந்த மனமும், எடுத்து வழங்கும் வள்ளல் தன்மை யும், கரைகாணுக் கருணையும், தீமையை எதிர்த்து நின்று வெல்லும் ஆற்றலும் சகல சக்திகளும் படைத்து மன்னுயிர் யாவிலும் தன்னுயிர் கண்டு மாபெரும் கருணையின் மாட்சிமை பூண்டு வழிநடத்தும் இத் தெய் வத்தாய் ஸ்ரீ சாரதாதேவியார் ஆவார். இவர் தாம் உயர் கல்வி அளிக்கும் உத்தமத்தாய் ஆகின்ருர்.

ஸ்தல யாத்திரை

(சுவாமி குஹானந்தர்)

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி தான் யாதினினும் அரிது" என்பது ஆன்றோர் வாக்கு. அத்தகைய மனிதப்பிறவி அடைந் திருந்தாலும் தாம் ஆன்ம சொரூபம், இந்த உடல் அதற்கு ஒரு ஆலயமாக அமைந்துள் ளது என்பதை அனுபவ பூர்வமாக அறிகின்ற வர்கள்தாம், மனிதப் பிறவியின் பயனை அடைந்தவர்கள் ஆகின்றனர். அத்தகைய பயனை அடைவதற்கு நம் மகான்கள் பலவழி முறைகளை வகுத்து வைத்து "நான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்று பெருங் கருணையோடு வழிகாட்டிப் போயுள்ளனர். அத்தகைய சாதனங்களில் முக்கியமானவை ஸ்தல யாத்திரையும், தீர்த்தாடனமும் ஆகும். பழங்காலம்தொட்டுப் பெரியவர்கள் பலர் தீர்த்த யாத்திரை, ஸ்தல யாத்திரை செய்துள்ளார்கள். மகான்கள் ஸ்தலங்களுக் குச் செல்லும்போது அவர்கள் மூலமாக அங்கு அருட்சக்தி அதிகம் பெருகுகின்றது. அத்த கைய இடங்களில் இன்றும் அருட்பெருக்கை அங்குச் சென்று வழிபடுபவர்கள் அவரவர்கள் பக்குவத்திற்கேற்ப உணரமுடியும். சென்ற நூற்றூண்டில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தந்தை க்ஷுதிராம் சட்டர்ஜியானவர் கல்கத்தாவில் இருந்து கால்நடையாகவே இராமேஸ்வரம் வந்து போனூர். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் காசிக் கும், பிருந்தாவனத்திற்கும் ஸ்தல யாத்திரை சென்று வந்துள்ளார். அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரையும் ஸ்தல யாத்திரை செய்ய வேண்டும் என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லி யிருந்தார். அதை நிறைவேற்ற அன்னையாரும் இராமேஸ்வரம் சென்று வழிபாடு செய்து வந் தார். சமயாச்சாரியர்கள் நால்வர், ஆழ்வார்கள் பல ஸ்தலங்களில் தங்கி வழிபட்டுப் பாடல் கள் பாடி, மக்கள் மனத்தில் பக்தியையும், ஸ்தலங்களில் அருட்சக்தியையும் வளர்த்துள் ளார்கள். அத்தகைய கோயில்கள் தஞ்சை ஜில்லாவில்தான் அதிகமாக இருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் உள்ள முக்கியமான கோவில்களைத் தரிசிக்கச் சில அன்பர்கள் விரும் பினர்கள். தஞ்சையில் உள்ள அன்பர் ஒரு வருக்கு பத்து நாட்களுக்குள் முக்கியமான கோவில்களைத் தரிசனம் செய்ய ஒரு திட்டம் தயாரித்து அனுப்பும்படி எழுதினேம். அவர் கள் பல தடவை அந்தத் தலங்களுக்குச் சென் றிருந்ததால் சுமார் நாற்பது முக்கிய ஸ்தலங் களைத் தரிசிக்க நல்ல முறையில் ஒருதிட்டம் தயாரித்து அனுப்பி வைத்தார்கள்.

29—1—84 அன்று மாலை இந்த யாத்திரைக் காகப் பத்தொன்பது அன்பர்களும் எட்டுத் தாய்மார்களுமாகத் திருப்பராய்த்துறை தபோ வனம் வந்து சேர்ந்தார்கள். மாலை பிரார்த்தனை, உணவிற்குப் பிறகு ஸ்ரீமத் சுவாமிஜி அவர்கள் யாத்திரை செல்பவர்களுக்கு அருளுரையும் ஆசியும் கூறினர்கள். அதன் சாரம்—"ஆன்மீக வாழ்க்கையில் ஸ்தல யாத்திரை முக்கியமான இடம் பெறுகிறது. தொன்றுதொட்டு எல்லாப் பெரியவர்களும் ஸ்தல யாத்திரை செய்துள் ளார்கள். ஸ்தல யாத்திரைக்கும், உல்லாச யாத்திரைக்கும் பெரிய வித்யாசம் உள்ளது. ஸ்தல யாத்திரை செய்பவர்கள் வீண்பேச்சுக் களும், குடும்ப சம்பந்தமான பேச்சுகளும் பேசாது பஜனை, கூட்டு வழிபாடு, நாமஜபம், போன்றவைகளில் முழு நேரத்தையும் செல விட வேண்டும். ஒவ்வொரு கோவிலிலும் தரி சனம் செய்து முடித்த பிறகு எல்லாரும் ஓரிடத் தில் அமர்ந்து ஐக்கிய வணக்கமும், தியான மும் செய்யவேண்டும். அவசர அவசரமாக ஓடிக் கோயில்களைப் பார்த்து விட்டு வருவது சரியன்று. இந்தப் பத்து நாட்களிலும் நல்ல முறையில் தெய்வீகச் சிந்தனையிலேயே இருந்து வருவீர்களானல் இது சிறந்த தவவாழ்வு ஆகும். இறைவனருளால் உங்கள் யாத்திரை இனிதே நிறைவேறி ஆன்மீக முன்னேற்றம் அடைவீர்களாக."

30—1—84 அதிகாலை 3½ மணிக்கே எல் லாரும் எழுந்து குளித்துவிட்டு ஸ்ரீமத் சுவாமிஜி அவர்களையும், குருதேவரையும் வணங்கிவிட்டு அதிகாலை 4-45 மணிக்குப் புறப்பட்டுக் காலை 6-30 மணிக்குச் சமயபுரம் மாரியம்மன் கோவில் போய்ச் சேர்ந்தோம். தேவிக்கு நன்கு அலங்கா ரம் செய்து எல்லாரும் நன்கு தரிசனம் செய்த

பிறகு கோயிலில் ஒரு பக்கத்தில் அமர்ந்து ஐக்கிய வணக்கமும், தியானமும் செய்தோம். கோவில் அதிகாரியே காலைச் சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்திருந்தார். அங்குச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு நேரே திருவானைக் கோவில் சென்றோம். பஞ்ச பூத ஸ்தலங்களில் அப்புலிங்கம் ஆகிய ஆனைக்கா ஐயனை ஐந்து ஐந்து பேராக உள் சென்று தரிசித்துப் பிறகு அகிலாண்டாஸ்வேரி அம்பிகையையும் நன்கு தரிசித்துவிட்டு, அம்பிகை ஆலயத்தில் சிறிய கூட்டு வழிபாடும் தியானமும் செய்துவிட்டுக் காலை 10 மணிக்கு ஸ்ரீ ரங்கநாதரைத் தரிசிக்கச் சென்றோம். அங்குள்ள மேனேஜர் கூடவந்து அனைவரையும் அழைத்துப்போய் அரங்கநாதனைத் தரிசனம் செய்வித்தார். பிறகு, கண்ணாடி அறை, கர்ப்பக் கிரகத்தின் மேலுள்ள தங்கவிமானத்தையும்,வரவாசுதேவரையும் பார்த்தபின் ரங்கநாயகியையும் தரிசனம் செய்தோம். பின் கல்லணை வழியாகக் காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் மத்தியில் காவிரி அன்னையின் எழிலைக்கண்டு தரிசித்தவாறு நாமாவளி சொல்லிக்கொண்டு பகல் 11-30 மணிக்குத் திருஞானசம்பந்தர் படைவென்ற திருக்காட்டுப்பள்ளிக் கோவிலை அடைந்தோம். அங்கிருந்து ஏழெட்டு மைல் தொலைவிலுள்ள திருப்பூந்துருத்தி என்னும் ஸ்தலத்திற்குச் சென்றோம். இங்கும் வழிபாட்டிற்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுத்தார்கள். இங்குதான் சம்பந்தரும் அப்பரும் முதன் முதலாகச் சந்தித்தார்கள். அப்பர் சுவாமிகள் இங்குத் திருமடம் அமைத்துச் சில காலம் தங்கி உழவாரப்பணியையும்,மக்களிடத்தில் பக்தியையும் பரப்பி வந்துள்ளார். அவர் அமைத்த மடம் இன்னும் எல்லாரும் காணும் நிலையில் உள்ளது. அவ்விரு மகான்களும் அங்குச் சேர்ந்து சில நாட்கள் இருந்ததை அந்த இடத்தில் எண்ணும்போது நம் மனத்தில் கசிவு ஏற்படுகிறது. அவ்விருவரின் தேவாரப் பதிகங்களையும் எல்லாரும் சேர்ந்து பாடிப் பிரார்த்தனை செய்தோம். அனைவரும் சிறிது நேரம் அந்த அருள் நிலையில் திளைத்திருந்ததாக உணர்ந்தோம். அங்கிருந்து நேர் தஞ்சைக்கு வந்து அன்பர் திரு ஷண்முகம் அவர்கள் அன்புடன் அளித்த விருந்தை உண்டு பிற்பகல் 4 மணிவரை ஓய்வெடுத்தோம். பிற்பகல் 4-30 மணிக்குத் தஞ்சைப் பெரிய கோவிலுக்குச் சென்றோம். ஒரே கல்லாலான பெரிய நந்தி, படியேறிப் பூஜை நடக்கும் பெரிய சிவலிங்கம், 216 அடி உயரத்துக்கு முழுதும் கல்லால் கட்டப்பட்ட கோபுரம் இவைகளைத் தரிசித்தோம். அங்குள்ள பழைய சிற்பக்கலை ஆராய்ச்சியின் முக்கிய அலுவலர் எங்கள் குழுவைக் கோபுரத்தின் மேல்மாடிக்கு அழைத்துச் சென்று அக்கோபுரத்தின் நுட்பங்களையும், அங்கு வரைந்துள்ள வர்ணச் சித்திரங்களையும் பெரிய மின் விளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு விளக்கிக் கூறினர். அவ்வளவு உயரமான கோபுரம் கல்லுக்கு கல் பொருந்த வைப்பதில் சுண்ணாம்பு போன்ற எவ்விதச் சாந்தும் இன்றி இணைப்புக்களை அவ்வளவு சரியாக உளியினால் செதுக்கி இணைத்துள்ளார்கள். அடிப்பகுதியில் அவ்வளவு அகலம் உள்ளதை வரிக்குவரி கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே இழுத்து வைத்தே கோபுரமாக அமைத்துள்ளனர். சிற்பங்கள் முதலிய எல்லாம் கருங்கல்லாலேயே செதுக்கி வைத்துள்ளனர். அதன் வெளிச்சுற்றுப் புறத்தில் சில சிற்பங்கள் வேலை முடிவுறாது அரைப்பகுதி, கால் பகுதி வேலை செய்ததோடு நின்று போய் இருக்கின்றன. கோபுரத்தின் உள்பகுதியில் சோழ, மராட்டிய காலத்து வர்ணச் சித்திரங்கள், அஜந்தா, எல்லோரா குகைகளில் வரைந்திருப்பது போன்று வரையப்பட்டிருக்கின்றன. இக் கோபுரம் கட்ட உறுதுணையாய் இருந்த கருவூரார் என்னும் மகானுக்கும் தனிக்கோவில் சுற்றுப்புறத்தில் கட்டியுள்ளார்கள். இவைகளைத் தரிசித்து விட்டு மாலை ஆறு மணிக்குத் திருவையாறு செல்லும் வழியில் உள்ள திருக்கண்டியூர் என்னும் ஸ்தலத்தைத் தரிசித்தோம். இங்குப் பிரம்மாவிற்குக் கோவில் உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதம் 13, 14, 15 தேதிகளில் மூலஸ்தானத்தில் சூரியகிரணம் படிகிறது. அப்போது சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. அங்கிருந்து மாலை ஏழு மணிக்குத் திருவையாறு போய்ச் சேர்ந்தோம். கோயில் மேலாளர் எங்களைவரவேற்று எல்லா இடங்களையும் சுற்றிக் காட்டிச் சிறந்த முறையில் தரிசனம்செய்துவைத்தார். இத்தலம் சைவ

சமயாச்சாரிகள் மூவராலும் பாடப்பெற்றது. அப்பர் சுவாமிகளுக்குக்கைலைக் காட்சிகாட்டிய இடம். தரிசனம் முடிந்த பிறகு மூவர் தேவாரங்களையும் பாடிக் கூட்டுவழிபாடு செய்தோம் இக்கோவிலின் பின்புறப்பிரகாரத்தின் தெற்கு, வடக்கு மூலையில் இருந்து ஒலி எழுப்பினால் அதனுடைய எதிரொலி மூன்று தடவை ஒலிக்கின்றது. சிவா, அம்பா, முருகா என்ற ஒலிகளை எழுப்பி அந்தச்சப்தங்கள் மூன்று தடவை அதே ஒலியை உண்டாக்குவதைச் செய்து காட்டினார்கள். தியாகராஜசுவாமிகள் சமாதிக் கோவிலையும் தரிசித்து விட்டுத் தஞ்சை வந்து காவல்துறை முதல்வர் அவர்கள் வீட்டில் இரவு சாப்பிட்டு விட்டு அவர்கள் ஏற்பாடு செய்திருந்த கல்யாண மண்டபத்தில் தங்கினோம்.

31—1—84 அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து குளித்துவிட்டு எல்லாரும் சேர்ந்து சிறு ஐக்கியவணக்கம் செய்துவிட்டு மன்னார்குடிக்குப் புறப்பட்டோம். காலை ஏழேகால் மணிக்கு ராஜகோபாலசுவாமி கோயிலுக்குச் சென்றோம். ஆங்குக் காவல்துறையினரும் கோவில் அதிகாரிகளும் கோவில் யானையைக் கொண்டு மாலை அணிவித்து வரவேற்றுமூர்த்திகளை நன்கு அலங்காரம் செய்வித்து எங்களுக்குத் தரிசனம் செய்து வைத்துக், கோவில் பிரசாதம் எங்களுக்குக் காலைச் சிற்றுண்டியாக அளித்தனர். அங்கிருந்து வேதாரண்யம் போகும் வழியில் தில்லை விளாகம் என்னும் ஊரில் நடராஜர் கோவிலையும் சுமார் நூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன் மண்வெட்டும் போது கிடைத்த பெரிய இராமர் சிலையையும் தரிசித்துவிட்டுப் பகல் ஒருமணிக்கு வேதாரண்யம் போய்ச்சேர்ந்தோம். சர்தார் வேதரத்னம் பிள்ளை அவர்கள் ஆரம்பித்த கஸ்தூரிபா கன்னியா குருகுலத்தில் இருந்த அப்பாக்குட்டி அவர்கள் தங்குவதற்கும் உணவிற்கும் ஏற்பாடு செய்தார்கள். யாத்திரைக் குழுவினர்கள் நன்கு உபசரிக்கப்பட்டார்கள். பகல் உணவு ஓய்விற்குப் பிறகு அந்த ஸ்தாபனத்தின் எல்லாப் பிரிவுகளையும் எல்லாருக்கும் காண்பித்தனர். ஆரம்பப்பள்ளி முதல் மேல்நிலைப்பள்ளிவரை சுமார் ஆயிரம் சிறுமியர் கல்விபயின்று வருகின்றனர். குருகுலத்தில் அறுநூறு பெண் பிள்ளைகள் இருந்துவருகின்றனர். அவர்களில் பெரும்பாலோர்க்கு உடை, உணவு, புத்தகம் எல்லாம் ஸ்தாபனத்திலேயே இலவசமாக அளித்துவருகின்றனர். பொருளாதார வசதிகள் ஸ்தாபனத்திற்கு அதிகம் இல்லை. இயற்கையின் இடையூறுகள் நிறைய இருந்தாலும் கைத்தறி, விசைத்தறி, ஊதுவத்தி, அச்சகம், நூல் வெளியீடு, விவசாயம், பசுப்பண்ணை போன்ற பல தொழில்களைக் கற்றுக்கொடுத்துக் குருகுலத்தைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். அவைகளையெல்லாம் பார்த்து விட்டு மாணவிகளுக்கு ஒரு சிற்றுரை ஆற்றிவிட்டு மாலைச் சிற்றுண்டிக்குப் பிறகு கோடிக்கரை செல்லும் வழியில் ராமர் பாதம் பார்த்தோம். கோடிக்கரை சென்று திரும்பும் வழியில் குழகர் கோயில் அகஸ்தீஸ்வரம் தரிசித்துக்கொண்டு மாலை ஏழுமணிக்கு வேதாரண்யம் கோவிலுக்கு வந்தோம். வேதங்கள் பூஜித்து மூடிய கதவைத் திருநாவுக்கரசர் திறக்கும்படி பாடியும், திருஞானசம்பந்தர் மூடும்படி பாடியும் இருவரும் சேர்ந்து தரிசனம் செய்த ஸ்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேரன்மாநாயனாரும் சேர்ந்து வழிபட்டுள்ளார்கள். அகஸ்தியருக்குச் சிவபெருமான் திருமணக்கோலம் காட்டிய ஐதிகப்படி மூலஸ்தானத்தில் லிங்கத்திற்குப் பின்னால் பார்வதி பரமேசுவரன் வடிவங்கள் இருக்கின்றன. அங்கும் தேவஸ்தான அதிகாரிகள் கூடவந்து நன்கு தரிசனம் செய்து வைத்தார்கள். அங்கும் தரிசனத்திற்குப் பிறகு ஐக்கிய வணக்கம் செய்துவிட்டுக் குருகுலம் சென்று இரவு உணவுக்குப்பிறகு அங்குத் தங்கி மறுநாள் காலை தை அமாவாசையாக இருந்ததால் 1—2—84 அதிகாலை நாலரை மணிக்கு எழுந்து வேதாரண்யம் சன்னதித் துறைக்குச் சென்று சமுத்திர ஸ்நானம் செய்தோம். வேதாரண்ய ஈஸ்வரர் தரிசனம் செய்தபின் குருகுலத்தில் காலைச் சிற்றுண்டி முடித்தோம். திருவாரூர் வரும் வழியில் எட்டுக்குடி முருகனைத் தரிசனம் செய்துவிட்டுப் பகல் பன்னிரண்டு மணிக்குத் திருவாரூர் தக்ஷிணாமூர்த்தி மடத்தில் பகல் உணவு சாப்பிட்டுவிட்டு அங்குத் தங்கினோம்.

திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லாருக்கும் முக்தி அளிக்கும் சிறப்புடையது அவ்வூர்.

சிவபெருமான் தில்லை வாழ் அந்தணர் என்று அடி எடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டர் தொகை பாடிய இடம். மனு நீதிச்சோழன் ஆட்சி புரிந்துள்ளான். இத்தகைய பல மகிமைகளை உடையது அவ்வூர். அங்குச் சிறப்பான வழிபாடு செய்தோம். அன்பர் ஒருவர் எங்களுக்கு இரவு இனிய விருந்தும் அளித்தார். இரவு தக்ஷிணாமூர்த்தி மடத்தில் தங்கி 2-2-84 காலை குளித்துப் பிரார்த்தனை முடித்துச் சிற்றுண்டி தயார்செய்து சாப்பிட்டுவிட்டு மதிய உணவும் கையில் எடுத்துக்கொண்டு கீழ் வேளூர், சிக்கல், திருநாகைக்காரோகணம் தரிசனம் செய்தோம். நாகூர் தர்க்காவும் பார்த்தோம். திருநள்ளாறு பகல் 12-30 மணிக்கு போய்ச்சேர்ந்தோம். நளன் இங்குச் சிவபெருமானைப் பூஜித்துச் சனியின் தொல்லைகள் தீர்த்துக் கொண்டதாக வரலாறு உள்ள ஸ்தலம். இங்கும் தரிசனம் செய்துவிட்டுக் கோவிலைச்சேர்ந்த கல்யாண மண்டபத்தில் பகல் உணவும் ஓய்வும் முடித்தோம். மாலையில் திருமருகல் வந்தோம். இங்குதான் திருஞானசம்பந்தர் விடம் தீர்த்த பதிகம் பாடினர். இதைத் தரிசித்து விட்டுத் திருப்புகலூர் வந்துசேர்ந்தோம். திருநாவுக்கரசு சுவாமிகள் தம் இறுதியில் இங்குதான் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். சுவாமிகள் இங்கு உழவாரப்பணி செய்யும் போது புல் செதுக்கும் இடமெல்லாம் பொன்னும், ரத்னமும் அவர் காட்சியில் தென்பட்டன. இவையெல்லாம் மண்ணுக்கும் கல்லுக்கும் ஒப்பானவை என்று அள்ளிக் குப்பையில் கொட்டினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு கையில் பொன்னையும் மற்றொரு கையில் மண்ணையும் எடுத்து இரண்டும் சமம் என்று கங்கையில் வீசியதை இஃது ஒத்திருக்கின்றது. சில நாட்கள் அப்பர் இங்குத் தங்கி இருந்து ஒரு சித்திரை சதய நன்னாளில் "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே," என்று வரும்பத்துப் பதிகங்கள் பாடிச் சிவனடி சேர்ந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தலைக்கு வைத்துப் படுத்திருந்த செங்கற்கள் பொன்கட்டிகளானதும் இவ்வூரில் தான். சம்பந்தர் பாடல் பெற்றதும் முருக நாயனர் பிறந்த இடமும் இத்தலமாகும். தரிசனம் முடிந்த பிறகு எல்லாரும் ஓர் இடத்தில் அமர்ந்து அப்பர் சுவாமிகளின் இறுதிப் பத்துப் பாட்டையும் பாடிப் பிரார்த்தனை செய்தோம். எல்லாருடைய மனத்திலும் நெகிழ்வும், கண்களில் நீர்மல்கியும் ஒரு பேரின்ப உணர்வுஉண்டாயிற்று. அங்கிருந்து வைஷ்ணவத் தலங்களில் முக்கியமானதிருக்கண்ணபுரம் தரிசனம்செய்து கொண்டு இரவு திருப்பனந்தாள் மடத்தில் சிற்றுண்டி அருந்தி அவர்கள் தமிழ்க்கல்லூரியில் தங்கினேம்.

3—2—84 அதிகாலை எழுந்து குளித்துக் காலை 6மணிக்குத் திருப்பனந்தாள் கோயில் சென்று வழிபாடு செய்தோம் இத்தலத்திற்குத் தலவிருக்ஷம் பனை மரம். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு சூரியனர் கோவில்வந்தோம். அங்கு ஒன்பது நவக்கிரகங்களுக்குத் தனித்தனி கோவில்கள் உள்ளன. இங்கிருந்து திருவிடைமருதூர் கோவில் சென்றேம். கோவில் நிர்வாக அதிகாரி எங்களை வரவேற்று எல்லாருக்கும் பானம் அளித்து உடன் வந்து தரிசனம்செய்து வைத்தார். மிகப் பெரிய கோவில். மாணிக்க வாசகருக்குச் சிவபெருமான் திருவடி சூட்டிய ஸ்தலம்.பட்டினத்நார், பத்ரகிரியார் சிலகாலம் இங்குத் தங்கியிருந்துள்ளனர். அங்கிருந்து திருப்புவனம் சென்றேம். இரணியனைக் கொன்ற நரசிம்ம மூர்த்தியைச் சாந்தப்படுத்தச் சிவபெருமான் சாந்தமூர்த்தியாக வந்த ஐதிகப்படி சிவபெருமான் இங்குச் சாந்தமூர்த்தியாக இருக்கிறர். இங்கும் வழிபாட்டிற்கு நல்ல வசதிகள் செய்து கொடுத்தனர். பிறகு திருநாகேஸ்வரம் தரிசித்து விட்டு ஒப்பிலி அப்பன் என்றும் உபசாலி அப்பன் என்றும் வணங்கும் வைஷ்ணவ ஸ்தலம் வழிபட்டுத் திருவாடுதுறை ஆதீனம்வந்துஅங்குப் பகல்உணவும் ஓய்வும்எடுத்தோம். மாலையில் திருவாடுதுறை கோயில்தரிசித்தோம். இங்கு அம்பிகைசிவபெருமானைப் பசுவடிவத்தில் வழிபட்டதால் ஆவடுதுறைஎன்றபெயர்வந்ததாகவும சம்பந்தர்வந்து வழிபடும்போது, திருமூலநாயனர் இங்கு 3000 ஆண்டுகள் தவம் செய்து திருமந்திரம் பாடியதாகவும் சொல்லப்படுகிறது. இரவு மாயூரம் சென்று மாயூரநாதரைத் தரிசித்துத் தருமபுரம் சென்று தேவாரப் பாடசாலையில் இரவு தங்கினேம்.

4—2—84 அதிகாலை எழுந்து பிரார்த்தனைச்

செய்தோம். சிற்றுண்டிக்குப் பின் வைத்தீஸ்வரன் கோயில் சென்றோம். அங்கு இறைவன் வைத்தீஸ்வரனாக இருந்து பிறவிப்பிணியையும், உடல் பிணியையும் தீர்த்துவைப்பதால் நிறைய மக்கள் வந்து வழிபாடு செய்கின்றனர். காலை பத்துமணிக்குமேல் சீர்காழிசேர்ந்தோம். "வேதநெறி செழித்தோங்க மிகுசைவத்துறை விளங்க" வந்துதித்த திருஞானசம்பந்தர் பிறந்த ஸ்தலம் அது. 'மூன்று வயதில் அம்பிகை ஞானப்பாலூட்டத் தோடுடையசெவியன் என்று ஞானசம்பந்தர் அங்குப் பாடினர். அப்பதிகத்தைப் பாடிக் கூட்டு வழிபாடு செய்தோம். பிறகு பகல் ஒருமணிக்குத் திருவெண்காடு சென்றோம். கோயில் பூட்டியிருந்ததால் பூம்புகார் சென்றோம். காவிரி கடலில் கலக்கும் இடத்தையும் பார்த்துவிட்டுத் திருக்கடவூர் போய்ச் சேர்ந்தோம். இது தர்மபுர ஆதீனத்தைச்சேர்ந்த கோயில். இங்கு இரவு தங்குவதற்கும் உணவிற்கும் ஏற்பாடு செய்து வைத்திருந்தார்கள். மார்க்கண்டர்க்காக மறலி உதைபட்ட ஸ்தலம் இது ஆகும். இங்கும் சிறந்த முறையில் தரிசனம் செய்து இரவு தங்கினோம்.

5-2-84 அதிகாலை ஸ்நானம், பிரார்த்தனை, சிற்றுண்டி முடித்துக்கொண்டு சிதம்பரம் சென்றோம். அங்கு அன்பர்கள் வழிபாட்டிற்கு ஏற்பாடுகள் செய்தனர். ஆகாசலிங்கமாகவும் தரிசிக்க முக்தி தரும் ஸ்தலமாகவும், கோவில் என்றாலே சிதம்பரம் என்னும் பெருமையுடயதாகவும், நால்வரால் பாடப் பெற்ற ஸ்தலமாகவும் மணிவாசகர், நந்தனர் முக்தி ஸ்தலமாகவும், பொற்கூரையுடையதாகவும் கனகசபையென்று அழைக்கப்படுவதாகவும் நடராஜனும், கோவிந்தராஜனும் பக்கம் பக்கம் எழுந்தருளியுள்ளதாகவும் விளங்குவது சிதம்பரம். அங்கு நல்ல தரிசனம் கிடைத்தது. மாலையில் திருமேகனம் தில்லைக் காளி கோவில் தரிசித்தோம். அன்பர் வீட்டிலேயே ஐக்கிய வணக்கம் நடத்திச் சிற்றுண்டி உண்டு இரவு தங்கினோம். சிதம்பர தரிசனமும் அன்பர் குடும்பத்தினரின் அன்பும் எல்லாருடைய மனத்திலும் மறக்க முடியாத பதிவை ஏற்படுத்தின.

6—2—84 அதிகாலை புறப்பட்டுக் கும்பகோணம் வந்து காவிரியில் குளித்துக் கும்பேஸ்வரர், சாரங்கபாணி, சுவாமிமலை தரிசித்துவிட்டுப் பகல் ஒரு மணிக்குத் தஞ்சைசேர்ந்தோம். ஆங்கு அன்பர் ஒருவர் வீட்டில் சிறப்பு விருந்துண்டு எல்லாரும் பிரியாவிடை பெற்று அவரவர் ஊர்களுக்குச் சென்றோம்.

இந்த யாத்திரையில் எல்லாரும் பெரும் பகுதி நேரத்தைப் பஜனை, நாமஜபம், பிரார்த்தனைகளில் கழித்தனர். எல்லாக் கோவில்களிலும் அமைதியாக நல்ல தரிசனமும், மற்ற வசதிகளும் நன்கு அமைந்திருந்தன என்ற மனமகிழ்ச்சி எல்லாருக்கும் உண்டாயிற்று. இதற்கு ஸ்ரீமத் சுவாமிஜி அவர்களின் ஆசியும், அருளுரையும், யாத்திரைக்கு வந்தவர்களின் ஆர்வமும் ஒத்துழைப்பும், தஞ்சை ஜில்லா காவல் அதிகாரிகளின் உதவியும் ஆங்காங்குள்ள அன்பர்களின் ஆர்வமும் இறைவனின் திருவருளுமே துணையாக இருந்தன.

செய்திகள்

நிகழ்பவை

வட ஆற்காடு ஜில்லா, மதினுப்பல்லியில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் 20—5—84 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 6-30 மணியிலிருந்து இரவு 8-30 மணி வரையில் அந்தர்யோக முறையில் நிகழ்ச்சிகளும், 21-5-84 திங்கட்கிழமை இரவு 7 மணியிலிருந்து 8 மணி வரை லக்ஷார்ச்சனையும் நிகழ்த்துவார்கள்.

திருப்பராய்த்துறை ஸ்ரீவிவேகானந்த வித்யாவனக் குருகுலத்தில் மே மாதம் 30-ஆம்தேதி புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய தேர்வு நடைபெறும். இது சம்பந்தமான விவரங்களைச் சித்திரை மாதத் தர்மசக்கரம் அட்டை இரண்டாம் பக்கம் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.

ஹிந்து பண்பாட்டுப் பயிற்சி முகாம்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 22-5-84 முதல் 28-5-84 வரை திருவேடகம் மேற்கில் அமைந்துள்ள விவேகானந்த கல்லூரியில் "ஹிந்து பண்பாட்டுப் பயிற்சி முகாம்" நடத்துவார்கள். மேல்நிலை-உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் (பெண்கள் உள்பட) இதில் கலந்து பயன் பெறலாம். இதில் சேர விரும்புவோர் "முதல்வர், விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு-624217, மதுரை மாவட்டம்" என்ற விலாசத்திற்கு எழுதி முழு விவரம் அறியலாம்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம் பிரசார விலை ரூ. 23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு ,, ... 21-00
மஹாபாரதம் ,, ... 8-00
இராமாயணம் ,, ... 5-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ... 6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ... 6-50
தினசரி தியானம் ,, ... 4-50
ராஜயோக விளக்கம் ... 12-00
கர்மயோக விளக்கம் ... 10-00
பக்தியோக விளக்கம் ... 9-00
ஞானயோக விளக்கம் .. 8-00
பரமஹம்சரின் பெருமை ... 6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ... 6-00
கடவுளின் வடிவங்கள் ... 6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1 ... 5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2 ... 5-50
விவேகானந்த விவரணம் ... 4-00
சகோதரி நிவேதிதை ... 3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ... 3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம் ... 3-00
அனுஷ்டான வேதாந்தம் ... 3-00
எதிர்கால இந்தியா ... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ... 3-00
பஜனைப்பாடல்கள் ... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ... 2-50
தாயுமானவர் இயற்றிய
- கருணாகரக் கடவுள் விரிவுரை ... 3-50
- பரிபூரணானந்தம் ஷை ... 3-00
- சின்மயானந்த குரு ஷை ... 3-00
- ஆனந்தமானபரம் ஷை ... 3-00
- சுகவாரி ஷை ... 3-00
- மௌனகுரு வணக்கம் ஷை ... 3-00
- எங்கும்நிறைகின்றபொருள் ஷை ... 2-50
- மலைவளர் காதலி ஷை ... 1-50
- பரசிவ வணக்கம் ஷை ... 1-00

கண்ணன் என்னும் கடவுள் ... 2-50
அறம் வளர்த்த நம்பி ... 2-50
விரதவீரர் பீஷ்மர் ஷை ... 2-50
சந்நியாசி ... 2-50
ஹரிச்சந்திரன் (நாடகம்) ... 2-00
தவப்புதல்வர்கள் ஷை ... 2-00
பாதுகாபட்டாபிஷேகம் ஷை ... 1-75
விபீஷணன் சரணாகதி ஷை ... 1-50
பரமஹம்சர் பாமாலை ... 1-50
காயத்ரீ ... 1-50
நன்மக்களைப் பெறுதல் ... 1-50
மாணாக்கன் ... 1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ... 1-25
சைவன் யார்? .., 1-25
*ஆலய வழிபாடு ... 1-25
*ஆத்ம சக்தி ... 1-25
*மனிதனது நிஜசொரூபம் ... 1-25

இறைவணக்கம் ... 1-00
குழந்தைகளின் கவிக்கூடம் .. 1-00
இராவண தத்துவம் ... 1-00
வாலி மோட்சம் (நாடகம்) ... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) ... 1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்) ... 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்) ... 1-00
பிரஹ்லாதன் (நாடகம்) ... 1-00
தபோபலன் (நாடகம்) ... 1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம் ... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும் ... 1-00
நோய்க்கு இடம் கொடேல் ... 1-00
*சக்தி தத்துவம் ... 0-90
*சூரியநாராயணன் ... 0-75
தெய்வீக மகிமைகள் ... 0-75
*முருகக்கடவுள் ... 0-75
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ... 0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ... 0-60
*கணபதி ... 0-60
விஷ்ணு தத்துவம் ... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது? 0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்) ...10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ... 0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை ... 0-30
கந்தர் அநுபூதி ... 0 25

The Bhagavad Gita (11th Imp.) ...24-00
Sri Lalithambiha Sahasranama Stotram 15-00
The Indian National Education ...10-00
Tirukkural (with plastic cover) ... 8-00
Ramakrishna lives Vedanda ... 8-00
Mahaveer Sri Hanuman ... 7-75
The Bhagavad Gita (Small Size) ... 6-00
Man Making Message ... 7-00
Ramayana (with plastic cover) ... 7-00
Mahabharata ,, ... 6-00
Daily Divine Digest (DELUXE) ... 6-00
Daily Divine Digest (Ordinary) ... 4-00
Sri Krishna-The Manifest Divinity ,, ... 6-00
Facets of Brahman or The Hindu Gods ... 5-00
Sri Vishnu Sahasranama Stotram ... 4-00
Siva Sahasranama Stotram ... 3-50
Bheeshma The Superman ... 3-50
*Introducing the Gita ... 2-00
Holy Bible—In the Light of Vedanta ... 1-50
Reminiscences of Master Mahashaya ... 1-50
The Garland of Paraaparam ... 1-50
*Key to Higher Life ... 1-25
*The Student ... 1-25
The Teacher ... 1-00
The School ... 1-00
The Nursery School ... 1-00
Tat Tvam Asi ... 1-00

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.